கல்கி

KALKI 21.3.1971

40 காசு





she is the bearer of tradition...
IN
CENTURY SAREES
THE
CENTURY
SPG. & MFG. CO., LTD.
CENTURY BHAVAN,
WORLI, BOMBAY-25 DD.
Century — For 100% cotton textiles
Adroit[CM]



கொஞ்சுமிளம் தென்றலோ, குலவ வரும் மல்லிகையோ!

கம கமக்கும் மல்லிகை மணம். இளமை கொழிக்கும் மேனியெழில். இரண்டையும் உங்களுக்கு வழங்கவே ஜேய் அழகு சோப். வில்லை கரைந்தாலும் சுகந்தம் குறையாத அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. உங்கள் பைந்தளிர் மேனி என்றும் பதினாருகப் புதுமையுடன் பொலிய உபயோகியுங்கள் ஜேய்—ஜிகினைத் தாளுறை தரித்த ஒரே அழகு சோப்!

உங்கள் புத்தெழில் பெருக ஜேய் அழகு சோப் மணங்கவர் மல்லிகை மணம் கமழ்வது.



டாடா தயாரிப்பு.


உங்கள் சரியான
சுவைக்கு இணைந்த
நேர்த்தியான தேயிலை!
ப்ரூக் பாண்ட்
சூப்பர் டஸ்ட்
செழுமையான டிகாக்ஷன்
மேன்மையான சுவை
Super Dust Tea
Super Dust
ப்ரூக் பாண்ட் சூப்பர் டஸ்ட்
மிக நேர்த்தியான டீ
BB 6071


தாயிடமிருந்து மகளுக்கு வரும்
உட்வர்ட்ஸ் அறிவுரை

உங்கள் குழந்தையை ஆரோக்கியமுடன் குதூகலமாக வைத்திருக்க உறுதுணை

உட்வர்ட்ஸ்

கிரைப் வாட்டர்

தலைமுறை தலைமுறையாக புத்திசாலித் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்து வருவது உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர். குடல் வலி, புளிப்பு, உப்புசம், பல்முளைப்புக் கோளாறுகள் ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம் தருவது உட்வர்ட்ஸ்.




காத்துக் கொள்வீர் கண்டிப்புடனே.
எப்போதும் ஒரு புட்டி உங்கள் கைவசமிருக்கட்டும்



உட்வர்ஸ் கிரைப் வாட்டர் நூறு ஆண்டுகளுக்கு மேலாக புத்திசாலித் தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது.

AT. 30 TM





கோத்ரேஜின் புதிய வானிஷிங் கிரீம் ஸிந்தெல், உங்கள் வதனத்திற்கு புத்தம்புது ரோஜா மலரின் மெருகேற்றி, எழிலோங்கச் செய்கிறது. சருமத்தில் போட்டதே தெரியாமல் கரைந்து மறைந்து, பட்டுப் போன்ற பளபளப்பை மட்டும் ஒளிவிடச் செய்கிறது ஸிந்தெல்.

ஸிந்தெல், சருமத்தின் இயற்கையான ஈரத்தன்மையை நிலை நிறுத்தி, நாள் முழுவதும் நலியாத புதுமைச் சிலிர்ப்பினை அளிக்கிறது. அழகுப் படிமானமாகவோ, அப்படியேவோ உபயோகிக்கும்போது, ஸிந்தெல் தரும் தூய ரோஜா சுகந்தம் உங்களைக் கவர்ச்சிக் கன்னியாகக் கனியவைக்கிறது.

கொஞ்சிடும் அழகு மிஞ்சிட—ஸிந்தெல்
கோத்ரேஜின் புதிய வானிஷிங் கிரீம்.

Godrej

ULKA-GSC-2 TAM

கல்கி

பொருளடக்கம்

சாதாரண, பங்குனி 7 மார்ச் 21, 1971

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம் :	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00

ஈடுசெய்ய இயலாத இழப்பு

'ஸ்வராஜ்யா' ஆசிரியராக அரும் பணி ஆற்றிய பண்புச் செல்வர், அறிவுக் களஞ்சியம் ஸ்ரீ ஃபிலிப் ஸ்ப்ராட் அவர்கள் மறைந்துவிட்டார்.

லண்டனில் பிறந்த ஆங்கிலேயராகிய ஸ்ப்ராட் தமது இருபத்துநாலாவது வயதில் இந்தியாவுக்கு வந்தார். ஏதோ விட்டகுறை வந்து தொட்டதுபோல், இந்தியாவையே தமது தாயகமாக்கிக் கொண்டு விட்டார். இந்தியர்களைக் காட்டிலும் தீவிர உணர்வுடன் இந்திய விடுதலையில் ஆர்வம் கொண்டார். இளைஞரானபடியால் அதிதீவிர இடதுசாரியினராக இருந்தார் ஸ்ப்ராட். 'ராஜத் துரோக'த்துக்காகவும், மீரத் 'சதி'க்காகவும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். பிரிட்டிஷ் தேசத்தவர் ஒருவர் இவ்விதம் இந்திய நலனுக்காகப் போராடி பிரிட்டிஷ் ஆட்சியினரிடம் சிறைத் தண்டனை பெற்ற அதிசயத்தை என்னென்பது?

ஸ்ரீ எம். என். ராய் அவர்களின் சகாவாகத் தீவிர ஜனநாயகக் கட்சியில் பணியாற்றியவர் ஸ்ரீ ஸ்ப்ராட். சத்தியத்திலேயே நாட்டம் கொண்ட சுத்த ஆன்மாவாகிய ஸ்ரீ ஸ்ப்ராட், காலத்தின் போக்கில் தமது தீவிர வாதத்தை மாற்றிக் கொண்டார். படிப்பைப் போலவே பண்பிலும் தேர்ந்தவரான அவர் மெல்ல மெல்ல காந்தீயத்தையும், அதன் மறு அவதாரமான ராஜாஜியின் சுதந்திரக் கொள்கைகளையும் அந்தரங்கபூர்வமாக ஏற்றார். அவற்றை எழுத்தின் மூலம் பரப்பும் பொற்பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

ஸ்ரீ ஸ்ப்ராட் அவர்கள் ஆணித்தரமான கருத்துக்களை அழுத்தந் திருத்தமான, இலக்கியச் சுவை பொருந்திய அழகு நடையில் விளக்கும் விசேஷ வல்லமை பெற்றவர். இந்த எழுத்தாற்றலை, கருத்தாற்றலை பெங்களூர் 'மைஸிந்தியா'வின் ஆசிரியர் என்ற முறையில் ஒரு வெள்ளிவிழாக் காலத்துக்கும் அதிகமாக வெளிப்படுத்தி வந்தார். கடந்த ஐந்தாண்டுகளாக 'ஸ்வராஜ்யா' பத்திரிகையில் ஆசிரியர் பொறுப்பு வகித்து, கருத்துச் செறிந்த கட்டுரைகளை எழுதி வந்தார். சுதந்திரக் கட்சியின் கொள்கைச் சிறப்பையும், கம்யூனிஸ மாய மயக்குகளையும் தெள்ளத் தெளிய விளக்குவதில் அவர் பெற்றிருந்த ஆற்றலுக்கு இக்கட்டுரைகள் சான்று பகர்ந்தன.

ஆசிரியராக அவர் சீரிய பணி புரிந்த பெருமை ஒருபுறம். மனிதர், உண்மையான மனிதர், முழுமை வாய்ந்த மனிதர் என்ற முறையில் அவர் நடந்து கொண்ட அரும் பாங்கு மறுபுறம். ஒரு போதும் சமநிலை குலையாது, கர்மமொன்றே கருத்தாகச் சேவை செய்து, சிப்பந்திகள் அனைவருக்கும் மதிப்பு தந்து, அவர்களிடம் மதிப்புப் பெற்று விளங்கினார்.

'கல்கி' — 'ஸ்வராஜ்யா' குடும்பத்தினர் இன்று ஓர் உன்னத ஆசிரியரை இழந்ததாக மட்டும் கருதவில்லை; ஓர் உண்மை உறவினரை இழந்ததாகத் துக்கிக்கின்றனர். ஆறாத் துயரத்தில் ஆழ்ந்துள்ள ஸ்ரீமதி ஸ்ப்ராட் அவர்களுக்கும், அவரது நான்கு மக்களுக்கும் நமது மனப்பூர்வமான அநுதாபங்கள்.





மலர் 30

இதழ் 31

தேர்தல் முடிவுகள்

மக்கட் சபைத் தேர்தல் நேர்மையாக நடந்திருக்கிறதா என்பதில் ஸ்ரீ நிஜலிங்கப்பா சந்தேகம் தெரிவித்துள்ளார். ஸ்ரீ நிஜலிங்கப்பாவின் சந்தேகத்தில் நான் பூரணமாகப் பங்கு கொள்கிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் நான் இதைத் தேர்தல் என்றே கருதவில்லை. நான் மட்டுமின்றி, இன்னும் ஏராளமானவர்களும் எங்களது ஆட்சேபணைக்கான காரணங்களை வெளிப்படவே கூறி வந்திருக்கிறோம். இந்தத் தேர்தல் பெர்மிட்—லைசென்ஸ் ராஜ்யத்தின் துர்நாற்றத்திலிருந்து பிறந்த உப-பொருளேயாகும். பண பலமும், மனச்சாட்சியே இன்றிக் காரியம் செய்யும் போக்கும் மத்திய அரசாங்கத்திலும், அதனுடன் நட்புக் கொண்ட ராஜ்யங்களிலும் நமது அரசியல் வாழ்வை எப்படித் தகர்க்கின்றன என்பதை இத்தேர்தல் காட்டிவிட்டது. என் வார்த்தை அமங்களமாகத் தோன்றினாலும் சரி, என் உண்மை உணர்ச்சியை வெளியிட வேண்டுமாயின் நான் சொல்வது இதுவே: மனச்சாட்சியே யின்றி அவசரக் கோலமாக நடத்தப்பட்ட இந்த இடைத் தேர்தல் ஜனநாயகத்தின் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய வகையில் அதைப் படுகாயப்படுத்தி விட்டது. இனி பெரிய விபரீத காரியங்களைச் செய்யக் கம்யூனிஸ்ட் சீனமும், இந்திய அரசியலில் ஈடுபட்டுள்ள அதன் தோழர்களும் தூண்டுதல் பெறுவார்கள்.

சுதந்திரக் கட்சியானது அதிகாரம் பெறுவதற்காக உருவாக்கப்பட்டதல்ல. எவ்விதம், எத்தனை இடையூறுகள் இருப்பினும் அறிவு போதனையை விடாமல் செய்து கொண்டே இருப்பதுதான் ஆசிரியரின் பணியோ அவ்விதமே அரசியல் தலைவர்களுக்கும் மக்களுக்கும் அறிவு போதிப்பதே சுதந்திரக் கட்சியின் பணி.

மாயக் கொள்கையாலும், வோட் பலத்தாலும் தேசியப் பொருளாதாரத்தில் செழிப்பு ஏற்படுத்த முடியாது. உற்பத்திக்கும் விநியோகத்துக்கும் உரிய இயற்கை விதிகளை ஒழுங்காகப் பின்பற்றினால்தான் தேசியப் பொருளாதாரம் செழிப்படையும். இயற்கை விதிகளைக் குறித்த உண்மைகளைக் கண்டு பிடித்த ஸயன்ஸ் நிபுணர்கள், வோட் கணக்கைப் பார்த்துத் தமது சித்தாந்தங்களை உருவாக்குவதில்லை. நியூடன் தம் கருத்தைச் சொன்ன போது மற்ற ஸயன்ஸ் நிபுணர்கள் அதை ஏற்கவில்லை. ஆனால் 'வோட்' பலம் இல்லை என்பதால் நியூடன் தம் சித்தாந்தத்தை மாற்றிக் கொள்ளவில்லை. பிற்பாடு உலகமெல்லாம் நியூடன் சொன்னதே உண்மை என்று ஒப்புக் கொண்டது. இவ்விதமே, இயற்கையான நியதிகளுக்கு உட்பட்ட சக்திகளும் சூழ்நிலையுமே தேசப் பொருளாதாரத்தை வளப்படுத்தி உற்பத்தியைப் பெருக்கத் தூண்டும் என்பது அசைக்க முடியாத உண்மை. இதுவே உண்மை என்ற நிலை ஏற்படத்தான் செய்யும். ஏனெனில், இறுதியில் வெல்வது சத்தியம் ஒன்றே, அசத்தியமல்ல.

* * *

ஸ்ரீமதி இந்திரா காந்தியும், ராஜ்யங்களில் ஆட்சி செலுத்தும் அவரது கூட்டாளிகளும் தேர்தல் காலத்தில் அறிவித்த சலுகைகளை நிறைவேற்றும் சுமை அடுத்துவரும் சர்க்கார்களைத் தர்மசங்கட நிலையில் வைக்கும் என்று முன்பு 'ஹிந்து' பத்திரிகை எடுத்துக் காட்டியிருந்தது. தேர்தல் முடிவு இந்தத் தர்மசங்கடம் நேராமல் காப்பாற்றி விட்டது; சலுகைகளை அறிவித்தவர்களேதாம் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். பறந்து போன பட்சிகள் மீண்டும் மரத்துக்கே திரும்பி வருவது போல், சலுகைகள் அவற்றை அறிவித்தவர்களிடமே திரும்ப வந்து சேர்ந்துள்ளன. இந்தச் சலுகைகளை நிறைவேற்றத் தேவைப்படும் ஏராளமான பணத்தைத் திரட்டச் சர்க்கார்கள் வழி

கண்டாக வேண்டும். இதன் விளைவாக நமது ரூபாயின் மதிப்பு மேலும் குறையும்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், புதிதாக உயரும் செலவை ஈடு கட்டுவதற்குக் கள்ளுக் கடைகளைத் திறக்கக் கூடும். இப்படிச் செய்வது ஏழை மக்களை மேலும் வறுமையில் ஆழ்த்தும். இப்போதும் ஒரு சிலர் சட்டத்தை மீறிக் குடித்து வருகிறார்கள். இவர்களது சட்டவிரோதச் செயலைச் சட்டபூர்வமாக்குவதற்காகக் கள்ளுக் கடைகளைத் திறந்து, ஏழைகளில் பெரும்பகுதியினரைத் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்குவது சரியல்ல.

முன்பே சொன்னதை மீண்டும் கூறுகிறேன்: மக்கள் சபையைக் கலைத்து, இடைக் காலத் தேர்தல் நடத்துவதற்கான ராஷ்டிரபதி உத்தரவைப் பெறுவதில் பிரதமர் காட்டிய அவசரக் கோலம் காரணமாகப் பல ஒழுங்கீனங்கள் ஏற்பட்டு விட்டன. போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். வாக்காளர் பெயர்களைச் சேர்ப்பதிலும் நீக்குவதிலும் நேர்ந்த தவறுகளைச் சரிப்படுத்துவதற்கு அவகாசமேயில்லை. ஒழுங்கீனங்களைத் திருத்த முடியவில்லை. மக்களுக்கு மட்டுமின்றி, வாக்குச் சாவடி அதிகாரிகளுக்குங்கூடப் போதிய அறிவிப்பு இல்லாமலே தேர்தல் கமிஷன் பல பழைய வழக்கங்களை மாற்றிப் புது உத்தரவுகளைப் போட்டது. மத்திய சர்க்காரும், அதன் அதிமுக்கிய கூட்டாளியான தமிழ் நாட்டு அரசாங்கமும் தேர்தல் சமயம் பார்த்துப் பெரிய அளவில் மக்களில் சில சாராருக்கு விசேஷ சலுகைகள் அறிவித்து வோட்டுப் போடத் தூண்டியதை எல்லாப் பெரும் பத்திரிகைகளும் கண்டித்துள்ளன. இதை உண்மையில் லஞ்ச ஊழல் என்றே சொல்ல வேண்டும்.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)

ராஜாஜியின் கருத்துக்கள்

இப்போது நடந்த இடைத் தேர்தலுக்காகப் பத்து கோடி ரூபாய் செலவழிந்தது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் சர்க்காருக்கும், மக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்கும் ஆன செலவு இதைவிட மிக அதிகமாகும். 'தேர்தல்' என்று சொல்லப்படும் இந்த அவசரக் கோலக் காரியம் எந்த உண்மையையும் நிரூபித்ததாகக் கொள்வதற்கில்லை. பிரிட்டிஷ் ராஜ்யத்திலும், சுதந்திரத்துக்குப் பின்னும் நான் பல பொதுத் தேர்தல்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த 1971ம் வருடத் தேர்தலில் நடந்தது போன்ற வன்முறையை இதற்குமுன் கண்டதே இல்லை. இந்தத் தேர்தலை நடத்தியதால் தேசத்தின் அரசியல் நெறி பெருமளவுக்குச் சீர்குலைந்திருக்கிறது. இந்தச் சீர்குலைவைச் சரிப்படுத்தவே முடியாது என்று அவநம்பிக்கை கொள்ளாதிருப்போம்.

★

ஸ்ரீ தர்மவீரா கூறுவது மிகுந்த கவனத்துக்கு உரியது. அவர் சொல்கிறார்:

> அறிவும், தீர்க்கதிருஷ்டியும் வாய்ந்த அரசியல் தலைவர்கள் மறைந்தபின் உத்தியோக வர்க்கத்தின் மீது அரசியல்வாதிகளின் ஆதிக்கம் அதிகமாயிற்று. அந்தச் சமயத்தில் உயர் அதிகாரிகள் ஜனநாயகத்தில் உத்தியோக வர்க்கத்துக்குரிய உண்மைப் பங்கினைக் கருத்தில் கொண்டு, மேற்படி ஆதிக்கத்தை எதிர்த்து வழிகாட்டியிருக்க வேண்டும். அரசியல் யஜமானர்களின் கருத்துக்கு இசைவாகவே யோசனை சொல்லும் முகஸ்துதிக்காரர்களாக இருக்க மறுத்து, நடு நிலைமையில் யோசனை சொல்லத் தங்களுக்கு உரிமை உண்டு என்று அவர்கள் வற்புறுத்தியிருக்க வேண்டும். (இப்படிச் செய்யாததால் இன்று) அரசியல்வாதிகளுக்கு நடுநிலைமை வாய்ந்த யோசனை என்றாலே கசக்கிறது. அபூர்வமாக ஒருசிலரைத் தவிர மற்ற உயர் அதிகாரிகள் யாவரும் பழி வாங்கப்படுவோமோ என்று பயந்தும், சொந்த நலனை அடைய முற்பட்டும் நடுநிலைமையிலிருந்து விலகி அரசியல்வாதிகளுக்கு மேன்மேலும் அடிமைகளாகி வருகின்றனர். இதன் நிகர விளைவு: சர்க்கார் சரியான கொள்கைகளை வகுப்பதில் உத்தியோக வர்க்கம் புரிய வேண்டிய உதவி பாதிக்கப்பட்டு விட்டது. ஜனநாயகத்தில் உத்தியோக வர்க்கத்துக்குரிய முக்கிய பணிகளில் ஒன்று இவ்விதம் சரியான கொள்கை வகுக்க உதவுவதேயாகும்.
>
> உத்தியோக வர்க்கத்தினரின் பலவீனம், அடிமைத்தனம் இவை காரணமாக அவர்கள் ஆளும் கட்சி முடிவு எடுக்கும் கொள்கைகளை விரைவாக அமுல் செய்வதும் பாதிக்கப்படுகிறது. அவர்கள் தாமாக எந்த முடிவும் எடுக்கச் சக்தியற்றவராகி விட்டனர்.

ஸ்ரீ தர்மவீராவின் நியாயமான கவலை நம்மைச் சோர்வடையச் செய்யும் - ஆயின் அவர் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளையும் சொல்கிறார் :

> அரசியல்வாதிகளும் உத்தியோக வர்க்கத்தினரும் தங்கள் தொடர்பைச் சரிப்படுத்திக் கொள்ளவே முடியாது என்ற கட்டத்தை நாம் இன்னமும் அடையவில்லை. மிகுந்த தேச பக்தியுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் பணி ஆற்றும் ஆர்வத்துடன் பல இளம் உத்தியோகஸ்தர்கள் இன்னும் இருக்கிறார்கள். அதே போல் தீர்க்க தரிசனம் வாய்ந்த சில அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். எனினும், இத்தேசத்து ஜனநாயக அமைப்புக்கள் சிதிலமாகுமுன் தற்போது உண்டாகியுள்ள சங்கடம் விளைவிக்கும் போக்குகளை வெளிச்சமிட்டு எடுத்துக்காட்டுவது அவசியமாகிறது.

ஸ்ரீராமநவமி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் அறிக்கை:

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராமவென் றிரண்டெழுத்தினால்"

(கம்ப ராமாயணம்: சிறப்புப் பாயிரம் 14)

வருகிற ஸ்ரீராமநவமியன்று குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை ஒவ்வொருவரும் ஸ்ரீ இராமாவதாரத்தில் உள்ள (கம்ப ராமாயணத்தில் உள்ள) கீழ்க் காணும் பாக்களைப் பாராயணம் செய்ய வேண்டும்.

வெய்புனர் பூசமும் விண்ணு ளோர்களும்
தூயகற் கடகமும் எழுந்து துள்ளவே

சித்தரும் இயக்கரும் தெரிவைமார்களும்
வித்தக முனிவரும் விண்ணுளோர்களும்
நித்தரும், முறைமுறை நெருங்கி யார்ப்புறத்
தத்துறல் ஒழிந்துநீள் தருமம் ஓங்கவே

ஒருபகல் உலகெலாம் உதரத்துட் பொதிந்
தருமறைக் குணர்வரும் அவனை அஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை

(கம்ப ராமாயணம்: பால காண்டம் -
திரு அவதாரப் படலம்)

இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் அன்று முழுவதும் பட்டினி (சுத்த உபவாஸ) விரதம் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிச் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை எல்லோரும் ஏதாவது ஒரு சிறிய கோயில் சந்நிதியிலோ அல்லது பஜனை மடத்தின் முன்போ கூடி, ஸ்ரீராம நாம மந்திரத்தை ஐந்து நிமிஷம் ஜபம் செய்து, பிறகு, "ஸ்ரீராம் ஜயராம் ஜய ஜயராம்" என்னும் பதின்மூன்று அக்ஷரங்கள் கொண்ட மந்திரத்தை, ஒருவர் முதலில் சொல்ல, எல்லோரும் அதைப் பின்பற்றிச் சொல்லிக் கொண்டு, ஊரைச் சுற்றி வந்து, முதலில் ஆரம்பித்த இடத்தை அடைந்து அங்கு பத்து நிமிஷம் பஜனை செய்து, பூர்த்திசெய்ய வேண்டும்.

மறுநாள் காலை அதே இடத்தில் கூடி, ஸ்ரீ இராமாவதாரத்தில் (கம்ப ராமாயணத்தில்) உள்ள கீழ்க் காணும் பாக்களையோ அல்லது சம்ஸ்கிருதம் படித்தவர்கள் எவரேனும் இருந்தால் அவரைக் கொண்டு வால்மீகி ராமாயணத்தில் உள்ள ஸ்ரீராம பட்டாபிஷேக சர்க்கத்தையோ பாராயணம் செய்யும்படி செய்து, பத்து நிமிஷம் பஜனை செய்து, ஊர்ப் பொதுச் செலவில் ஏழை மக்களுக்கு அன்னம் பாலிக்க வேண்டும்.

மங்கள கீதம் பாட
மறையொலி முழங்க வல்வாய்ச்
சங்கினம் குமுறப் பாண்டில்
தண்ணுமை யொப்பந் தாவில்

பொங்குபல் லியங்கள் ஆர்ப்பப்
பூமழை பொழிய விண்ணோர்
எங்கள் நாயகனை வெவ்வேறு
எதிர் அபிடேகஞ் செய்தார்

மாதவர் மறைவலாளர்
மந்திரக் கிழவர் முற்று
மூதறிவாளர் உள்ளஞ்
சான்றவர் முதலீராட்டச்
சோதியான் மகனு மற்றைத்
துணைவரும் அனுமன்தானும்
நீதிலா இலங்கை வேந்தும் - பின்
அபிடேகஞ் செய்தார்

சித்திமொத்தனன் என்றோதுந்
திருநகர்ச் செல்வமென்ன
உத்தமத் தொருவன் சென்னி
விளங்கிய உயர்பொன் மௌலி
ஒத்து மெய்க்குவமைகூர
ஒன்றுமூவுலகத் தோர்க்குந்
தத்தம் உச்சியின்மேல் வைத்தது
ஒத்தெனத் தளர்வு தீர்ந்தார்

(கம்ப ராமாயணம்:
யுத்த காண்டம் - திரு அபிடேகப் படலம்)

'இராம பிரானின் சிரத்தின் மேல் பொன் கிரீடம் விளங்கியது கண்டு மூவுலகிலும் உள்ள மக்களும் தத்தம் சிரமேல் பொற்கிரீடம் வைக்கப்பட்டது போலவே எண்ணி மகிழ்ந்தார்கள்' என்பது இதன் கருத்து.

நாட்டில் உள்ள எல்லா மக்களிடையேயும் தெய்வ பக்தியும், நன்னடத்தையும் வேரூன்றி வளர வேண்டும் என்று எல்லோரும் ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.





உண்மையே வெல்லும் !

சோ. கிருஷ்ணமூர்த்தி

"நீரிற் குமிழி இளமை; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள்
நீரில் எழுத்தாகும்
யாக்கை............"

என்று மானிட வாழ்வின் நிலை உரைப்பார், குமரகுருபரர். நிலை யற்ற மனித வாழ்வு, பெறற்கரிய பெரும் நிலையடைய வழிகாட்டும் உயர் நெறிகளுள் தலைமையானது உண்மை நெறியாகும். தன்னை அறிந்து, தன் நிலையை உணர்ந்து மனித இனம் அழியாப் பேற்றி அடைந்திட வழிவகுக்கும் பெரு நெறி, இவ்வுண்மை நெறி.

உண்மை என்ற சொல்லின் உட் பொருள் 'உள்ளது' என்பதாம். உண்மை அழிவற்றது; என்றும் நிலை பெற்றது. விழி கூசும் ஒளிபடைத்த கதிரவனும், சில சமயங்களில் மேகங்களிடையே மறைந்திருந்போல, உண்மையும் பிற தீய சக்திகளால் மறைக்கப்படலாம். ஆனால் அந்நிலை வெகுநேரம் நீடிப்பதில்லை. உலகோர் உய்ய, பகலவன் மேகத் தடைகளினின்று நீங்கி ஒளிருந் தன்மைபோல, உண்மை சில நேரங்களில் தோற்பது போன்று தோன்றினும் இறுதியில் அதுவே வெல்லும்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்"

என்ற அமரகவி பாரதியார் வாக்கு, கடல் அலை போலத் தடை பல நேரினும், இறுதி வெற்றி உண்மைக்கே என்பதைத் தெளிவுறுத்தும்.

'உண்மை' என்றால் 'பொய் பேசலாகாது' என்பது மட்டுமல்ல. எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் தூய்மையோடிருத்தலே உண்மை நெறியாகும். மாந்தருள் தெய்வம் மகாத்மா காந்தியடிகள், உண்மையின் இம்மூன்று நிலைகளுக்கு மிகச் சிறந்த விளக்கம் அளித்துள்ளார்:

"நமது விருப்பு வெறுப்பற்ற, பாரபட்சமில் லாத, சிரத்தை – பக்தியுடன் கூடிய புத்திக்கு, எப்பொழுதும் அல்லது நாம் பார்க்கக்கூடிய வரம் புக்குள் அதிக நேரத்துக்கு உசிதமாயும் நியாய மாயும் தோன்றும் கருத்து நமக்கு உண்மைக் கருத்தாகும்."

"கடமை தூண்டவும், தனக்குத் தெரிந்த உண்மையை உள்ளபடியும், வேறு கருத்து தோன் றும் வகையில் கூட்டவோ குறைக்கவோ முயலா மலும் வெளியிடும் மொழியே, உண்மை மொழி."

"உண்மைக் கருத்தை விவேகத்துடன் செய் தலே உண்மைச் செயல்."

என்றும் உள்ளதாய், நிலைபெற்று, அழிவின்றி அமைந்துள்ள இவ்வுண்மையே, 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய், ஆனந்த பூர்த்தியாகி, அரு ளொடு நிறைந்து' விளங்கும் பரம்பொருள் என் றும் கூறலாம். இதனாலேயே அண்ணல் காந்தியடி களும், 'இறைவனே உண்மை' என்ற தமது கருத் தைப் பின்னர் 'உண்மையே இறைவன்', 'சத்தியமே கடவுள்' என்று மாற்றிக் கொண்டார். 'சச்சிதா னந்தம்' என்று இறைவனைச் சொல்லுகிறோம். 'சத்' என்றால், 'இருப்பது', 'உள்ளது' என்று பொருள். உண்மையொன்றே என்றும் அழிவின்றி



'உள்ளது'. உண்மையைக் காண்பதே 'அறிவு'. அவ்வுண்மை அறிவைக் குறிக்கும் சொல் 'சித்' ஆகும். உண்மை அறிவுடன் ஆனந்தம் எப்போதும் கூடும். உண்மை அறிவே ஆனந்தம். எனவே, இறைவனைக் குறிக்கும் 'சச்சிதானந்தம்' என்ற சொல்லின் உட்பொருள் உணர்த்தும் நெறி 'உண்மையே' ஆகும்.

" வாய்மைக் கொத்த தவமில்லை,
வசைபுறு பொய்நிகர் பாவமில்லை,
வாய்மையுடையோன் உளத்தினிலே
வதியும் என்றும் பரம்பொருளே."

என்பது கபீர்தாசரின் அருள்வாக்கு. உண்மையைக் கைக் கொண்டு தன் உளத்தை இறைவன் உறையும் கோயிலாக அமைத்துக் கொள்ளும் ஒருவர், வாழ்வில் வெற்றி பெறுவது உறுதி. இந்தக்கருத்து, ''உண்மையினும் உயர்ந்த சமயம் இல்லை'' "There is no religion higher than truth" என்ற அண்ணல் காந்தியடிகளின் கருத்தைப் பிரதிபலிப்பதாகும். அவர், உண்மை நெறியைத் தமது சமயம் என்று கூறியதோடல்லாமல், அச்சமயத்தின் மூலம் தாம் அடைய விரும்பும் இறைவனாகவும் உண்மை நிலையையே கொண்டார். அவ் வழியில் அவருக்குப் பல தடைகள் ஏற்பட்டபோதிலும் உண்மையையே கைக்கொண்டு வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற்றார். அண்ணலின் வாழ்வு, 'உண்மையே வெல்லும்' என்ற இலக்கணத்துக்குத் தக்கதோர் இலக்கியமாக என்றும் நின்று நிலவும்.

உண்மை எதுவோ அதுவே இறுதியில் நன்மையும் சிறந்ததும் ஆகும். கண்களால் காண்பனவற்றையும், காதுகளால் கேட்பனவற்றையும், உண்மை என்கிற உரைகல்லில் உரைத்துப் பார்த்துப் பகுத்தறிதல் வேண்டும். "Ye shall know the Truth and the Truth shall make you free" ''உண்மையை நீ அறிந்து கொள், அது உன்னைச் சுதந்திர மனிதனாக மாற்றும்'' என்பதுகிறித்துவப் புனிதநூல் பைபிள் கூறும் கருத்து. தொடர்ந்து வரும் தொல்லைகளை நீக்கி, அறிவு ஒளி பெற்று வாழ்வில் வெற்றி பெற ஒவ்வொருவரும் கைக் கொள்ள வேண்டியது உண்மை நெறியாகும்.

மனித உயிர் பரம்பொருளை



அடையமுடியாமல் 'மாயை' தடுப்பது போன்று, வஞ்சனை பொறாமை, சூது ஆகிய தீய குணங்கள், உண்மையை நாம் முழுவதும் உணர முடியாமல் தடை செய்கின்றன. இத்தடைகளை நீக்கி, உண்மையைக் காணுபவரே 'முழுதுணர்ந்த முனிவர்' என்றும், 'ஞானியர்' என்றும் உலகோரால் பாராட்டப் பெறுபவர். தன்னை உணர்ந்தோருக்குத் தரணியோரின் போற்றுதலைப் பெற்றுத் தரும் தன்மையுடையது உண்மை. தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

" எல்லா விளக்கும் விளக்கல்ல;
சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

என்று உண்மையின் சிறப்பை எடுத்துரைக்கிறார்.

'உண்மையே வெல்லும்' என்ற கருத்தை விளக்கும் கதைகளும் பாடல்களும் தமிழிலக்கியத்தில் நிரம்ப உண்டு. ஒரே ஒரு பொய் சொல்லுமாறு பலமுறை தூண்டப் பெற்ற அரிச்சந்திரன் இறுதிவரை உண்மையே கூறி விசுவாமித்திர முனிவரை வென்றமை, உண்மையின்

மூன்றும் பரிசு ரூ. 50 பெறும் கட்டுரை - எழுதியவர், திருச்சி, செயின்ட் ஜோஸப் கல்லூரி, III பி.ஏ. (இலக்கியம்) மாணவர்.

இறுதி வெற்றியை மிகச் சிறப்பாக விளக்கும். தங்களுக்குச் சேர வேண்டிய நாட்டைத் தர மறுத்த துரியோதனனையரை வஞ்சக எண்ணம் ஏதுமின்றி உண்மையோடிருந்து இறுதியில் வென்ற பஞ்சபாண்டவர்கள் கதை, இடையிலே அழிவது போன்று தோன்றினாலும் இறுதியில் உண்மையே வெல்லும் என்பதை இனிது விளக்கும். இவ்வாறு, வாழ்க்கைப் பாதையில் எத்துணைப் போராட்டங்கள் ஏற்படினும் உள்ளத்தே உண்மையோடிருப்பவர், அவற்றில் வெற்றி பெற்று, இப்பூவுலகில் புகழுடம்போடு நிலைத்து வாழ்வர் என்பதை,

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற வள்ளுவர் வாக்கு தெளிவுறுத்தும்.

உண்மைக்கு என்றும் அழிவில்லை. சூழ்நிலை காரணமாகச் சிறிது காலம் உறங்க நேர்ந்தாலும், என்றேனும் ஒரு நாள் அது வெளிப்பட்டுப் பொய்ம்மையை அழிக்கும்.

If you shut up truth and bury it under the ground, it will but grow and gather to itself such explosive power that the day it bursts through, it will blow up everything in its way."

—Emile Zola

"உண்மையைப் பூமிக்கடியில் புதைத்து வைத்தாலும் அது அழியாமல் வளர்ந்து கொண்டே இருக்கும்; நாளடைவில் அது மாபெரும் சக்தியாக உருப்பெற்றுத் தனது வழியில் தடையாக உள்ள அனைத்தையும் தாக்கி எறிந்து வெடித்து வெளிவரும்" என்ற மேலைநாட்டு அறிஞர் 'எமிலி ஜோலா'வின் கருத்து, பொய்ம்மை முதலியவற்றால் சூழப்படினும் இறுதியில் 'உண்மையே வெல்லும்' என்பதைச் சிறப்பாக எடுத்துரைக்கும்.

உண்மைக்குப் புறம்பான செயல்களால் ஒருவர் என்றும் உயர்வதில்லை. வேகமாக மாறிவரும் இன்றைய உலகில், உண்மையின் நிலை மிக உயர்ந்ததாகத் தோன்றாமல் இருக்கலாம். பிறர் வாழ்வை வஞ்சிப்போர் வளமோடு வாழ்கிறாற்போல வெளிப் பார்வைக்குத் தோன்றலாம். ஆனால் அது நிலையான உயர்ந்த வாழ்வல்ல. "காலமென்பது கறங்கு போற் சுழன்று, மேலது கீழா, கீழது மேலா மாற்றிடும்"போது உண்மை தனக்குரிய உயர் நிலையையும் உண்மையல்லாத மற்றவை அழிவையும் அடையும். காலங்கள் மாறினாலும் மாறாதிருப்பது உண்மையின் வெற்றி ஒன்றேயாகும்.

"Truth alone will endure all the rest will be swept away before the tide of time."

"உண்மை யொன்றே இறுதிவரை நிலைத்திருக்கும்; மற்றவை அனைத்தும் கால வெள்ளத்தின் அலைகளால் அடித்துச் செல்லப்படும்" என்பது அண்ணல் காந்தியடிகளின் வாக்கு. அனைத்துக்கும் மேலாக 'சத்தியமேவ ஜெயதே' என்னும் நமது நாட்டு இலட்சிய வாசகம் கூறும் கருத்தும் இதுவேயாகும்.

மகத்தான வெற்றி!

மேற்கிந்தியத் தீவுக்கு விஜயம் செய்துள்ள நம் இந்திய கிரிக்கெட் கோஷ்டியில் சர்தேசாய் முதல் டெஸ்டில் 212 ரன்கள் எடுத்து மகத்தான சாதனை செய்தார். 'சாதனைகள் தொடரட்டும்' என்று வாழ்த்தினேம். இப்பொழுது இரண்டாவது டெஸ்டில் மேலும் மகத்தான சாதனையைக் கண்டிருக்கிறார்கள், இந்தியக் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள். மேற்கிந்தியத் தீவுக் கோஷ்டியை இந்தியக் கோஷ்டியினர் டெஸ்டில் முதல் தடவையாக வென்றதனால், குவீன்ஸ் பார்க் டெஸ்ட் அதி முக்கியத்துவம் பெற்று விட்டது.

இந்த இரண்டாவது டெஸ்டிலும் சர்தேசாய் 112 ரன்கள் எடுத்துத் தம் திறமையை நிரூபித்திருக்கிறார். மேற்கிந்தியத் தீவு கோஷ்டியை முதல் இன்னிங்ஸில் 214 ரன்களுக்குள்ளே நம் இந்தியப் பந்து வீச்சு நிபுணர்கள் பிரசன்னாவும், பேதியும் சுருட்டி விட்டார்கள். முதல் தடவையாக டெஸ்ட் அநுபவம் பெறும் 'பேபி' காவஸ்கர் முதல் இன்னிங்ஸில் 65 ரன்களும் இரண்டாம் இன்னிங்ஸில் 67 ரன்களும் எடுத்தது பாராட்டுக்குரியது. மேற்கிந்தியத் தீவு பௌலர் நாரிகா (Norega) 95 ரன்களுக்குள் ஒன்பது விக்கெட்டுகளை வீழ்த்தியது ஓர் அற்புதம். அப்படியும் இந்தியக் கோஷ்டியினர் எண்ணிக்கை 352ஐ எட்டியது. இரண்டாவது இன்னிங்ஸில் வலது கண்ணில் அடிபட்டு பிளாஸ்டரோடு வந்து ஆடிய மேற்கிந்தியக் கிரிக்கெட் ஆட்டக்காரர் டேவிஸ் 74 ரன்கள் 'அவுட்' ஆகாமல் எடுத்தது குறிப்பிடத் தக்கது. நம் ஸ்டார் 'பௌலர்' வெங்கடராகவன் 96 ரன்களுக்குள் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி மேற்கிந்தியத் தீவு கோஷ்டியை 261 ரன்களுக்குள் மைதானத்தை விட்டு வெளியேற்ற உதவினர். இப்படி அற்புதமான சாதனையைக் கண்ட வெங்கடராகவன் அம்பயரிட மிருந்து தொப்பியைப் பிடுங்கி அநாகரிகமாக நடந்து கொண்டிருக்க வேண்டாம்.

போகட்டும், இளம் இந்தியக் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் இந்திய மண்ணுக்குப் பெரும்புகழ் சேர்த்திருக்கிறார்கள். நமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வோம். இன்னும் பல வெற்றிகளுக்கு இந்த வெற்றி அஸ்திவாரமாக அமையட்டும்.



காப்டன் வாடேகர்

இந்த புதிய பினகா டால்க்கில்

எல்லாமே புதுமை பேரைத் தவிர!





C I B A Cosmetics

என்னதான் புதுமை?


முற்றிலும் புதிய இருவித சோபித சுகந்தம்—ரோஸ் மற்றும் சாண்டல்வுட்—விந்தைமிகு சருமப் பராமரிப்பு கலவை—சிந்தைகவர் சுழல் வண்ணப் பெட்டி—இரு வெவ்வேறு வண்ணங்களில்.

புதிய பினகா டால்க் குடும்பத்தின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்கிறது. நாள் முழுக்க புத்திளம் உணர்ச்சி—கனிமம் சேர்ந்த மென்மைக் கலவையின் ஒய்யாரக் கவர்ச்சி. புதிய திருப்பம்—குடும்பத்துக்கு புதிய பினகா டால்க்கே மிகப் பொருத்தம்.

பினகா

டால்க்—குடும்பம் மொத்தம், விரும்பும் மெத்தம்

ULKA CTP-33 Tam



68

நானுமே இன்னும் வெற்றி பெறவில்லை. எங்கிருந்தோ உள்ளத்துக்குள் நாம் விரும்பாத கருத்துக்கள் புகுந்து தொந்தரவு செய்கின்றன. அவற்றை வாயிலுக்கப்பால் நிறுத்த முடியவில்லை. எவ்வளவோ முயற்சி செய்கிறேன். வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறேன். வேண்டாத எண்ணங்களை உள்ளே பிரவேசிக்காமல் கதவை அடைப்பதற்கு வழி உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒவ்வொருவனும் அதை, தானே காண வேண்டும்.

முனிவர்களும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தங்களுடைய அனுபவங்களைப் பாடியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இதற்கென்று ஒரு பிழையா மருந்தைத் தரவில்லை. ஆண்டவன் அருளைத் தவிர வேறொன்றும் வழியில்லை. பெரியோர்கள் ஜபம் செய்த மந்திரங்களும் நாமாவளிகளும் இருக்கின்றன. அந்த மந்திரங்களோடு அவர்கள் செய்த தவமும் அவர்களுடைய உள்ளத்தின் மாசற்ற பண்பும் கலந்து நிற்கின்றன. அவர்கள் உச்சரித்துப் பயன் பெற்றும் புனிதமாக்கியும் உள்ள மந்திரங்களையும் நாமாவளிகளையும் நாமும் உச்சரித்து ஆண்டவன் அருளைப் பெறுவோமாக. எல்லா மதங்களிலும் இதுவே சொல்லப்பட்ட உபதேசம். அதன் உண்மையை நான் அனுதினமும் காண்கிறேன். — சுயசரிதம்

ஒன்று நிச்சயம். கடவுளை நம்பினால் தான் வெற்றி பெறுவோம். வெறும் பேச்சில் பயனில்லை. உறுதியான பக்தி வேண்டும். ''கடவுள் வேண்டியதில்லை; சுத்தமான வாழ்க்கை வாழ்ந்தாலே போதும்; கடவுளைப் பற்றிக் கொள்கை ஏதுமில்லாமலே பரிசுத்த வாழ்க்கை வாழ முடியும்'' என்று பேசுவது இந்தக் காலத்தில் வழக்கம். அவர்களோடு நான் வாதாடி ஜயித்து நம்மையாளும் பராசக்தி ஒன்று உண்டு என்று அவர்கள் காணும்படி செய்ய என்னால் முடியாது.

என்னுடைய அனுபவத்தைத்தான் நான் சொல்ல முடியும். நம்முடைய கருத்துக்குள் அடங்காத ஒரு பராசக்தி உலகத்தை ஆள்கிறது என்று அசையாத நம்பிக்கை இல்லாவிடில் வாழ்க்கை பூரணத்தை அடையாது. இது என்னுடைய அனுபவத்தின் முடிவு. பக்தி இல்லாதவனுடைய கதி கடலினின்று வீசிச் சிதறிப் போன ஒரு நீர்த்துளியைப் போலாகும். அழிந்து போவது நிச்சயம். கடலோடு கலந்து நிற்கும் நீர்த் துளிகளோ கடலினுடைய பெருமையில் ஒவ்வொன்றும் பங்கு கொண்டு நின்று மக்களின் உயிருக்கு அமிர்தமான பிராணவாயுவைத் தருகின்றன.

(ஹரிஜன், 25 - 4 - 1936)



சென்னை நகரில் மட்டும்
42 கிளைகளையுடைய
ஒரே பாங்க்

அருகில் உள்ள எங்கள் கிளைக்குச் சென்று சேமிக்கத் தொடங்குங்கள்.

முறையான வருவாய்க்கான கணக்கு சொந்த வீடு கட்டிக்கொள்வதற்கான சேமிப்புத் திட்டம். ஓய்வு காலத் திட்டக் கணக்கு சேவிங்ஸ் பாங்க் கணக்கு ஃபிக்ஸட் மற்றும் ரெக்கரிங் டிபாஸிட் கணக்குகள் இவை தவிர மற்றும் பல சேமிப்புத் திட்டங்களும் உள்ளன.

அதிகப்படியான நன்மைகள்:

1. ரூ. 3000/– வரையில் கிடைக்கும் வட்டி வருமானத்திற்கு வருமான வரி விலக்கு உண்டு
2. ரூ. 1,50,000/- வரையுள்ள டெபாஸிட்டுக்கு சொத்து வரி விலக்கு உண்டு
3. டெபாஸிட் செய்யப்பட்டுள்ள தொகைக்கான வட்டி (நீங்கள் விரும்பினால்) மாதா மாதம் அளிக்கப்படும்.

இந்தியன் பாங்க்

(முழுவதும் இந்திய அரசாங்கத்துக்குச் சொந்தமானது)
தலைமைச் செயலகம்: 17 வடக்கு பீச் ரோடு, சென்னை-1

இந்தியாவின் முக்கியமான இடங்களில் 284 கிளைகள் உள்ளன.

NAS-182 TM

மோகினித் தீவு

அமரர் கல்கி

பத்தாம் அத்தியாயம்

மோகினித் தீவில், பூரணச் சந்திரனின் போதை தரும் வெண்ணிலவில் குன்றின் உச்சியில் உட்கார்ந்து அத் தம்பதிகள் எனக்கு அந்த விசித்திரமான கதையைச் சொல்லி வந்தார்கள். ஒருவரோடொருவர் மோதி அடித்துக் கொண்டு சொன்னார்கள். குழந்தைகள் எங்கேயாவது போய் விட்டு வந்தால், ''நான் சொல்கிறேன்'', ''நான் சொல்கிறேன்'' என்று போட்டியிட்டுக் கொண்டு சொல்லும் அல்லவா? அந்த ரீதியில் சொன்னார்கள்.


அழகே வடிவான அந்த மங்கை கூறினாள்: ''பாண்டிய குமாரி சிறையில் தன்னந் தனியாக இருந்த போது, அவளுக்குச் சிந்தனை செய்யச் சாவகாசம் கிடைத்தது. இராஜரீக விவகாரங்களும் அவற்றிலிருந்து எழும் போர்களும் எவ்வளவு தீமைகளுக்குக் காரணமாகின்றன என்பதை உணர்ந்தாள். தன்னுடைய கலியாணப் பேச்சுக் காரணமாக எழுந்த விபரீதங்களை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்து வருத்தப்பட்டாள். தான் ராஜகுமாரியாகப் பிறந்திராமல் சாதாரணக் குடும்பத்தின் பெண்ணாகப் பிறந்திருந்தால் இவ்வளவு துன்பங்களும் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டிராதல்லவா! என்று எண்ணி ஏங்கினாள். தன் காரணமாக எத்தனையோ பேர் உயிர் துறந்திருக்கத் தான் மட்டும் யுத்த களத்தில் உயிர்விட எவ்வளவோ முயன்றும் முடியாமற் போன விதியை நொந்து கொண்டாள். இப்படிப்பட்ட நிலைமையிலேதான் தாதி வந்து சோழ குமாரன் கொடுத்த முத்திரை மோதிரத்தைக் கொடுத்தாள். புவனமோகினிக்கு உடனே சுகுமாரன் செய்த வஞ்சனை நினைவுக்கு வந்து, அளவில்லா ஆத்திரத்தை மூட்டியது. அந்த ஆத்திரத்தைத் தாதியிடம் காட்டினாள். 'இந்த மோதிரத்தைக் கொடுத்தவரிடமே திருப்பிக் கொண்டு போய்க் கொடுத்து விடு! அவரைப் போன்ற வஞ்சகம் மிக்க ராஜகுமாரரின் உதவி பெற்றுக் கொண்டு உயிர் தப்பிப் பிழைக்க விரும்பவில்லை என்று சொல்லு. அதைக் காட்டிலும் இந்தச் சிறையிலேயே யிருந்து உயிரை விடுவேன் என்று சொல்லு. அந்த மனிதர் முத்திரை மோதிரத்தை ஒரு காரியத்துக்காக வாங்கிக் கொண்டு அதைத் துர் உபயோகப்படுத்தி மோசம் செய்துவிட்டு ஓடிப் போனார். அது சோழ குலத்தின் பழக்கமாயிருக்கலாம். ஆனால் பாண்டிய குலப் பெண் அப்படிச் செய்ய மாட்டாள் என்று சொல்லு! வஞ்சனைக்கும் பாண்டிய குலத்தினருக்கும் வெகு தூரம்!' என்று சொன்னாள்.

இவ்விதம் கூறியவுடனே சுகுமாரனுடைய குரலைக் கேட்டுத் திடுக்கிட்டாள். 'தாதி! அந்த வஞ்சக ராஜகுமாரனைப் பாண்டிய குமாரி ஒரு சமயம் காதலித்தாள். அந்தக் காதலின் மேல் ஆணையாக அவளைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வதாகச் சொல்லு! முத்திரை மோதிரத்தை உபயோகித்துத் தப்பித்துக் கொண்டு போகச் சொல்லு. இச்சமயம் தப்பித்துக் கொண்டு போனால், பிறிதொரு சமயம் நல்ல காலம் பிறக்கலாம்; இருவருடைய மனோரதமும் நிறைவேறக்கூடும் என்று சொல்லு!' என்பதாக அந்தக் குரல் கூறியது. அந்தக் குரல் புவனமோகினியின் மனத்தை உருகச் செய்தது. அவளுடைய உறுதி குலையச் செய்தது. தேவேந்திரச் சிற்பியின் சிற்ப மண்டபத்தில் கேட்ட குரல் அல்லவா

அது? பழைய நினைவுகள் எல்லாம் குமுறிக் கொண்டு வந்தன. தழுதழுத்த குரலில் பாண்டிய குமாரி கூறினாள்:

'தாதி! நான் இந்த வஞ்சக ராஜகுமாரனை என்றைக்கும் காதலித்ததில்லை என்று சொல்லு! சோழ நாட்டிலிருந்து தேவேந்திரச் சிற்பியிடம் சிற்பக் கலை கற்றுக் கொள்ள வந்த ஏழைச் சிற்பியையே நான் காதலித்தேன் என்று சொல்லு!' என்றாள். அடுத்த கணத்தில் சோழ ராஜகுமாரன் புவன மோகினியின் எதிரில் வந்து நின்றான். அவன் கூறிய விஷயம் பாண்டிய குமாரியைத் திகைக்கும்படி செய்து விட்டது.''

அந்த மங்கையின் நாயகன் இப்போது கூறினான்: ''பாண்டிய குமாரி, நான் சோழ ராஜகுமாரனைக் காதலிக்கவில்லையென்றும் இளஞ் சிற்பியையே காதலித்ததாகவும் கூறிய தட்சணமே சுகுமாரனுடைய மனத்தில் தான் செய்ய வேண்டியது என்ன என்பது உதித்து விட்டது. அது வரையில் புவன மோகினியை நேருக்கு நேர் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டிருந்தவனுக்கு இப்போது அவளைப் பார்க்கும் தைரியமும் பிறந்துவிட்டது. ஆகையினால் மறைவிடத்திலிருந்து அவள் முன்னால் வந்தான். 'கண்மணி! என்னைப் பார்த்து இந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்லு! நான் ராஜகுமாரனாயில்லாமல் ஏழைச் சிற்பியாக மாறிவிட்டால் நான் உனக்குச் செய்த வஞ்சனையை மன்னித்து விடுவாயா? என்னை மணந்து கொள்ளவும் சம்மதிப்பாயா?' என்றான். பாண்டிய குமாரி உடனே மறுமொழி சொல்லவில்லை. மறுமொழி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவள் முகமும் கண்களும் அவள் மனத்திலிருந்ததை வெளியிட்டன. சற்றுப் பொறுத்து அவள், 'நடக்காத காரியத்தை ஏன் சொல்லுகிறீர்கள்? ஏன் வீணாசை காட்டுகிறீர்கள்? போரிலே முழுத் தோல்வியடைந்து அடிமையாகிச் சிறைப்பட்டிருக்கும் ஒரு பெண்ணுக்காக யார் பரம்பரையாக வந்த அரசைக் கைவிடுவார்கள்? சோழ ராஜ்யத்தோடு இப்போது பாண்டிய ராஜ்யமும் சேர்ந்திருக்கிறதே? விடுவதற்கு மனம் வருமா?' என்றாள். 'என் கண்மணி! உனக்காக ஏழு உலகம் ஆளும் பதவியையும் நான் தியாகம் செய்வேன். ஆனால் உனக்கு ராணியாக இருக்க வேண்டும் என்கிற ஆசை யில்லையே?' என்று சுகுமாரன் கேட்டான். 'ராணியாகவேண்டும் என்ற ஆசையிருந்தால் தேவேந்திரச் சிற்பியின் சீடனுக்கு என் இருதயத்தைக் கொடுத்திருப்பேனா?' என்றாள் பாண்டிய குமாரி. உடனே சுகுமாரன் தன் அரையில் செருகியிருந்த உடைவாளை எடுத்துக் காட்டி, 'இதோ,





இந்தக் கொலைக் கருவியை, ராஜ குல சின்னத்தை, பயங்கர யுத்தங்களின் அடையாளத்தை உன் கண் முன்னால் முறித்து எறிகிறேன், பார்!' என்று சொல்லி அதைத் தன்னுடைய பலம் முழுவதையும் பிரயோகித்து முறித்தான். உடை வாள் படீரென்று முறிந்து தரையிலே விழுந்தது!

பின்னர் சுகுமாரன் தன் தந்தையிடம் சென்றான். அரசாட்சியில் தனக்கு விருப்பம் இல்லையென்றும், ராஜ்யத்தைத் தன் சகோதரன் ஆதித்யனுக்குக் கொடுத்து விடுவதாகவும், ராஜ்யத்துக்கு ஈடாகப் புவனமோகினியைத் தனக்குத் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். முதலில் அதற்கு உத்தம சோழர் இணங்கவில்லை. எவ்வளவோ விதமாகத் தடை சொல்லிப் பார்த்தார். சுகுமாரன் ஒரே உறுதியாக இருந்தான். 'அப்பா! தாங்கள் நீண்ட பரம்பரையில் வந்த சோழநாட்டுச் சிம்மாசனத்தில் பராக்கிரம பாண்டியன் மகள் ஏறச் சம்மதிக்க முடியாது என்றுதானே சொன்னீர்கள்? உங்களுடைய அந்த விருப்பத்துக்கு நான் விரோதம் செய்யவில்லை. வேறு என்ன உங்களுக்குஆட்சேபம்? இந்தத் தேசத்திலேயே நாங்கள் இருக்கவில்லை. கப்பலேறிக் கடல் கடந்து போய் விடுகிறோம்! தங்களைப் பாண்டியனுடைய சிறையிலிருந்து மீட்டு வந்ததற்காக எனக்கு இந்த வரம் கொடுங்கள்!' என்று கெஞ்சினான். அவனுடைய மன உறுதி மாறாது என்று தெரிந்துகொண்டு உத்தம சோழர் கடைசியில் சம்மதம் கொடுத்தார். 'ஒரு விதத்தில் உன் முடிவும் நல்லதுதான், மகனே! சோழ குலத்தில் நம் முன்னோர்கள் கப்பலேறிக் கடல் கடந்து போய் அயல்நாடுகளில் எல்லாம் நம்முடைய புலிக்கொடியை நாட்டினார்கள். சோழ சாம்ராஜ்யம் வெகு தூரம் பரந்திருந்தது. அந்தப் பரம்பரையை அனுசரித்து நீயும் காரியம் செய்தால் அதைப் பாராட்ட வேண்டியதுதானே? மூன்று கப்பல் நிறைய ஆயுதங்களையும் போர்வீரர்களையும் அழைத்துக் கொண்டு போ! இன்னும் பிரயாணத்துக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் சேகரித்துக் கொள்!' என்றார். சுகுமாரன் அவ்விதமே பிரயாண ஆயத்தங்கள் செய்தான். போருக்குரிய ஆயுதங்களோடு கூடச் சிற்ப வேலைக்கு வேண்டிய கல்லுளிகள், சுத்திகள் முதலியவற்றையும் ஏராளமாகச் சேகரித்துக் கொண்டான். வீரர்களைக் காட்டிலும் அதிகமாகவே சிற்பக் கலை வல்லுநர்களையும் திரட்டினான். தேவேந்திரச் சிற்பியாரையும் மிகவும் வேண்டிக் கொண்டு தங்களுடன் புறப்படுவதற்கு இணங்கச் செய்தான். தேசத்தில் பிரஜைகள் எல்லாரும் இளவரசர் வெளிநாடுகளில் யுத்தம் செய்து வெற்றி மாலை சூடுவதற்காகப் புறப்படுகிறார் என்று எண்ணினார்கள். உத்தமசோழரும் புதல்வனுக்கு மனம் உவந்து விடை கொடுத்தார். ஆனால் இறுதி வரை புவனமோகினி விஷயத்தில் மட்டும் அவர் கல்நெஞ்சராகவே இருந்தார். அந்தப் பெண்ணின் உதவியால் தாம் மதுரை நகர்ச் சிறையிலிருந்து வெளிவர நேர்ந்த அவமானத்தை அவரால் மறக்கவே முடியவில்லை......''

இப்போது மறுபடியும் அந்நங்கை குறுக்கிட்டுக் கதையைப் பிடுங்கிக் கொண்டு கூறினாள்:

''ஆனாலும் புவனமோகினி புறப்படும் போது உத்தம சோழரிடம் போய் நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டாள். தன்னால் அவருக்கு நேர்ந்த கஷ்டங்களை யெல்லாம் மறந்து தன்னை மன்னிக்க வேண்டும் என்று மன்றாடினாள். அந்தக் கிழவரும் சிறிது மனங் கனிந்துதான் விட்டார். 'பெண்ணே! இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்தால் நான் ஆரம்பத்திலேயே உன் கலியாணத்துக்கு ஆட்சேபம் சொல்லியிருக்க மாட்டேன். குலத்தைப் பற்றி விளையாட்டாக ஏதோ நான் சொல்லப் போக, என்னவெல்லாமோ விபரீதங்கள் நிகழ்ந்து விட்டன. போனது போகட்

சென்னையில் 'கோடாக் கிராபிக் ஆர்ட்ஸ்' கருத்தரங்கு சமீபத்தில் சிறப்பாக நடைபெற்றது. படத்தில் கோடாக் ரீஜனல் மானேஜர் திரு எஸ். ராமமூர்த்தி, சென்னை அச்சுக் கலைக் கழகத் தலைவர் திரு வி. சேதுராமன், கோடாக் விற்பனை மானேஜர் திரு டாட்வால் ஆகியோரைக் காணலாம்.




எம்பிராய்டரி செய்த
துணிகள் எல்லாம்
ஒரே மாதிரியாகத்
தோன்றலாம். ஆனல்
ஹேகோபா
எம்பிராய்டர்ட்
துணிவகைகள்
உங்கள் பணத்திற்கு
மிஞ்சிய மதிப்பைத்
தருகின்றன.

டும். எப்படியாவது என் மகனும் நீயும் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தினால் சரி' என்றார். 'தங்கள் வாக்குப் பலிக்கும்' என்று புவனமோகினி சொன்னாள். அப்படியே உத்தம சோழரின் வாக்குப் பலித்து விட்டது. இல்லையா? நீங்களே சொல்லுங்கள்!'' என்று சொல்லி அந்தச் சுந்தரவனிதை தன் நாயகன் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தாள்.

தம்பதிகள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்தவண்ணம் இருந்தார்கள். நேர உணர்ச்சியேயின்றி அப்படியே அவர்கள் இருந்து விடுவார்கள் என்று தோன்றிற்று. நானும் காதலர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன்; கதைகளிலும் படித்திருக்கிறேன். ஆனால் இந்தத் தம்பதிகளின் காதல் மிக அபூர்வமானதாக எனக்குத் தோன்றியது. அப்படி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டே இருப்பதற்கு என்னதான் இருக்கும்? என்னதான் வசீகரம் இருந்தாலும், என்னதான் மனத்தில் அன்பு இருந்தாலும், இப்படி அலுக்காமல் சலிக்காமல் பார்த்துக் கொண்டிருப்பதென்றால் அது விந்தையான விஷயந்தான் அல்லவா?

ஆனால் நான் பொறுமை இழந்துவிட்டேன். அவர்களிடம் பொறாமையும் கொண்டேன் என்றால் அது உண்மையாகவே இருக்கும். கதையின் முடிவைத் தெரிந்து கொள்ளும் ஆவலும் அதிகமாயிருந்தது.

''என்ன? திடீரென்று இருவரும் மௌனம் சாதித்து விட்டீர்களே? பிற்பாடு என்ன நடந்தது? கதையை முடியுங்கள்!'' என்றேன்.

''அப்புறம் என்ன? ஆயிரம் வருஷங்களாக, கரிகால் சோழன் காலத்திலிருந்து பரம்பரைப் பெருமையுடன் வந்திருந்த சோழ சாம்ராஜ்யத்தைத் துறந்து சுகுமாரன் நாகைப்பட்டினம் துறைமுகத்தில் கப்பல் ஏறினான். கடலில் சிறிது தூரம் கப்பல்கள் சென்றதும், மூன்று கப்பல்களிலும் இருந்த வேல், வாள் முதலிய ஆயுதங்களையெல்லாம் எடுத்து நடுக் கடலில் போடும்படி செய்தான். கல்லுளிகளையும் சுத்திகளையும் தவிர வேறு ஆயுதமே கப்பலில் இல்லாமல் செய்து விட்டான். பிறகு பல தேசங்களுக்குச் சென்று பல இடங்களைப் பார்த்து விட்டுக் கடைசியாக இந்த ஜன சஞ்சாரமில்லாத தீவுக்கு வந்து இறங்கினோம். எல்லாம் இந்தப் பெண்ணைப் பிறந்தவளின் பிடிவாதம் காரணமாகத்தான்!'' என்று சொல்லி நிறுத்தினான்.

கடைசியில் அவன் கூறியது எனக்கு அளவில்லாத திகைப்பை அளித்தது. இத்தனை நேரமும் சுகுமாரன் — புவனமோகினியைப் பற்றிப் பேசி வந்தவன் இப்போது திடீரென்று, 'வந்து இறங்கினோம்' என்று சொல்லுகிறானே? இவன்தான் ஏதாவது தவறாகப் பிதற்றுகிறானா? அல்லது என் காதிலேதான் பிசகாக விழுந்ததோ என்று சந்தேகப்பட்டு அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தேன். அவள் கூறினாள்: ''நீங்களே சொல்லுங்கள், ஐயா! அந்த உளுத்துப் போன பழைய சோழ சாம்ராஜ்யத்தைக் கைவிட்டு வந்ததினால் இவருக்கு நஷ்டம் ரொம்ப நேர்ந்து விட்டதா? நாங்கள் இந்தத் தீவுக்கு வந்து ஸ்தாபித்த புதிய சாம்ராஜ்யத்தை இதோ பாருங்கள்! நன்றாய்ப் பார்த்துவிட்டு மறுமொழி சொல்லுங்கள்!''

இவ்விதம் கூறி அந்த மோகினித் தீவின் சுந்தரி, தீவின் உட்புறத்தை நோக்கித் தன் அழகிய கரத்தை நீட்டி விரல்களை அசைத்துச் சுட்டிக் காட்டினாள். அவள் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தேன். மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் மணி மண்டபங்களும் அழகிய விமானங்களும் விஹாரங்களும் வரிசை வரிசையாகத் தென்பட்டன. பால் போன்ற வெண்ணிலவில் அக்கட்டடங்கள் எல்லாம் அப்போதுதான் கட்டி முடிக்கப்பட்ட புத்தம் புதிய கட்டடங்களாகத் தோன்றின. தந்தத்தினாலும் பளிங்கினாலும் பல வர்ணச் சலவைக் கற்களினாலும் கட்டப்பட்டவை போல ஜொலித்தன. பாறை முகப்புகளில் செதுக்கப்பட்டிருந்த சிற்ப உருவங்களெல்லாம் உயிர்களை பெற்று விளங்கின. சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தால் அந்த வடிவங்கள் உண்மையாகவே உயிர் அடைந்து, பாறை முகங்களிலிருந்து வெளிக்கிளம்பி, என்னை நோக்கி நடந்து வரத் தொடங்கிவிடும் போலக் காணப்பட்டன. கடைசியாகத் தோன்றிய இந்த எண்ணம் எனக்கு ஒருவிதப் பயத்தை உண்டாக்கியது. கண்களை அந்தப் பக்கமிருந்து திருப்பி, கதை சொல்லி வந்த அதிசய தம்பதிகளை நோக்கினேன். திடீரென்று பனி பெய்ய ஆரம்பித்து அவர்களை இலேசான பனிப் படலம் மூடியிருந்தது. பனியினால் என் உடம்பும் சில்லிட்டது.

அவர்களை உற்றுப் பார்த்தவண்ணம் தழுதழுத்த குரலில், ''கதை நன்றாகத்தான் இருந்தது. ஆனால் நான் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே? நீங்கள் யார்? இந்தத் தீவுக்கு


அமரர் கல்கி எழுதிய
மகுடபதி
விரைவில் ஆரம்பமாகிறது

எப்போது, எப்படி வந்தீர்கள்?'' என்றேன்.

இருவருடைய குரலும் இனிய சிரிப்பின் ஒலியில் கலந்து தொனித்தன.


''விடிய விடியக் கதை கேட்டுவிட்டுச் சீதைக்கு இராமர் என்ன உறவு என்று கேட்டது போலிருக்கிறதே?'' என்றான் அந்தச் சுந்தர புருஷன்.

தமிழ் மொழியில் மற்ற பாஷைகளுக்கு இல்லாத ஒரு விசேஷம் உண்டு என்று அறிஞர்கள் சொல்லி நான் கேள்விப்பட்டிருந்தேன். அதாவது ஆயிரக்கணக்கான வருஷங்களாகத் தமிழ் மொழி ஏறக்குறைய ஒரேவிதமாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது என்பதுதான். இது எனக்கு நினைவு வந்தது. இன்றைக்கும் தமிழ்நாட்டில் வழங்கும் பழமொழியைச் சொல்லி என்னைப் பரிகசித்தது சோழ இளவரசன் சுகுமாரன்தான் என்பதை ஊகித்துத் தெரிந்து கொண்டேன். அதை வெளியிட்டுக் கூறினேன்.

''தாங்கள்தான் சுகுமார சோழர் என்று தோன்றுகிறது. உண்மைதானே? அப்படியானால் இந்தப் பெண்மணி...?'' என்று சொல்லி, உயிர் பெற்ற அழகிய சிற்ப வடிவம் போலத் தோன்றிய அந்த மங்கையின் முகத்தை நோக்கினேன்.

அவள் மூன்று உலகங்களும் பெறக்கூடிய ஒரு புன்னகை புரிந்தாள். அந்தப் புன்னகையுடனே என்னைப் பார்த்து, ''ஏன் ஐயா! என்னைப் பார்த்தால் பாண்டிய ராஜகுமாரியாகத் தோன்றவில்லையா?'' என்றாள்.

நான் உடனே விரைந்து, ''அம்மணி! தங்களைப் பார்த்தால் பாண்டிய ராஜகுமாரியாகத் தோன்றவில்லைதான்! மூன்று உலகங்



கால் தளர்ந்தாலும் மனம் தளராதவர்!

இரண்டு கால்களினால் நடக்க முடியாவிட்டாலும், இவரால் எத்தனை காரியங்கள் நடக்கின்றன! சென்னை சேப்பாக்கத்திலுள்ள நில அளவை அலுவலகத்தில் (Central Survey Office) சீனியர் டிராப்ட்ஸ்மனாகப் பணியாற்றும் திரு ஆர். எம். லாசரஸ் படிப்படியாக முன்னேறியது எப்படி?

பள்ளியில் படிக்கும்போதே சித்திரம் வரைவதில் சிறந்து விளங்கிய இவர் பள்ளிப் படிப்பை முடித்ததும், அதே ஆர்வத்தில் உந்தப்பட்டு, கலைக்கல்லூரியில் (School of Arts) சேர்ந்தார். அங்கு 'கமர்ஷியல் ஆர்ட்' பகுதி எடுத்துப் பயின்றார். இதில் பல துறைகளில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

இவருக்கு ஆறு வயதில் இளம்பிள்ளை வாதத்தால் இரு கால்களும் பாதிக்கப்பட்டன. இவர் மனம் தளர்ந்துவிடவில்லை. தம் தந்தையின் வாழ்க்கை இவருக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது. இவர் தந்தை பதினைந்தாவது வயதில் கண் பார்வை இழந்தாராம். மனம் தளராத அவர் குருடர் பள்ளியில் படித்து, அதே பள்ளியில் ஆசிரியராகவும் வந்தாராம்.

வேலை தேடுவதில் தீவிரமாக ஈடுபட்ட இவருக்கு, 'இரண்டு கால் இல்லாத நமக்கு வேலை யார் தருவார்கள்' என்ற எண்ணமும் ஏற்பட்டது. 1953ம் ஆண்டு இவர் தன்னம்பிக்கையுடன், அப்போதைய முதலமைச்சர் திரு ராஜாஜி அவர்களுக்குத் தம் நிலைமையை விளக்கிக் கடிதம் எழுதினார். '' அவர் அப்போதே எனக்கு வேலை கிடைக்கும்படி ஏற்பாடு செய்தார் '' என்று பெருமிதத்தோடு கூறுகிறார் திரு லாசரஸ்.

காதல் திருமணம் செய்து கொண்ட இவருக்கு இப்போது இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். திரு ராதாகிருஷ்ணன் ஜனாதிபதியாக இருக்கையில் இவர் உதவிபெறத் தகுதியானவர் என்று ராஜாஜி கடிதம் எழுத, ராஷ்டிரபதியிடமிருந்து இவருக்கு ரூ. 500 கிடைத்தது.

''அந்தப் பணத்தில்தான் நான் சுலபமாகப் போய் வர, ஒரு வண்டியைச் செய்து கொண்டேன்'' என்று கூறும் திரு லாசரஸ், ஜனாதிபதியின் பதக்கமும் பெற்றிருக்கிறார். ''மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப் பலரை அனுப்பினார்கள். என்னையும் கேட்டார்கள், 'உன்னால் முடியுமா? வீடு வீடாகப் போய் விசாரிக்க வேண்டுமே' என்று. நான் துணிவாக 'முடியும்' என்றேன். அதன்படி வெற்றிகரமாகச் செய்தும் காட்டினேன். என் முயற்சியைப் பாராட்டி ஜனாதிபதி பதக்கம் வழங்கினார்'' என்று கூறுகிறார் திரு லாசரஸ். தமிழ்நாடு அரசில் வேலைக்குச் சேர்ந்த அங்கஹீனமுற்றவர்களில் இவரே முதல்வர்.

பேட்டி : பி. வி. கிரி

களையும் ஒரு குடையின்கீழ் ஆளக்கூடிய சக்கரவர்த்தியின் திருக் குமாரியாகவே தோன்றுகிறீர்கள்!'' என்றேன்.

அப்போது அந்தச் சுந்தரி, நாயகனைப் பார்த்து, ''கேட்டீர்களா? முன்னைக்கு இப்போது தமிழ்நாட்டு ஆடவர்கள் புகழ்ச்சி கூறுவதில் அதிக முன்னேற்றம் அடைந்திருப்பதாகத் தோன்றவில்லை. தாங்கள் அந்தநாளில் என்னைப் பார்த்து 'ஈரேழு பதினாலு புவனங்களுக்கும் சக்கரவர்த்தினியாயிருக்க வேண்டியவளை இந்தச் சின்னஞ் சிறு தீவின் அரசியாக்கி விட்டேனே' என்று சொன்னது ஞாபகம் இருக்கிறதா ?'' என்றாள்.

அதைக் கேட்ட சுகுமார சோழன் சிரித்தான். அதுவரையில் மலைப் பாறையிலே உட்கார்ந்திருந்த அந்தத் தம்பதிகள் அப்பொழுது எழுந்தார்கள். ஒருவர் தோளை ஒருவர் தழுவிய வண்ணமாக இருவரும் நின்றார்கள். அப்போது ஓர் அதிசயமான விஷயத்தை நான் கவனித்தேன்.

மேற்குத் திசையில் சந்திரன் வெகு தூரம் கீழே இறங்கியிருந்தான். அஸ்தமன சந்திரனின் நிலவொளியில் குன்றுகளின் சிகரங்களும், மொட்டைப் பாறைகளும் கரிய நிழல் திரள்களைக் கிழக்கு நோக்கி வீசியிருந்தன. சிற்ப வடிவங்களின் நிழல்கள் பிரம்மாண்டமான ராட்சச வடிவங்களாகக் காட்சி தந்தன. நெடிதுயர்ந்த மரங்களின் நிழல்கள் பன்மடங்கு நீண்டு கடலோரம் வரையில் சென்றிருந்தன. என்னுடைய நிழல்கூட அந்த வெள்ளிய பாறையில் இருள் வடிவமாகக் காணப்பட்டது.

ஆனால்.... ஆனால்... அந்த அதிசயக் காதலர்கள் என் முன்னாலே, கண் எதிரே நின்றார்களாயினும், அவர்களுடைய நிழல்கள் பாறையில் விழுந்திருக்கக் காணவில்லை.

இதைக் கவனித்ததனால் ஏற்பட்ட பிரமிப்புடன் அந்தத் தம்பதிகளை மீண்டும் ஒரு முறை பார்த்தேன். விந்தை ! விந்தை! அவர்களையும் காணவில்லை !

அந்த அழகிய தம்பதிகள் இருந்த இடம் வெறுமையாய், சூனியமாய், வெறிச்சென்று இருந்தது.

திடீரென்று நிலவொளி மங்கியது. சுற்றிலும் இருள் சூழ்ந்து வந்தது. என் கண்களும் இருண்டன. தலை சுற்றியது. நினைவிழந்து கீழே விழுந்தேன்.

மறு நாள் உதயசூரியனின் கிரணங்கள் என் முகத்திலே பட்டு என்னைத் துயிலெழுப்பின. திடுக்கிட்டு விழித்தெழுந்தேன். நாலாபுறமும் பார்த்தேன். முதல் நாளிரவு அநுபவங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன. அவையெல்லாம் கனவில் கண்டவையா, உண்மையில் நிகழ்ந்தவையா என்று விளங்கவில்லை. அந்தப் பிரச்னையைப் பற்றி யோசிக்கவும் நேரம் இல்லை. ஏனெனில், நீலக் கடல் ஓசையின் நடுவே நின்ற கப்பல் அதன் பயங்கரமான ஊதுகுழாய்ச் சத்தத்தைக் கிளப்பிக் கொண்டிருந்தது. படகு ஒன்று இந்தக் கரையோரமாக வந்து நின்று கொண்டிருந்தது. அந்தப் படகு மறுபடியும் என்னை ஏற்றிக் கொள்ளாமல் போய்விடப் போகிறதே என்ற பயத்தினால் ஒரு பெரும் ஊளைச் சத்தத்தைக் கிளப்பிக் கொண்டு நான் அந்தப் படகை நோக்கி விரைந்தோடினேன். நல்ல வேளையாகப் படகைப் பிடித்துக் கப்பலையும் பிடித்து ஏறி இந்தியா தேசம் வந்து சேர்ந்தேன்.

பின்னுரை

ஸிமாவை முழுதும் பார்க்க முடியாமல் என்னை அழைத்துக் கொண்டு வந்த நண்பர் இவ்விதம் கதையை முடித்தார். அந்த விசித்திரமான கதையைக் குறித்துக் கடல் அலைகள் முணுமுணுப்பு பாஷையில் விமரிசனம் செய்தன.

கடற்கரையில் மனித சஞ்சாரமே கிடையாது. கடற்கரைச் சாலையில் நாங்கள் வந்த வண்டி மட்டுந்தான் நின்றது.

''இன்னமும் எழுந்திருக்க மாட்டீர் போலிருக்கிறதே! கதை முடிந்துவிட்டது; போகலாம்!'' என்றார் நண்பர்.

''உங்களுடைய மோகினித் தீவை எனக்கும் பார்க்க வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது. ஒரு தடவை என்னையும் அழைத்துக் கொண்டு போகிறீர்களா?'' என்று கேட்டேன்.

''பேஷாக அழைத்துக் கொண்டு போகிறேன். ஆனால் என்னுடைய கதையை நீர் நம்புகிறீரா? கேட்டவர்களில் அநேகம் பேர் நம்பவில்லை!''

'' நம்பாதவர்கள் கிடக்கிறார்கள். அவர்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். நான் நிச்சயமாய் நம்புகிறேன்'' என்றேன்.

சிறிது யோசித்துப் பார்த்தால், அந்த நண்பருடைய கதையில் அவநம்பிக்கை கொள்ளக் காரணம் இல்லை தானே ? வெளி உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மட்டுமே உண்மையானவை என்று நாம் எதற்காகக் கருத வேண்டும்? கவிஞன் ஒருவனுடைய கற்பனை உலகில் நிகழும் அற்புத சம்பவங்களை உண்மையல்லவென்று ஏன் கொள்ள வேண்டும்?

முற்றும்



இருபதாம் அத்தியாயம்

பறவைக் குஞ்சுகள்

கொடும்பாளூரிலிருந்து வானதி பழையாறை நகருக்கு வந்த புதிதில், சோழ நாட்டின் நீர் வளம் அவளை ஒரே ஆச்சரியக் கடலில் ஆழ்த்தியிருந்தது. கொடும்பாளூர்ப் பக்கத்தில் நதி ஒன்றும் கிடையாது. ஏரிகள்தான் உண்டு. மழை பெய்யும் காலங்களில் ஏரிகள் தண்ணீர் நிறைந்து ததும்பிக் கொண்டிருக்கும். கோடை காலத்தில் காய்ந்து விடும். இம்மாதிரி இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு தண்ணீர் ததும்பிச் சுழிகளும் சுழல்களுமாய் ஓடும் நதிகளும், வாய்க்கால்களும், கண்ணிகளும் அங்கே இல்லை. தாமரையும் செங்கழுநீரும் தழைத்துப் பூத்துக் கொழித்த தடாகங்களை வானதி பிறந்த ஊரில் பார்க்க முடியாது. இவற்றையெல்லாம் வானதி பார்த்துப் பார்த்து மெய்ம் மறந்து உட்கார்ந்திருப்பாள். குளத்து மீனுக்குக் குடை பிடித்த தாமரை இலைகளின் மீது முத்துக்கள் போன்ற நீர்த் துளிகள் அங்குமிங்கும் ஓடிக் களிப்பதைப் பார்த்து மகிழ்வாள். கமல மலர்களையும் அல்லிப் பூக்களையும் கரு வண்டுகள் சுற்றிச் சுழன்று வந்து ஆடிப் பாடுவதைக் கண்டதும் பரவசமாகிவிடுவாள். பொழுது போவதே தெரியாமல் போய்விடும்.

ஒரு சமயம் வானதியும் குந்தவையும் செம்பியன் மாதேவி அழைத்ததின் பேரில் * திருநல்லத்துக்குப் போயிருந்தார்கள். வசந்த மாளிகையில் தங்கியிருந்தார்கள். செம்பியன்மாதேவியும் குந்தவையும் அடிக்கடி சைவ சமயக் குரவர்களின் வரலாறுகளைப் பற்றியும், அவர்களுடைய பதிகங்களில் கனிந்து சொட்டும் பக்தி ரஸத்தைப் பற்றியும் பேசத் தொடங்கி விடுவார்கள். செம்பியன் மாதேவி, மேற்கெழுந்தருளிய தேவரான தம் அருமைக் கணவர் கண்டராதித்தருடன் தாம் க்ஷேத்திர யாத்திரை செய்த வரலாறுகளையும் சொல்லத் தொடங்கி விடுவார். அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பதில் வானதிக்குச் சிரத்தை இருப்பதில்லை. அதைக் காட்டிலும் வசந்த மாளிகையை ஒட்டியிருந்த தோட்டங்களிலே சென்று பறவைகளின் இனிய கீதங்களைக் கேட்பதிலும், தடாகத்தில் பூத்துக் குலுங்கிய தாமரை மலர்களைச் சுற்றி வந்துகொண்டிருந்த கருநீல வண்டுகளின் இன்ப ரீங்காரத்தைக் கேட்பதிலும் அவளுக்கு ஆர்வம் அதிகமாயிருந்தது. இன்னும் மாளிகையின் ஒரு பக்கமாகச் சென்றுகொண்டிருந்த நதி வெள்ளம் சுழி போட்டுக் கொண்டு ஓடுவதையும் அந்தச் சுழிகளில் அழகிய செக்கச் சிவந்த கடம்ப மலர்கள் சுழன்று கொண்டிருப்பதையும் பார்க்க அவளுக்கு மிக்க ஆர்வம் இருந்தது. கொடும்பாளூர் பகுதிகளில் இம்மாதிரி மனோரம்யமான காட்சிகளைப் பார்க்க இயலாதல்லவா?

ஒருநாள் மழவரையர் மகளாரும் இளையபிராட்டி குந்தவையும் சுவாரசியமாக ஏதோ பேசிக் கொண்டிருந்

* இக்காலத்தில் திருநல்லத்துக்குக் கோனேரிராஜபுரம் என்று பெயர் வழங்குகிறது.

நார்கள். வானதி அவர்கள் அருகில் சென்ற போது இளையபிராட்டி, ''வானதி! நீ தோட்டத்துக்குப் போ! சற்று நேரத்துக்கெல்லாம் நானும் வருகிறேன்!'' என்ருர். வானதி குதூகலத்துடன் துள்ளிக் குதித்து ஓடினுள். தோட்டத்தில் சற்று நேரம் சுற்றி அலைந்துவிட்டுத் தாமரைக் குளக்கரைக்குச் சென்ருள். குளக்கரையில் வானை மறைத்துக் கொண்டு வளர்ந்திருந்த மரங்கள் பல இருந்தன. அவற்றில் நெடிதுயர்ந்து பல்கிப் பரவித் தழைத்திருந்த இலுப்பை மரம் ஒன்று இருந்தது. இலுப்பை மரம் பூக்கும் காலம் அது. அந்த மரத்தடியில் இலுப்பைப்பூக்கள் உதிர்ந்து பூமியைஅடியோடு மறைத்துக் கொண்டிருந்தன. அவற்றின் நறுமணம் கம்மென்று வீசித் தோட்டம் முழுவதிலும் பரவியிருந்தது. அந்த மரத்தடியில் ஒரு பெரிய வேரின் பேரில் வானதி உட்கார்ந்தாள். அடிமரத்தில் சாய்ந்து கொண்டு மேலும் கீழும் நாலாபுறமும் பார்த்துக் கொண்டிருந்தாள். பறவை இனங்களின் இனிய கீதங்கள் அவளுடைய செவிகளில் அமுதவெள்ளமாகப் பாய்ந்து கொண்டிருந்தன. அவள் அந்த நாள் வரை அநுபவித்திராத இன்ப உணர்ச்சி அவள் இதயத்தில் தோன்றியது. அந்த உள்ளக் களிப்பு அடிக்கடி பொங்கித் ததும்பி அவள் மேனியெல்லாம் பரவியது. வாழ்க்கை இவ்வளவு ஆனந்த மயமாக இருக்கக் கூடும் என்று வானதி அன்று வரை கனவிலும் கருதியதில்லை.



அந்த மரத்தடியிலிருந்து பார்த்தால் சற்றுத் தூரத்தில் ஆற்று வெள்ளம் தெரிந்தது. அவ்வப்போது நதி ஓட்டத்தின் இனிய காட்சிகளையும் அவள் மரங்களின் இடைவெளி வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒருமுறை யாரோ ஒரு வாலிபன் ஆற்றில் நீந்திக் கொண்டிருப்பதும் தெரிந்தது. செந்நிற நீர்ப் பிரவாகத்தில் அவனுடைய பொன்னொளிர் மேனி பாதி தண்ணீரிலும் பாதி மேலேயும் மிதந்த வனப்பு மிக்க காட்சி அவள் உள்ளத்தைக் கவர்ந்தது. சிச்சீ! யாரோ இளம் பிள்ளை ஒருவனுடைய தோற்றத்தில் தனது கவனம் செல்வது என்ன அசட்டுத்தனம்? — நாணம், மடம் என்னும் இயல்புகளைத் தன் உடன் பிறந்த செல்வங்களாகக் கொண்டிருந்த வானதிக்கு அந்த எண்ணம் மிகுந்த கூச்சத்தை உண்டாக்கியது. அவளுடைய உள்ளக் கட்டுப்பாட்டையும் மீறிக் கண்கள் மீண்டும் இரண்டொரு தடவை நதிப்பக்கம் சென்றன.

வானதிக்குத் தன் பேரில் கோபமே உண்டாயிற்று. அங்கிருந்து எழுந்து போய் விடலாமா என்று எண்ணினாள். அச்சமயம் வேறொரு நிகழ்ச்சி அவளுடைய உள்ளத்தைக் கவர்ந்தது.

அவள் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகில், தலைக்கு



மேலே பறவைக் குஞ்சுகளின் கூக்குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளுக்கு ஏக காலத்தில் பரிதாபத்தையும் திகிலையும் உண்டாக்கின.

ஒரு மரக் கிளையில் கவணை போலப் பிரிந்த இடத்தில் பட்சிக் கூடு ஒன்று இருந்தது. அதில் சில பறவைக் குஞ்சுகள் தலைகளை நீட்டிக் கொண்டிருந்தன. அவைதாம் 'கிரீச்' 'கிரீச்' என்று மெல்லிய குரலில் சத்தமிட்டன. அந்தச் சத்தத்தில் பயமும், அபாய அறிவிப்பும், பரிதாபமான அடைக்கல விண்ணப்ப முறையீடும் கலந்திருந்தன. அவ்விதம் கலந்திருந்ததாக வானதியின் செவிகளில் ஒலித்தன. கூட்டுக்கு அருகில் மரக் கிளையில் ஒரு காட்டுப் பூனை ஏறிக் கொண்டிருந்தது. மெள்ள மெள்ள அது கூட்டை நெருங்கி வந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்த வானதி, ''ஐயோ! ஐயோ!'' என்று சத்தமிட்டாள். அடுத்த கணத்தில், ''என்ன? என்ன?'' என்று ஒரு குரல் கேட்டது. யாரோ விரைந்து ஓடி வரும் காலடிச் சத்தமும் கேட்டது. வானதி அந்தப் பக்கம் பார்த்தாள். சற்றுமுன் நதி வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்த வாலிபன் தான் கரையேறி ஓடி வந்துகொண்டிருந்தான் என்பதை அவள் அறிந்தாள்.

அதே சமயத்தில் எங்கிருந்தோ இரண்டு பெரிய பறவைகள் வந்து விட்டன. கூட்டைச் சுற்றி அவை கராபுராவென்று கத்திக் கொண்டு வட்டமிட்டன. அவை அக்குஞ்சுகளின் தாயும் தகப்பனுமாகவே இருக்க வேண்டும். குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்காகவே அவை அவ்விதம் அவசரமாக வந்திருக்க வேண்டும் என்பதை வானதி உணர்ந்தாள். இரண்டும் நீள மூக்குகள் உள்ள பறவைகள். மரங்கொத்திப் பறவைகள் என்பவை இவைதாம் போலும். ஒரு பறவை கூட்டைச் சுற்றி அதிகமாக வட்டமிட்டது. இன்னொன்று பூனையை நெருங்கி அதை மூக்கினால் கொத்தித் தாக்கும் பாவனையுடன் சத்தமிட்டது! பூனையை அந்தப் பறவையினால் ஒன்றும் செய்துவிட முடியாது. பூனையின் வாயில் அகப்பட்டால் மறுகணம் அதன் வயிற்றுக்குள்ளேயே போய்விட வேண்டியதுதான். ஆயினும் தன் குஞ்சுகளைக் காப்பதற்காக அந்தப் பறவை அப்படித் தீரத்துடன் போராடியது. தாயையும் தகப்பனையும் இளம் பிராயத்திலேயே இழந்துவிட்ட வானதிக்கு அந்தக் காட்சி மிக்க மனக் கசிவை உண்டாக்கியது.

பூனை சற்றுச் சும்மா இருந்து விட்டுத் திடீரென்று முன்னங் கால் ஒன்றைக் கூட்டின் பக்கம் நீட்டியது. பறவைக் குஞ்சுகள் இருந்த கூட்டின் ஒரு மூலையையும் தொட்டு விட்டது.

வானதி மறுபடியும் அலறினாள். இதற்குள் அந்த வாலிபன் நெருங்கி வந்து விட்டான். அவனை அருகில் பார்ப்பதற்கு வானதிக்கு மிக்க கூச்சமாயிருந்தது. மறுமொழி சொல்ல வரவில்லை. பேசுவதற்கு நா எழவில்லை. சமிக்ஞையினால் பட்சியின் கூட்டைச் சுட்டிக் காட்டினாள்.

அதுவரையில் அந்தப் பெண்ணுக்குத்தான் ஏதோ அபாயம் என்று எண்ணிக் கொண்டிருந்தான். வானதி சுட்டிக் காட்டிய இடத்தை அண்ணாந்து பார்த்தான். மறுபடியும் வானதியை நோக்கிப் புன்னகை புரிந்தான். அவனுடைய பார்வையும் புன்னகையும் வானதியின் நெஞ்சத்தை நெகிழச் செய்து, பறவைக் குஞ்சுகளின் நிலையைக்கூட மறந்துவிடச் செய்தன.

ஆனால் வாலிபன் உடனே அங்கிருந்து விரைந்து ஓடி, மரக்கிளையில் பறவைக் கூடு இருந்த இடத்துக்கு நேர் கீழே சென்று நின்றான்.

காட்டுப் பூனையை அதட்டினான். அது கீழே குனிந்து பார்த்து உறுமியது. ''பொல்லாத பூனையாயிருக்கிறதே!'' என்று சொல்லிக் கொண்டே தரையிலிருந்து ஒரு கல்லைப் பொறுக்கி வேகமாக விட்டெறிந்தான். கல் பூனையின் மீது படாமல் அதன் அருகில் மரக் கிளையைத் தாக்கியது. பூனை உடனே தாவி வேறு கிளையில் பாய்ந்து, அங்கிருந்து இன்னோர் அடர்ந்த மரத்துக்குச் சென்று, பின்னர் மறைந்து விட்டது.

ஆனால் இதற்குள் வேறொரு விபரீதம் நேர்ந்து விட்டது. பூனையின் ஒரு கால் பறவைக் கூட்டின் மூலையைப் பற்றி இழுத்ததல்லவா? அதனால் சிறிது ஆடிப் போயிருந்த கூடு, வாலிபனின் கல்லெறி மரக் கிளையில் தாக்கிய வேகத்தினால் அதிகமாக நிலைகுலைந்தது. சிறிது சிறிதாக அந்தக் கூடு கிளையின் கப்பிலிருந்து நழுவியது. முழுதும் நழுவி விழுந்திருந்தால் காட்டுப் பூனை வாயிலிருந்து தப்பிய குஞ்சுகள் தரையில் விழுந்து மாண்டிருக்கும்! நல்ல வேளையாகக் கூட்டின் ஒரு மூலை கிளையைக் கவ்விக் கொண்டிருந்தது. கூடு அதில் இருந்த குஞ்சுகளுடன் கீழே தொங்கி ஊசலாடியது. குஞ்சுகளின் உயிரும் ஊசலாடின. மரங்கொத்திப் பறவைகள் முன்னைவிடப் பீதியுடன் அலறிக் கொண்டு குஞ்சுகள் இருந்த கூட்டைச்

சுற்றிச் சுற்றி வந்தன. காற்று கொஞ்சம் வேகமாக அடித்தால் கூடு தரையில் விழுந்து விடும். அவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தால் குஞ்சுகள் பிழைப்பது துர்லபந்தான்.

வாலிபன் ஒரு கண நேரம் யோசித்தான். முதலில் மரத்தின் மேல் தாவி ஏற அவன் எண்ணியதாகத் தோன்றியது. மறுகணத்தில் மனத்தை மாற்றிக் கொண்டதாகக் காணப்பட்டது.

வானதியைப் பார்த்து, ''பெண்ணே! சற்று இங்கே வா! கூடு கீழே விழுந்தால் உன் சேலைத் தலைப்பினால் பிடித்துக் கொள்! இதோ நான் ஒரு நொடியில் திரும்பி வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டு ஓடினான்.

அவன் சொன்னபடியே மிகச் சொற்ப நேரத்தில் திரும்பி வந்தான். ஆனால் இப்போது அவன் நடந்து வரவில்லை. யானை மீது ஏறிக் கொண்டு வந்தான். வானதிக்கு அவன் என்ன செய்யப் போகிறான் என்பது ஒருவாறு தெரிந்து விட்டது. ஆகையால் அங்கிருந்து அப்பால் சென்றாள். அருகிலிருந்த தாமரைக் குளத்தின் படிக்கட்டை அடைந்தாள். சில படிகள் இறங்கி உட்கார்ந்து கொண்டு யானை மேல் வந்த வாலிபன் என்ன செய்கிறான் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

யானை மரத்தடிக்கு வந்ததும் நின்றது. அதன் முதுகில் இருந்தபடி வாலிபன் பறவைக் கூட்டைக் கையினால் தாங்கி முன்னால் அது இருந்த கிளைப் பொந்திலே ஜாக்கிரதையாக வைத்தான். தாய்ப் பறவையும் தகப்பன் பறவையும் இப்போது முன்னைவிட அதிகமாகக் கூச்சலிட்டன. ஆனால் அந்தக் கூச்சலில் இப்போது குதூகல த்வனி மேலிட்டிருப்பதாகத் தோன்றியது.

வாலிபன் பின்னர் திரும்பிச் சுற்றுமுற்றும் பார்த்தான். ''பெண்ணே! எங்கே போனாய்?'' என்று கூவினான். வானதி பெரிதும் நாணம் அடைந்து மௌனமாயிருந்தாள். வாலிபன் யானையின் மீதிருந்து கீழே இறங்கினான். பின்னர், மறுபடியும் சுற்றுமுற்றும் பார்த்தான்.

வானதி மனத்தில் எதையோ நினைத்துக் கொண்டாள். அந்த நினைவு அவளுக்குப் பெரும் வேடிக்கையா யிருந்தது. அவளையறியாமல் சிரிப்பு வந்தது. உரத்த சத்தத்துடன் கலகலவென்று சிரித்தாள்.

அதைக் கேட்டுவிட்டு வாலிபன் குளத்தின் படிக்கட்டுக்கு வந்தான். வானதியைப் பார்த்து, ''பெண்ணே! ஏன் சிரிக்கிறாய்? நீ இவ்வளவு பலமாகச் சிரிக்கும்படியாக இப்போது என்ன நேர்ந்து விட்டது?'' என்றான்.

வாலிபனின் குரல் வானதியின் செவிகளில் விழுந்ததும் மறுபடியும் முன்போல் அவளுடைய நெஞ்சம் நெகிழ்ந்து பொங்கிற்று. கூச்சம் முன்னிலும் அதிகமாயிற்று. அவனை ஏறிட்டுப் பார்க்க முடியாதபடியால், அப்புறமும் இப்புறமும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''பெண்ணே! ஏன் சிரித்தாய்? சொல்ல மாட்டாயா?'' என்று மீண்டும் வாலிபன் கேட்டான்.

வானதி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ''ஒன்றுமில்லை. நீ பெரிய வீரனாயிருக்கிறாயே என்று எண்ணிச் சிரித்தேன். பூனையோடு சண்டை போடுவதற்கு யானையின் பேரில் வந்தாய் அல்லவா?'' என்று கேட்டாள்.

அதைக் கேட்டு வாலிபனும் சிரித்தான்.

''பெண்ணே! அது பூனைதானா? நீ போட்ட கூக்குரலைக் கேட்டுப் புலியோ என்று பயந்து விட்டேன்!'' என்று சொன்னான்.

வானதிக்கு இதற்குள் துணிவு வந்து விட்டது; அவளிடமிருந்த கூச்சமும் குறைந்து விட்டது.

''ஆகா! அப்படியா? புலிக்கொடி பறக்கும் சோழ நாட்டில் புலியைக் கண்டு நான் எதற்காகப் பயப்பட வேணும்? நீ பாண்டிய நாட்டானா?'' என்றாள்.

அதைக் கேட்ட வாலிபனின் முகம் முன்னைக் காட்டிலும் சற்று அதிகமாக மலர்ச்சி அடைந்தது.

''பெண்ணே! நான் வேற்று நாட்டவன் அல்ல; இந்தச் சோழ நாட்டைச் சேர்ந்தவன்தான்! யானை மீது ஏறி வேறு போர்க்களங்களுக்கும் சென்றிருக்கிறேன். நீ யார்? எந்த ஊர்ப் பெண்? பெரிய வாயாடிப் பெண்ணாக இருக்கிறாயே?'' என்றான்.

''யானைப் பாகா! மரியாதையாகப் பேசு! நான் யாராயிருந்தால் உனக்கு என்ன? எதற்காக அதைப் பற்றிக் கேட்கிறாய்?'' என்றாள் வானதி.

''சரி, அப்படியானால் நான் கேட்கவில்லை. பெரிய இடத்துப் பெண் போலிருக்கிறது! போகிறேன்!'' என்று சொல்லிவிட்டு அந்த வாலிபன் படியேறி மேலே போகலானான்.

வானதி மறுபடியும் விளையாட்டும் பரிகாசமும் தொனித்த குரலில், ''யானைப் பாகா! யானைப் பாகா! என்னையும் உன் யானையின் மேல் ஏற்றிக் கொண்டு போகிறாயா?'' என்றாள்.

''சரி; ஏற்றிக் கொண்டு போகிறேன். எனக்கு என்ன கூலி தருவாய்?'' என்று கேட்டான் வாலிபன்.

''கூலியா? என் பெரியப்பாவிடம் சொல்லி உனக்குக் கொடும்பாளூர் அரண்மனையில் உத்தியோகம் வாங்கித் தருகிறேன். இல்லாவிட்டால், யானைப் படைக்குச் சேனாபதியாக்கச் செய்கிறேன்!'' என்றாள் வானதி.

'' ஓகோ! கொடும்பாளூர் இளவரசியா தாங்கள்?'' என்றான் அந்த வாலிபன். இது வரையில் மலர்ந்திருந்த அவனது முகம் இப்போது சுருங்கியது. புன்னகை மறைந்தது. புருவங்கள் நெரிந்தன.

'' ஏன்? கொடும்பாளூர் இளவரசி என்றால் அவ்வளவு மட்டமா? உன் யானையின் மேல் ஏறக் கூடாதா?'' என்றாள் வானதி.

''இல்லை, இல்லை! கொடும்பாளூர் அரண்மனைக் கொட்டாரத்தில் எவ்வளவோ யானைகள் இருக்கின்றன; எத்தனையோ யானைப் பாகர்களும் இருக்கிறார்கள். நான் என்னத்துக்கு?'' என்று சொல்லிவிட்டு அந்த வாலிபன் விடுவிடு என்று நடந்து போனான். அவன் ஒரு வேளை திரும்பிப் பார்ப்பானோ என்று சற்று நேரம் வரையில் வானதி எதிர்பார்த்தாள். ஆனால் அவன் திரும்பியே பாராமல் நடந்து சென்று யானையின் மேல் ஏறிப் போய் விட்டான்.

இந்தச் சம்பவம் வானதியின் உள்ளத்தில் வெகுவாகப் பதிந்துவிட்டது. அடிக்கடி அது அவளுடைய ஞாபகத்துக்கு வந்தது. அந்த யானைப் பாகனுடைய உருவத் தோற்றமும் மலர்ந்த முகமும் இனிய குரலும் நினைவுக்கு வந்தபோதெல்லாம் உள்ளத்தில் இனந் தெரியாத இன்ப உணர்ச்சி உண்டாயிற்று. அவன் பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்ற யானை மேல் ஏறி வந்ததை நினைத்தபோதெல்லாம் அவளையறியாமல் நகைப்புவந்தது. தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்; பிறகு அதற்காக வெட்கமும் அடைந்தாள். அந்த யானைப் பாகனின் அகம்பாவத்தையும், கொடும்பாளூர் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே அவன் முகத்தைச் சுருக்கிக் கொண்டு போய் விட்டதையும் எண்ணியபோதெல்லாம் அவன் பேரில் கோபம் உண்டாகி வளர்ந்தது. மொத்தத்தில், அந்த யானைப் பாகனைப் பற்றி அடிக்கடி நினைவு வந்து கொண்டிருந்தது. இது தவறோ என்ற சந்தேகமும் கூடவே தோன்றி அவளை மிகவும் வருத்திக் கொண்டிருந்தது.

திருநல்லத்துக்குத் தமது தமக்கையைப் பார்க்கப் பொன்னியின் செல்வர் வரப் போகிறார் என்று அரண்மனையில் பேச்சாக இருந்தது. சோழ நாட்டின் கண்மணியாக விளங்கிய இளவரசரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அரண்மனைப் பெண்கள் எல்லாருக்கும் இருந்தது போல் வானதிக்கும் இருந்தது. அதற்குச் சந்தர்ப்பம் எளிதில் கிடைக்கவில்லை. இளவரசர் வந்துவிட்டார் என்று பேச்சாக இருந்ததே தவிர, அவர் அந்தப்புரத்துக்குள் வரவேயில்லை. இயற்கையில் சங்கோசம் நிறைந்த வானதியோ மற்றத் தோழிப் பெண்களைப் போல் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணிக் கொண்டு போய் அவரைப் பார்க்க விரும்பவில்லை. திருநல்லத்தை விட்டு இளவரசர் புறப்பட்ட அன்றைக்குத்தான் அரண்மனை மேல் மாடத்தில் நின்று வானதி பொன்னியின் செல்வரைப் பார்க்க நேர்ந்தது. அவர் யானையின் மீது ஏறிப் பிரயாணமாகிக் கொண்டிருந்தார். வானதியால் தன் கண்களை நம்ப முடியவில்லை என்றால், அது சம்பிரதாய வார்த்தை அன்று. யானைப் பாகன் என்றுதான் எண்ணிக் கேலிப் பேச்சுப் பேசிச் சிரித்து, அதிகாரம் செய்யவும் துணிந்த வாலிபனே இந்த மாநிலம் போற்றும் இளவரசர் அருள்மொழி வர்மர் என்று கண்டால், வானதி அவளுடைய கண்களை எப்படி நம்ப முடியும்? பின்னர், பக்கத்திலிருந்த பெண்களைப் பல முறை கேட்டுத்தான் அதை நிச்சயம் செய்து கொண்டாள். இதனால் அவள் அடைந்த அவமானத்தையும் மன வேதனையையும் சொல்லிச் சாத்தியமில்லை.

உலகம் ஆளப் பிறந்தவருக்குக் கொடும்பாளூர் அரண்மனையின் யானைக் கொட்டாரத் தலைவன் உத்தியோகம் செய்து வைப்பதாகத் தான் சொன்னதை அவள் நினைத்த போது ஒரு பக்கம் சிரிப்பு வந்தது; அதே சமயத்தில் கண்களில் கண்ணீர் வந்தது. தன்னுடைய மூடத்தனத்தை நினைத்து நினைத்து வருந்தினாள். அப்போது அவருடைய முகம் சுருங்கியதன் காரணம் அவரை, ''யானைப் பாகா!'' என்று தான் அழைத்ததுதான் என்று நம்பினாள். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் குணங்களில் ஒன்றும் இல்லாத பெண் என்றுதான் தன்னைப் பற்றி அவர் எண்ணியிருப்பார்! இதை நினைத்த போது வானதியின் உள்ளம் அடைந்த வேதனைக்கு அளவே இல்லை. ஆற்றிலே, குளத்திலே விழுந்து உயிரையே விட்டு விடலாமா என்று கூடப் பல முறை எண்ணினாள். இளைய பிராட்டி குந்தவையிடம் தான் செய்த குற்றத்தைச் சொல்லிவிடப் பல முறை

முயன்றாள். ஆனால் அதற்குத் துணிவு வரவில்லை; நா எழவில்லை. இளவரசரே குந்தவைதேவியிடம் சொல்லியிருந்தால் அவரே தன்னிடம் கேட்டிருப்பார். குந்தவை தேவி கேளாததினால் இளவரசர் சொல்லவில்லை என்று முடிவு செய்தாள். எத்தனையோ மன வேதனைக்கு மத்தியில் இந்த எண்ணம் அவளுக்குச் சிறிது ஆறுதல் அளித்தது. என்றைக்காவது ஒரு நாள் பொன்னியின் செல்வரிடம் நேரில் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பிறகு உயிரை விட்டுவிடலாம் என்று கருதினாள். ஆனால் அதற்கும் தைரியம் வரவில்லை.

பழையாறைக்குப் போன பிறகு இளவரசரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் நேரலாம் என்று தோன்றிய போதெல்லாம் ஓடி ஒளிந்து கொண்டாள். இளவரசரின் முன்னால் போவதைக் காட்டிலும் உயிரையே விட்டுவிடலாம் என்று கருதலானாள். திருநல்லத்தில் நடந்ததை அறியாத இளையபிராட்டியும் அவளுடைய தோழிமார்களும், "இந்தப் பெண் இவ்வளவு கூச்சப்படுகிறாளே!" என்று மட்டும் ஆச்சரியப்பட்டார்கள்! அவளுடைய பயந்த சுபாவத்தோடு இதுவும் சேர்ந்தது என்று நினைத்தார்கள்.

பொன்னியின் செல்வர் தன்னிடம் அருவருப்புக் கொள்வதற்கு வேறு ஒரு முக்கிய காரணமும் உண்டு என்பதை வானதி விரைவில் அறிந்து கொண்டாள். இளவரசர் அருள்மொழிவர்மர் ஒரு காலத்தில் உலகம் ஆளும் சக்கரவர்த்தியாவார் என்று பலரும் நம்பியது போல் அவளுடைய பிறந்த வீட்டிலும் நம்பினார்கள். அதனால் அவளை அருள்மொழிவர்மருக்கு மணம் செய்து வைத்துவிட வேண்டும் என்று அவளுடைய பெரிய தகப்பனார் திட்டமிட்டிருந்தார் என்பது வானதிக்கு ஒருவாறு தெரிந்திருந்தது. அந்த நோக்கத்துடனேயே அவளைப் பழையாறைக்குப் பூதி விக்கிரமகேசரி அனுப்பி வைத்திருப்பதாகக் குந்தவை தேவியின் மற்றத் தோழிப் பெண்கள் அடிக்கடி ஜாடைமாடையாகப் பேசிக் கொள்வார்கள். சில சமயம் வானதியிடமே சொல்லிப் பரிகசிப்பார்கள். "ஆகையினாலேதான் நீ இளவரசர் முன்னாலேயே போகமாட்டேன் என்கிறாய்! எங்களுக்குத் தெரியாதா உன் கள்ளத்தனம்?" என்பார்கள். இந்த வார்த்தைகள் வானதியின் காதில் நாராசமாக விழுந்தன. தான் கொடும்பாளூர்ப் பெண் என்று அறிந்ததும் யானைப் பாகனுடைய முகம் சுருங்கியதன் காரணம் இதுவாகவே இருக்கலாம் அல்லவா?

இவையெல்லாம் வானதியின் இளம் உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்த நிலைமையிலேதான் ஒரு நாள் பொன்னியின் செல்வர் ஈழத்துப் போருக்குப் புறப்பட்டார். அன்றைக்கு அரண்மனையிலிருந்த எல்லாத் தோழிப் பெண்களும் கையில் மங்கள தீபங்களுடன் நின்று அவரை வாழ்த்தி அனுப்ப ஏற்பாடாகியிருந்தது. இந்தச் சமயத்திலும் வர முடியாது என்று மறுக்க வானதியினால் இயலவில்லை. போருக்குப் புறப்படும் இளவரசரை ஒரு முறை பார்த்துவிட வேண்டும் என்ற ஆர்வமும் அவள் உள்ளத்தில் பொங்கியது. வாய் திறந்து பேசாவிட்டாலும் தன் முக பாவத்தைக் கொண்டும் நயன பாஷையினாலும் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம் என்ற சபலமும் இருந்தது. ஆனால், அவள் எண்ணியதற்கெல்லாம் மாறான சம்பவம் நடந்துவிட்டது. இளவரசர் அருகில் வந்து அவளை ஏறிட்டுப் பார்த்ததும் வானதி உணர்விழந்து தீபத்தையும் போட்டு விட்டுத் தரையில் விழுந்து மூர்ச்சையானாள். இதன் பிறகு நிகழ்ந்தவையெல்லாம் வாசகர்கள் அறிந்தவைதாம் அல்லவா?

* * *

ஓட்டுக் கூரை ஓடத்தில் மிதந்து சென்று கொண்டிருந்த வானதி திருநல்லத்தை அணுகிய போது அவளுடைய உள்ளத்தில் மேற்கூறிய சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து சென்றன. பொன்னியின் செல்வருக்குத் தன் மீது அன்பும் அநுதாபமும் உண்டு என்பதை அவள் உணர்ந்திருந்தாள். அதை அவர் இளையபிராட்டி மூலமாகவும் நேரிலேயும் தெரிவித்ததும் உண்டு. ஆனால் அவருடைய அன்பு பூரணமடையாதவண்ணம் அவ்வப்போது தடை செய்த முட்டுக் கட்டை ஒன்றும் இருந்தது. அது இன்னதென்பதையும் அவள் அறிந்திருந்தாள். இளவரசர் ஒரு காலத்தில் சக்கரவர்த்தியாகலாம் என்னும் எண்ணத்தின் பேரில் அவளை அவர் கழுத்தில் கட்டிவிடப் பார்க்கிறார்கள் என்று இளவரசர் நம்பியதுதான் அந்த முட்டுக் கட்டை. இவ்விதம் அவர் நம்புவதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. வானதியின் பெரிய தந்தை இதைப் பற்றிப் பல முறை பேசியதுண்டு. ஏன்? இளையபிராட்டி குந்தவை தேவியே அந்தச் சதியாலோசனையில் சம்பந்தப்பட்டவர்தாம். அது இன்னும் பலருக்கும் தெரிந்திருந்தது. அந்த ஓடக்காரப் பெண் பூங்குழலிகூட அதைக் குறிப்பிட்டுப் பரிகாசம் செய்யவில்லையா? ஆகையால் இளவரசர் மனத்

தில் அந்த எண்ணம் தங்கி நின்று அவருடைய அன்புக்கே ஒரு முட்டுக்கட்டையாக இருந்ததில் வியப்பில்லைதானே!

ஆனால் சற்று முன்பு வானதி செய்த சபதத்தை இளவரசர் அறிய நேரும் போது அந்த முட்டுக்கட்டை நீங்கி விடும் அல்லவா? அதை அவர் அறியுமாறு நேரிடுமா? தானே அவரிடம் சொல்லிவிட்டால் என்ன? அடி அசட்டு வானதி! உனக்குத்தான் அவர் முன்னால் நின்றால் வாய் அடைத்து விடுகிறதே! அவரை யானைப் பாகன் என்று நீ எண்ணியபோது, இந்தத் திருநல்லத்தில் சக்கரவட்டமாகப் பேசி அவரிடம் 'வாயாடிப் பெண்' என்ற பெயரும் பெற்றாய்! அதற்குப் பிறகு அவரை முகம் எடுத்துப் பார்க்கவும் வாய் திறந்து பேசவும் உன்னால் முடியவில்லையே? அநாதை வானதி! மறுமுறை நீ இளவரசரைப் பார்க்க நேரும்போது அப்படி மோசம் போய்விடாதே! துணிச்சலுடன் உன் மனத்தில் உள்ளதைச் சொல்லிவிடு! ''நீங்கள் சிங்காதனம் ஏறினாலும் நான் ஏறமாட்டேன்! அவ்வாறு சபதம் செய்திருக்கிறேன்! தாங்கள் வெறும் யானைப் பாகனாகவே இருந்து, என்னையும் தங்களுடன் யானை மீது ஏற்றிக் கொண்டு ஒரு தடவை சென்றால், அதையே சொர்க்க வாழ்விலும் மேலாகக் கருதுவேன்!'' என்று தைரியமாகச் சொல்லிவிடு!....

எல்லாம் சரிதான்! ஆனால் அவ்விதம் சொல்லுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்குமா? இந்த வெள்ளம் என்னை எங்கே கொண்டு போய்ச் சேர்க்கப் போகிறது? கரை சேராமலே முழுகிச் செத்துப் போய்விடுவேனோ! ஒரு நாளும் அவ்விதம் நேராது. அதோ கரை தெரிகிறதே! திருநல்லத்து வசந்த மாளிகையின் மகுட கலசம் தெரிகிறதே! ஆஹா! இளவரசர் யானை மேல் ஏறி வந்து பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்றியதும் என்னுடன் இதமாகப் பேசியதும் நேற்று நடந்தது போல் அல்லவா தோன்றுகின்றன?....

இது என்ன? அதோ ஒரு யானை! அதன்பேரில் ஒரு யானைப் பாகன்! வெள்ளத்தின் வேகத்தை அந்த யானை எவ்வளவு அலட்சியமாக முண்டிக் கொண்டு குன்று நகருவது போல் நகருகிறது! அதோ கரை ஏறிவிட்டது! கரையோடு மேற்கு நோக்கிச் செல்கிறது!

யானையின்மேல் கம்பீரமாக உட்கார்ந்திருப்பவன் யாராயிருக்கும்? ஒரு வேளை.... சீச்சீ! இது என்ன பைத்தியக்கார எண்ணம்? இளவரசர் இங்கே எதற்காக இப்படித் தனியாக யானை மீது வருகிறார்?

இருந்தாலும், இவன் வெறும் யானைப் பாகனாகவே இருந்தாலும், எனக்கு ஒரு வேளை உதவி செய்யக்கூடும் அல்லவா? என்னை இந்த ஓட்டுக் கூரை ஓடத்திலிருந்து, இந்தப் பெரு வெள்ளத்திலிருந்து, கரையேற்றி விடலாம் அல்லவா? நான் யார் என்று சொன்னால், என்னை யானை மேல் ஏற்றிப் பொன்னியின் செல்வரிடம் அழைத்துக் கொண்டு போகவும் கூடும் அல்லவா?

இத்தகைய எண்ணம் தோன்றியதும், வானதி, ''யானைப் பாகா! யானைப் பாகா!'' என்று கூவி அழைத்தாள்.

அது அவன் காதில் விழவில்லையோ, அல்லது விழுந்தும் அவன் இலட்சியம் செய்யவில்லையோ, தெரியாது. யானை நிற்கவும் இல்லை; யானைப் பாகன் திரும்பிப் பார்க்கவும் இல்லை! யானையின் நடை வேகமாகிக் கொண்டிருந்தது. வெகுசீக்கிரத்தில் நதிக் கரையின் வளைவு ஒன்றில் திரும்பி யானையும் யானைப் பாகனும் மறைந்து விட்டனர்.

வானதி இந்த ஏமாற்றத்தைப் பற்றி எண்ணமிடுவதற்குள் ஓட்டுக்கூரை திடீரென்று அதிவேகமாகச் சுழன்று செல்லத் தொடங்கியதாகத் தோன்றியது. ஆம், ஆம்! ஆற்று வெள்ளம் அங்கே அதிகமான வேகத்தை அடைந்திருந்தது. நதிக் கரையும், அதன் ஓரத்தில் வளர்ந்திருந்த பிரம்மாண்டமான விருட்சங்களின் தடிமனான வேர்களும் அவளுடைய சமீபத்தில் விரைந்து வந்து கொண்டிருந்தன. ஓட்டுக்கூரை ஓடம் மரங்களின் வேர்களில் மோதிக் கொள்ளப் போவது நிச்சயம். மோதிக் கொண்டதும் தூள் தூளாகித் தண்ணீரில் மூழ்கிவிடும். பிறகு தன்னுடைய கதி என்ன? தப்பிப் பிழைத்துக் கரை ஏற முடியுமா? சுழல்களில் சிக்கி மரங்களின் வேர்களில் அடிபட்டுச் சாக நேரிடுமா?

ஐயோ! இது என்ன? அந்த மரங்களின் வேர்களுக்கு மத்தியில் பயங்கரமான முதலை ஒன்று வாயைப் பிளந்து கொண்டிருக்கிறதே! அது உண்மை முதலையா? பொம்மையா? அல்லது என் உள்ளத்தின் பிரமையா?

இதோ கரை நெருங்கி விட்டது! மரங்களின் வேர்களின் மேல் ஓட்டுக் கூரை மோதிக் கொள்ளப் போகிறது!

வானதி தன் கண்களை இறுக்கி மூடிக் கொண்டாள்!

''தாயே! துர்க்கா பரமேசுவரி! தாய் தந்தையற்ற இந்த அநாதைப் பெண்ணுக்கு நீதான் கதி! என்னை உன் பாதங்களில் சேர்த்துக் கொள்!'' — என்று பிரார்த்தனை செய்தாள். (தொடரும்)



விற்பனை ஏஜண்டுகள் :

ராம்கோ கதேசிஸ், கோயமுத்தூர்-1 ○ வெங்கடேஷ் வஸ்திராலயா, சென்னை-1

எம்து ஷோரூம்கள் :

17-93, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர். ○ கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர்-12
387, மெயின் ரோடு, கோவில்பட்டி.


பிரத்தியேக விற்பனை நிலையம் :

எஸ்பி. எஸ். எஸ். ஜௌளி ஷாப், 11-12, கிழக்குச் சித்திரை வீதி, மதுரை


இடுக்கண்
களைந்திடும் நட்பு போல்
வலியைப்
போக்கிடும்
'ஆஸ்ப்ரோ'
'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன் செய்யப்படுகிறது
அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக
நிகோலஸ் (N) தயாரிப்பு
AGAS.TN

ஏன் முடியாது?

அப்பாலுக்கு அப்பால் வாழும் அறிஞர்கள்!




ஸெயின்ட் லூயி நகரில் ஜெபர்ஸன் நினைவாக எழும்பியுள்ள இந்த அலங்கார வாசல்—வரவேற்பு வளைவு — அறுநூற்று முப்பது அடி உயரம்! அமெரிக்காவில் உள்ள தேசிய நினைவுச் சின்னங்களிலே மிக உயரமானது இது தான். தலைநகர் வாஷிங்டனில் உள்ள வாஷிங்டன் நினைவு ஸ்தூபியைவிட இது உயரமானது. இதைக் கட்ட ஆரம்பித்துச் சில நாட்களில், 'இரண்டு கால்கள் தனித் தனியே எழும்புகின்றனவே, இவை இரண்டும் நடு மையத்தில் இணை சேரும் என்பது என்ன நிச்சயம்?' என்று சந்தேகப்பட்டவர்கள் உண்டு. ஆயின் அவை பாங்காக இணை சேர்ந்து மிக அழகான வரவேற்பு வளைவாக மாறத்தான் செய்தன. ஈரோ ஸாரினென் என்ற கட்டடக் கலை நிபுணரின் அற்புதப் படைப்பாகிய இந்த வளைவின் சிரத்துக்கு மக்கள் செல்லலாம்! ஆம், வெறும் தூண் போன்ற அமைப்புடையது அல்ல இது. இதனுள்ளே பார்வையாளர்களை உயரே சுமந்து செல்லும் வண்டிகள் இயங்கு கின்றன! மனம் இருந்தால் ஆயிரத்து எழுபத் தாறு படிகளில் ஏறியும் உச்சிக்குச் செல்ல லாம்!

*   *   *

மேற்கு வர்ஜீனியா மாநிலத்தில் கிரீன் பாங்க் என்னுமிடத்தில் தேசிய வான சாஸ்திர நிலையம் இருக்கிறது. அங்கு ரேடியோ டெலஸ்கோப்பின் உதவியுடன் சராசரத்தின் பல கோள்கள் பற்றிய ஆராய்ச்சிகள் நடக் கின்றன.

விண்வெளியில் உள்ள கோள்கள் அனுப் பும் ரேடியோ அலைகளை ஆராய்வதே ரேடியோ வான சாஸ்திரம் எனப்படுகிறது. சூரியன், சந்திரன், கிரகங்கள், சூரியனை உள்ளடக்கிய நட்சத்திர மண்டலங்கள் ஆகியவை ரேடியோ அலைகளை எழுப்புகின்றன. ஆயின் விநோதம் என்னவெனில், உலகிலுள்ள மிகச் சக்தி வாய்ந்த தூர திருஷ்டிக் கண்ணாடியின்-டெலஸ் கோப்பின் — உதவி கொண்டும் பார்க்க முடி யாதபடி அத்தனை தொலைவில் உள்ள கோள் களிலிருந்தும் ரேடியோ சமிக்ஞைகள் கிடைத் துள்ளன. இவ்விதம் விநோத ரேடியோ சமிக்ஞைகள் கிடைப்பதால் அங்கெல்லாம் மிகவும் அறிவாளிகளான உயிரினங்கள் இருக்கலாம் என்றும் அவர்கள் நம்முடன் தொடர்பு கொள்ள முயலுகிறார்கள் என்றும் நம்ப இடம் இருக்கிறது என்கின்றனர், சில விஞ்ஞானிகள். இது பற்றித் தீர்மானமாக அவர்கள் ஏதும் கூறவில்லையானாலும், ரேடியோ சமிக்ஞைகளைப் பதிவு செய்து ஆராய்ந்து வருகின்றனர்.

இப்போதைக்கு விஞ்ஞானக் கதைகளில் மட்டும் பிற கோள்களில் வசிக்கும் உயிரினங்



களைப் பற்றிப் படித்து வருகிறோம். ஆனால் விளையாட்டுப்போல் ஆரம்பித்த விண்வெளிப் பயணம் இன்று அடைந்து வரும் அபிவிருத்தி யைப் பார்த்தால் எதிர்காலத்தில் எதிர் பாராத அதிசயங்கள் காத்திருக்கின்றன என்றல்லவா தோன்றுகிறது.

ராமாயணம்

ராஜாஜி

82. சரணாகதி


தன்னுடைய அபிப்பிராயத்தை அறிய ராமன் விரும்புவதைக் கண்டு பொருள் செறிந்த இன்சொற்களைப் பேசும் வாயுபுத்திரன் சொன்னான்:

''நீர் நம்மைக் கேட்பது என்னத்திற்கு? பிரஹஸ்பதியே வந்தாலும் உமக்கு மேல் என்ன யோசனை சொல்வான்? எனக்கு முன் பேசியவர்கள் சொன்ன புத்திகளில் நான் நன்மை காணவில்லை. சேர்த்துக் கொள்ளுவதில் அபாயம் இருந்தால் அந்த அபாயம் உடனே நேரிடும். பரீட்சை செய்வதற்கு இடம் ஏது? தவிர, இந்த விபீஷணன் மறைந்து கொண்டு வரவில்லை. நம்முன் நேராகத் தானே வந்து பகிரங்கமாக அனைவருக்கும் எதிரில் நிற்கிறான். சாரர்கள் இவனிடம் போய் ரகசியம் தேட என்ன இருக்கிறது ?

''திடீர் என்று அகாரணமாகவும் அவசரமாகவும் சத்துருக் கூட்டத்திலிருந்து ஒருவன் வந்து நின்றால் அவனை எப்படி நம்பலாம் என்று சந்தேகம் சொன்னார்கள். தன் தமையன் ராவணனுடைய துர்க் குணங்களை விபீஷணன் கண்டு அவனை வெறுத்தான் என்பதில் என்ன வியப்பு? உம்மிடம் வீரத்தையும் தர்மத்தையும் பெருந்தன்மையும் இவன் கண்டான் என்பதில் என்ன வியப்பு? ஆனபடியால் இவன் வந்த சமயமும் சந்தர்ப்பமும் என் அபிப்பிராயப்படி சந்தேகத்துக்கு இடம் கொடுக்கவில்லை.

''இவனைச் சேர்த்துக் கொள்வதற்கு முன், தூதர்கள் இவனிடம் கலந்து கேள்வி மறுமொழிகளின் மூலம் இவன் குணத்தை அறிந்துகொள்ளலாம் என்று சிலர் சொன்னார்கள். ஒருவனைப் பற்றி நாம் சந்தேகிக்கிறோம் என்பது அவனுக்குத் தெரிந்து விட்டால் அவன் இயற்கைக்கு மாறாகத்தான் நடந்து கொள்வான். சுபாவப்படி பேசவோ நடந்து கொள்ளவோ அவனால் முடியாது. நாம் அவனிடம் குற்றத்தைத் தேடுகிறோம் என்கிற பயம் இருந்து கொண்டேயிருக்கும். அதுவே இயற்கைப் போக்கைத் தடுத்து விடும். வந்திருக்கும்





ராக்ஷசனுடைய முகம் பேச்சு இவற்றில் எனக்கு ஒரு சந்தேகமும் தோன்றவில்லை. கவலையற்ற இவன் முகமே இவன் உள்ளத்தில் வஞ்சனையில்லை என்பதற்கு அத்தாட்சி. நெஞ்சத்துள் இருப்பதை ஒருவன் எவ்வளவு மறைத்தாலும் அதை அவன் முகம் காட்டி விடும். இது நீதி சாஸ்திரத்தில் கண்ட உண்மை.* விபீஷணன் தங்களிடம் உண்மையாகவே சரண்புக வந்திருக்கிறான் என்பது என் அபிப்பிராயம். இப்படி அவன் வருவதில் வியப்பு ஒன்றுமில்லை. ராவணனுடைய தோஷங்களை உணர்ந்தவன். லங்கேசன் தோல்வி அடைவான் என்பதைக் கண்டு கொண்டவன். தாங்கள் வாலியை வதம் செய்து சுக்ரீவனுக்கு வானர ராஜ்யம் தந்திருக்கிறீர்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். அப்படியே இவனும் லங்காதிபத்தியத்தை அடைய

---

* அடுத்தது காட்டும்
பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் -குறள்706

லாம் என்று வந்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இதில் குற்றம் ஒன்றுமில்லை! சந்தேகப்படுவதற்கு இடமுமில்லை. ஆனபடியால் இவனை நாம் சேர்த்துக் கொள்ளலாம் என்பது என் அபிப்பிராயம்.

''என் புத்திக்கு எட்டிய வரையில் நான் சொன்னேன். முடிவில் தாங்கள் எப்படி நிச்சயிக்கிறீர்களோ அப்படிச் செய்வீர்களாக. தங்களுடைய யோசனைக்கு மேல் எங்களுடைய யோசனை என்ன இருக்கிறது?'' — இவ்வாறு ஹனுமான் சொல்லி முடித்தான்.

இப்படி வானரத் தலைவர்கள் விபீஷணனைப் பற்றிப் பலவிதமான யோசனைகள் சொன்னார்கள்.

சாமான்ய தருமத்தின்படி கும்பகர்ணன் நடந்து கொண்டான். அது எல்லோருக்கும் விளங்கும் விஷயம். அதில் சிக்கல் ஒன்றும் இல்லை.

சாமான்ய தருமத்துக்கும் மேம்பட்டதான விசேஷ தருமத்தைத் தழுவி நடந்து கொண்டதே விபீஷணனுடைய 'குற்றம்'. தருமத்துக்கு விருத்தமாக அண்ணனுடைய காரியங்கள் விபீஷணனுடைய அந்தராத்மாவுக்குத் தந்த வேதனையை அவன்தான் உணர்வான். மற்றச் சாமான்யர்களுக்கு அது விளங்காது. அதனால் அவனுடைய நடத்தையை ராமனிடமிருந்த வானரர்களும் சரியாக உணரவில்லை. தற்காலத்திலும் விபீஷணனுடைய காரியத்தில் குற்றமில்லை என்பதை மக்கள் உணர்வது கஷ்டம். காரணங்களை எடுத்துச் சொல்ல வேண்டியதாகிறது.

வானரத் தலைவர்கள் சொன்னதையெல்லாம் ராமன் சாவதானமாகக் கேட்டான். கடைசியில் வாயுபுத்திரன் சொன்னதைக் கேட்டு மிகவும் சந்தோஷமடைந்தான். தன் தருமத்தைத் தான் காப்பாற்றுவதில் எப்போதும் உறுதியுள்ள ராமனுக்கு ஹனுமானுடைய பேச்சு மிக்க சாந்தி தந்தது. நல்லவன் ஒருவன் தான் நடத்த வேண்டிய தருமத்துக்குப் பிறர் யோசனையும் பக்கபலமாக வந்து சேர்வதைக் கண்டால் அவன் மனத்துக்கு ஆறுதல் ஏற்படுகிறது.

''சிநேகிதன் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் என்னிடம் வந்தால் அவனை நான் எப்படித் தள்ள முடியும்? இது என்னுடைய தர்மம். எனக்கு நண்பர்களாக அமைந்து எனக்காகப் பாடுபடும் நீங்கள் அனைவரும் இதை அறிய வேண்டும். 'சரணம்' என்று சொல்லிக் கொண்டு ஒருவன் வந்தால் அவனிடத்தில் காணப்படும் குற்றங்களைப் பொருட்படுத்தக் கூடாது.''

இப்படி ராமன் சொன்னதைக் கேட்ட சுக்ரீவன் சமாதானப்படவில்லை.

''இந்த ராக்ஷசன் நல்லவனாகவே இருக்கலாம். ஆனால் தன் சொந்த அண்ணன் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிய சமயத்தில் அவனைக் கைவிட்டு இங்கே வந்திருக்கிறான். இத்தகைய ஒருவனுக்குச் சமயத்தில் நம்மையும் கைவிடுவதில் ஒரு கஷ்டமும் இராது. தன் தமையனுக்குச் செய்ததை நமக்கு ஏன் செய்ய மாட்டான்?'' என்று கேட்டான்.

சுக்ரீவன் இதைச் சொன்னபோது ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து, தெரிந்தும் தெரியாததுமான ஒரு சிறிய புன்சிரிப்புச் செய்தான் என்கிறார் முனிவர் வால்மீகி. தன்னுடைய கதையையே மறந்துவிட்டுச் சுக்ரீவன் பேசியதை முனிவர் இப்படிரஸோக்தியாகக்காட்டுகிறார்.

சக்கரவர்த்தித் திருமகன், ''நீர் சொல்வதை நான் உணர்வேன். ஆயினும் நான் சொல்வதைக் கேட்பீர். அரச பதவியில் இருப்பவர்கள், அண்ணன் தம்பி தாயாதிகள், அடுத்த தேசத்து ராஜாக்கள் இவர்களை எப்போதுமே சந்தேகப்படுவது சகஜம். சந்தேகப்படாத நல்லவர்களும் உண்டு. ஆனால் பெரும்பாலோர் தங்களைக் கண்டு மற்றவர்கள் பொறாமைப்படுகிறார்கள் என்றே எண்ணுவார்கள். ராவணன் விபீஷணனை இப்படிச் சந்தேகித்து நிந்தித்ததில் என்ன ஆச்சரியம்?

''இனி லங்கையில் இருந்தால் தனக்கு அபாயம் என்று விபீஷணன் பயப்படுவதும் சகஜமே. ஆனபடியால் அவன் நம்மிடம் சரண் புக வந்ததில் வஞ்சனை ஒன்றுமில்லை என்பது என் அபிப்பிராயம். தவிர ராஜ்யத்தில் ஆசை வைத்தே வந்ததாகவும் இருக்கலாம். ராவணன் அழிவான். நாம் வெற்றி பெறுவோம். அதனால் அண்ணனுடைய ராஜ்யத்தைத் தான் அடையலாம் என்றே நம்மிடம் வந்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இதில் என்ன பெரிய குற்றம்? லக்ஷ்மணா! எல்லாரும் நம்முடைய பரதனைப்போல் இருப்பார்களா!'' என்றான்.

இப்படிச் சொல்லிவிட்டு ஒரு கணம் ராமன் பரதனை நினைத்துத் தியானத்தில் மூழ்கினான். ''என்னைப் போன்ற பாக்கியவான் யார் உண்டு உலகத்தில்! பரதனைப் போன்ற ஒரு சகோதரனைப் பெற்றேன். நான் காடு சென்ற துக்கத்தினால் தகப்பனார் உயிரையே துறந்துவிட்டார். அத்தகைய பிரியமான தகப்பனை நானும் லக்ஷ்மணனும் பெற்றோம். உங்களைப் போன்ற நண்பர்களையும் என்னைத் தவிர வேறு யார் பெறுவார்?'' என்றான் ராமன். (தொடரும்)



இப்பொழுது
:ப்ரெஸ்காவை
உணர்ந்து பாருங்கள்
fresca
Beauty Talc
இரண்டு அளவுகளில்
கிடைக்கிறது.
கோத்ரெஜ் அளிக்கும்
:ப்ரெஸ்கா பியூடி டால்க்
:ப்ரெஸ்கா என்றாலே புத்துணர்ச்சிதான்!
Interpub GF—3 TM

காணிக்கை

ஆர்வி

அத்தியாயம் 47

இந்த உலகமே திடீரென்று இருண்டு விட்டதுபோல் தோன்றியது யாமினிக்கு. இவ்வளவு தூரத்துக்கு வந்த பிறகு இனி யார் மீது, எதன் மீது களங்கு கரையற்ற அன்பும் நம்பிக்கையும் வைப்பது என்று அவளுக்குப் புரியவில்லை. கோழையைப் போல் அவள் அழுது புலம்பவில்லை. ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. கெஞ்சவும் இல்லை; மிஞ்சவும் இல்லை. அவள் தீரமாகக் காணப்பட்டாள். புயல் வீசுவதற்கு முன்னால் நிலவுகிற அமைதியோடு இருந்தாள். உள்ளத்தினுள்ளே எரிமலை ஒன்று கனன்று குமுறிக் கொண்டிருந்தது.

பாஸ்கரன் பெரிய எதிர்ப்பு ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டுதான் வீட்டுக்கு வந்தான். ஆனால் யாமினி வாயைத் திறக்கவில்லை. அவனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. எதைச் சாக்கிட்டுக் கொண்டாவது அவள் சண்டையிட வந்தால் தேவலை போல் இருந்தது அவனுக்கு. ஏதோ ஒருவிதமாக அவளோடு சரஸமாகப் போவதற்கு வழி பிறந்து விடும். கணவன் — மனைவிக்குள்ளே சமயம்போல் யாரோ ஒருவர் தாழ்ந்து போவதில் அவமானம் என்ன இருக்கிறது? அவன் தணிந்து போகத் தயாராகவே இருந்தான். அதில் தனிச் சுகமும் உண்டு; லாபமும் உண்டு. இது தெரிந்துதானோ என்னவோ, யாமினி அப்படி நடக்கச் சிறிதும் இடம் கொடுக்கவில்லை. அவள் நெருப்புப் பிழம்பாக இருந்தாள். நெருங்கிப் பேசவே முடியவில்லை; அனல் அடித்தது. ஆகவே, அவனும் தன் பலவீனத்தைக் காட்டிக் கொள்ளாமல், கோபத்தோடு பேசாமல் இருப்பது போலவே நடித்தான்.

இப்படி இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றாம் நாள் காலையில் எழுந்ததுமே அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். கிட்டத்தட்ட சரணடைந்து விட்டது போலத்தான். அநேகமாக அவளைச் சமாதானப்படுத்தியும் இருப்பான். அதற்குள் எதிர்பாராதபடி அஜிதாவிடமிருந்து போன் வந்து காரியத்தைக் கெடுத்து விட்டது.

''யாமினி! இங்கே பார்; உன்னைத்தான்!'' என்று யாமினியை வழி மறித்துக் கூப்பிட்டான்.

அவள் நின்றாள்; திரும்பிப் பார்த்தாள். தெளிந்த முகத்தில் தேசு பொலிந்தது.

''எங்கிட்டே பேசவே போறதில்லையா, நீ?''

இது என்ன பேச்சு என்று அவள் மேலே போகப் பார்த்தாள்.

''நில்லு, சொல்றேன்! அப்படி எத்தனை நாளைக்கு இருப்பே?''

அவன் எழுந்து வந்து அவளுடைய கையைப் பிடிக்க வந்தான். அவள் சட்டென்று கையை ஒதுக்கிக் கொண்டு, ''ம்ம்....'' என்று எச்சரித்தாள்.

''என்னிக்கும் இப்படியே இருந்துடுவியா?'' அவன் போகவிட மாட்டான் போலிருந்தது.

'' அதை இப்ப எப்படிச் சொல்ல முடியும்?''

''சரி; எப்பச் சொல்லுவே?''

'' எதை?''

''என்கிட்டே ஏன் பேசல்லே என்கிறதை!''

'' சொல்லணுமா, அதை?''


''வேண்டாம். தெரியும். தப்பு என் மேலேதான். ஆனால் என்னைத் தெரியாதா உனக்கு? வெளிப் பார்வைக்கு நான் எப்படி நடந்திண்டிருந்தாலும், அதுக்கெல்லாம் என்ன காரணம்னு உனக்குத் தெரியாதா? அந்த நம்பிக்கை உனக்கு இருக்கோ, இல்லையோ?''

யாமினி ஏளனமாக நகைத்துக் கொண்டாள். தெரியுமாவது, நம்பிக்கையாவது! அவன் கணவன். அவனை நம்பினால்தான் வாழ்வு. இல்லாவிட்டால் ஏது?

''என்ன பேசாமெ இருக்கே? நம்பிக்கை இருக்கோ, இல்லையோ?''

அவள் தலை அசைப்பதற்குத்தான் இருந்தாள். அந்தச் சமயத்தில்தான் அந்த டெலிபோன் மணி அடித்தது.

அந்த நேரத்தில் அவனுக்கு டெலிபோன் செய்யக்கூடியவர்கள் அஜிதாவைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள்? அதனால் தான் சிறிது தயங்கியவன் உடனே பாய்ந்து டெலிபோனை எடுக்கப் போனான். யாமினி இந்த இக்கட்டி லிருந்து தப்பியவளைப்போல் பெருமூச்சு விட்டாள். தன்னுடைய பலவீனம் அவ ளுக்கு இப்போதுதான் மிகத் தெளிவா கத் தெரிந்தது. தன் மனம் இவ்வளவு சுலபத்தில் தளர்ந்து விடக் கூடியது



என்று அவள் நினைக்கவேயில்லை. நல்ல வேலை; அவன் இதைக் கவனிக்கவில்லை.

அன்றைக்கு மத்தியானமே அஜிதா அவர்கள் வீட்டுக்கு வந்து விட்டாள். யாமினிக்கு அப்புறம்தான் தெரிந்தது. அவள் இன்னும் சில நாட்களுக்கு இந்த வீட்டிலேயேதான் இருக்கப் போகிறாள் என்பது. அவளுக்கு நெஞ்சமே வெடித்து விடும்போலிருந்தது. அவளை மரியாதைக் காவது ஒரு வார்த்தை கேட்காமல் பாஸ்கரன் இப்படிச் செய்தது வேண்டு மென்றே அவளை உதாசினம் செய்தது போல் இருக்கவே, யாமினி வெகுண் டாள். தன்னை ஒரு பொருட்டாக மதிக் காத வீட்டில் இருப்பதே பெரிய இழி வாகப்பட்டது அவளுக்கு.

''உங்களுக்குத் தெரியுமா அவள் இங்கேயே வரப் போறது? அவர் உங் களையாவது ஒரு வார்த்தை கேட் டாரா ?'' என்று மாமியாரிடம் போய்க் கேட்டாள்.

'' ஊகும்; தெரியாது.''

''இப்படிச் செய்யலாமா? நீங்களா வது அவருக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா ?''

''ஏன், அதிலென்ன தப்பு? அங்கே தான் ஒரே கேசும் ரகளையுமா இருக்கே; என்னமோ சொத்தாம், மோசடியாம், வீட்டைச் சோதனை போடறதாம்னு! அந்தப் பொண்ணு அங்கே எப்படித் தனியா இருக்கும்? எப்பவுமே இங்கே இருந்துடப் போறாளா? ஒரு மாசமோ, பதினைஞ்சு நாட்களோதானே இருக்கப் போகிறாள். இதுக்குப் போய் நீ என்ன சொல்லணும்னு நினைக்கிறே? செல வாயிடப் போறதேன்னு நினைக்கிறியா? எத்தனை ஆனாலும் கொடுத்துட்டுப்

போகிறான். அவனுக்கு என்ன பணத்துக்கு? இப்ப நாம சாப்பிடறதே அவள் சாப்பாடுதானே! அவனுக்கு லட்சம் லட்சமான்னு கேக்கறதுக்கு முன்னாடியே தூக்கிக் கொடுத்திருக்காள். இல்லாட்டா நீ பொறந்த வீட்டிலேயிருந்து கொண்டு வந்து போட்டிருக்கியா? ஒரு நோட்டா, சீட்டா? அவள் எதுக்காகக் கொடுக்கணும், யாரை எண்ணிக் கொடுத்திருக்கா? யோசனை பண்ணிப் பாரு. அவள் எங்கேயோ நடுத் தெருவிலேயிருந்து வந்துட்டான்னு நினைக்கிறியா? எனக்குத் தமையன் பொண்ணுடியம்மா அவள்—அவனுக்கு மாமா பெண். எங்கிருந்தோ போகிற வழியிலேயிருந்து பிடிச்சுண்டு வந்துடல்லே. ஜாதி விட்டு ஜாதி ஓடிவந்துடல்லே. பார்க்கப் போனால் அவள்தான் இங்கே வந்திருக்க வேண்டியவள். இந்தத் துப்புக்கெட்ட பிள்ளைக்குப் பொகப்பில்லே. வந்த லட்சுமியை வேண்டாம்னு சொல்லிட்டு, வசமா ஏமாந்து போய் நிக்கறது. அப்பவே முட்டிக்கிண்டேன். கேட்டானா, என் பேச்சை? இப்ப யார் முதல் போட்டு ஒத்தாசை செய்ய வருவான்னு அலையறான்! யாரோட நல்ல காலமோ, அவள் ஊரோட வந்து சேர்ந்திருக்காளோ, இவன் பொழைச்சானோ? மாமா பொண்ணு, அத்தை பிள்ளை என்கிற முறையிலே அவர்கள் என்னமோ சந்தோஷமா, சகஜமாப் பழகினால் அதிலே என்ன தப்பு? என்ன குடி முழுகிப் போயிடுத்துன்னு எங்கிட்டே வந்து முறையிடறே? சொந்த மனுஷான்னு நாங்க இருக்கிறப்போ அது வேறே எங்கே போகும்? போனாத்தான் விட்டு விட்டு வேடிக்கை பார்க்க முடியுமோ?''

பார்வதியம்மாள் பேசி முடிக்கிற வரையில் யாமினி சிலையாகச் சமைந்து நின்றாள். கூரிய அம்புகள் உடல் முழுவதும் துளைத்து விட்டன. அவள் எப்படி அங்கிருந்து மாடிக்கு வந்தாள், எப்படிப் படுக்கையில் போய் விழுந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை. பாஸ்கரனுடைய கை ஸ்பரிசம் பட்டபோதுதான் அவள் கண்களைத் திறந்து பார்த்தாள். மணி ஏழுக்கு மேல் ஆகியிருந்தது. விளக்குகள் எல்லாம் போடப்பட்டிருந்தன.

''என்ன செய்யறது உடம்பை?'' என்று அவளைக் கேட்டான் பாஸ்கரன்.

அவள் அவனையே பார்த்தபடி படுத்திருந்தாள்; எழுந்திருக்க முடியவில்லை.

'' உனக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் என்னைக் கேட்கிறதுக்கு என்ன? அம்மா சுபாவம்தான் தெரியுமே — அவள்கிட்டே போய்ப் பேச்சுக் கொடுப்பானேன்?''

''எனக்கு இப்ப எதுவுமே சந்தேகமில்லையே. எல்லாம்தான் துளிக்கூடச் சந்தேகத்துக்கு இடமில்லாமே தெளிவாகத் தெரிஞ்சிருக்கே. இன்னும் ஏது சந்தேகம்?''

'' உன்னுடைய சந்தேகத்துக்கும் பாத்துக்கும் ஒரு காரணமும் இல்லே. நீயாகத்தான் வீணா சந்தேகப்படறே! வீணா உன்னையே போட்டு அலட்டிக்கிறே!''

''அப்படியே இருக்கட்டும். ஒண்ணு மட்டும் ரொம்பத் தயவாக் கேட்டுக்கிறேன். எதுவாயிருந்தாலும் என் கண்ணுக்கு எதிர்த்தாப்பலேயே வேண்டாம்: கண் காணுமே இருந்துட்டா ஒண்ணுமே தெரியாது. எனக்கு இந்த ஒத்தாசை செய்தால் போதும். வேறே எதுவுமே கேக்கலே'' என்று கண்களை மூடிக் கொண்டாள் அவள்.

''இதோ பார், நீ நினைக்கிறது எனக்குத் தெரியறது. என் மேலே உண்மையிலே உனக்கு நம்பிக்கையில்லே. விஷயம் அதுதான். அஜிதா ஏன் வர வேண்டியிருந்ததுன்னு தெரிஞ்சா நீ இதைச் சொல்லமாட்டே!''

''எனக்கு ஒண்ணுமே தெரிய வேண்டாம்......''

''சரி; ஆனால் கொஞ்ச நாளைக்கு அவள் இங்கே இருந்துதான் தீரணும்.''

'' வேண்டாம்; உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். என்னாலே இதையெல்லாம் சகிச்சுக்கவோ, பொறுத்துக்கவோ முடியாது. வேண்டாம்.''

''இதோ பார், அவள் தயவு எனக்கு வேணும். லட்சியம்னு நான் ஏதோ கோட்டை கட்டிண்டிருக்கேன். அது நிறைவேறணும் எனக்கு. உன் குருட்டுச் சந்தேகத்துக்குப் பயந்துண்டு அவளைப் போகச் சொல்லிப் பகைச்சுக்க நான் தயாராயில்லே.''

'' அப்ப அவள் இருப்பாள்?''

''ஆமாம்; இருப்பாள்.''

யாமினி மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள். அவள் இதயமே வெடித்து விடும் போலிருந்தது. சொல்லக் கூசிய வார்த்தைகள் அவள் அறியாமலே வெளிவந்தன:

'' அப்ப அவளே இருக்கட்டும். எனக்கு இங்கே வேலையில்லே!''

பாஸ்கரனுக்கு மண்டையில் அடி விழுந்தது போல் இருந்தது. யாமினி இப்படிப் பேசுவாள் என்று அவன் எதிர் பார்க்கவில்லை.

''சரி; நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன்!'' என்று சொல்லி

விட்டு அவன் அந்த இடத்தை விட்டுச் சென்றான்.

மணி ஏழரை. யாமினி அவன் போனவுடனே வேகமாக எழுந்தாள். தன் துணிமணிகளைச் சேகரித்துப் பெட்டியில் அடக்கினாள். தன்னுடைய பணம் என்று தனியே இருந்ததை எடுத்துக் கொண்டாள். பாஸ்கரன் இங்கே வந்தபிறகு வாங்கிப் போட்டிருந்த நகைகளைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு பெட்டியோடு கீழே இறங்கி வந்தாள். பாஸ்கரன், அஜிதா, பார்வதியம்மாள் மூவரும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். பெட்டியை வாசற்படிக்கு வெளியே ஓரமாக வைத்துவிட்டு, வெளியில் இருந்த வேலைக்காரச் சிறுவனைப் பார்த்து ஒரு டாக்ஸி கொண்டு வரச் சொன்னாள்.

மாமியாருக்கும் கணவனுக்கும் நமஸ்காரம் செய்தாள். கையிலிருந்த நகைகளைப் பந்தாகச் சுருட்டிப் பார்வதியம்மாளின் கையிலே கொடுத்துவிட்டு, கண் கலங்க, நாத் தழுதழுக்க, ''நான் போயிட்டு வர்றேன்!'' என்று பொதுவாகச் சொன்னாள். எல்லாரும் மலைத்துப் போய் இருக்கும்போதே — அவள் பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அஜிதா மட்டும் சட்டென்று முன்னால் வந்து அவளைத் தடுத்தாள்.

''என்ன யாமினி, என்ன இது? நான் இங்கே வந்துட்டேன்னு நீ கோபமாப் புறப்பட்டுட்டியா? அதுக்காக நீ ஏன் போகணும்?'' என்று வழியை மறித்தாள்.

''எனக்கு ஒரு கோபமுமில்லே. நீ இரு; நான் போயிட்டு வர்றேன்!'' என்று அவளை விலக்கிக் கொண்டு வாசல் பக்கம் போனாள்.

அவள் போவதற்கும் டாக்ஸி வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. அவள் திரும்பிப் பார்க்கவில்லை. பாஸ்கரனோ, பார்வதியம்மாளோ அவளைத் தடுக்கவும் இல்லை. பெட்டியைக் காலடியில் வைத்துவிட்டு அவள் ஏறிக் கொண்டாள். டாக்ஸி புறப்பட்டு விட்டது.

''எழும்பூரா, சென்டிரலா?'' என்று கேட்டான் டிரைவர்.

''எழும்பூருக்குத்தான்!'' என்றாள் அவள்.

அத்தியாயம் 48

பொல பொல வென்று பொழுது விடிந்த போது வீரசோழபுரம் அரசங்குளத்தடியில் வந்து பஸ் நின்றது. யாரோ சொல்லியனுப்பி வந்து காத்திருப்பவன் போல, யாமினி பஸ்ஸை விட்டிறங்கியதுமே அவள் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டான் நாகப்பன்.

''வாங்க குளந்தே, வாங்க! யாரோ வ ர் ரு ங் களாங் காட்டியுமின்னில்லே நினைச்சிட்டேன். அப்புறம்தான் அசப்பிலே முகம் தெரிஞ்சுது. அதான் ஓடியாந்தேன்!'' என்று அவன் தன் மகிழ்ச்சிப் பெருக்கைக் காட்டிக் கொண்டான்.

உள்ளத்திலிருந்த குமுறலையெல்லாம் தணிப்பது போல் பிறந்த மண் வாடை அவளைத் தழுவியது. நெஞ்சு கொண்ட மட்டும் அந்த மணத்தை நுகர்ந்தவளாய் அப்படியே சிறிது நேரம் லயித்து நின்றாள். பெட்டியை எடுத்துக்கொண்டு வர நாகப்பன் கிடைத்தது இன்னும் உற்சாகமாய் இருந்தது.

''ஐயா வீட்டுக்கா, நம்ம வீட்டுக்கா?'' என்று கேட்டான்.

அவளுக்கு இத்தனை நேரம் வரையில் இந்த யோசனையே தோன்றவில்லை. என்ன சொல்வது என்று தெரியாமல் கொஞ்சம் தயங்கினாள். முன்னறிவிப்பு இல்லாமல் மன்னியைச் சந்திப்பதற்கு அத்தனை தைரியம் வரவில்லை. அவள் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு அவகாசம் வேண்டும். ஆகையால் அரசங்குளத்தின் வடவண்டைக் கரை வழியாக, குறுக்குப் பாதையில் வீட்டுக்குப் போய் விடலாம். அதுதான் நல்லது. இந்தக் காலை வேளையில் அதிகம் பேர் கண்ணில் படாமல் வீட்டுக்குப் போய்ச் சேருவதைத்தான் அவள் விரும்பினாள்.

''முதல்லே நம்ம வீட்டுக்கே போயிடறேன். அப்புறமா அங்கே வர்றேன்...''

''அதான் தேவலாம். வந்த களைப்புப் போகச் சௌகரியமா இருக்கலாம்; கொள்ளலாம். ஐயா வீட்டுக்கு வந்திட்டா வசதிப்படாதுதான்!''

இந்த நாகப்பன் அவள் பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோது அவளைப் போன்ற மாணவிகளை என்ன விரட்டு விரட்டுவான்? பியூன் நாகப்பன் என்றால் எல்லாருக்குமே கொஞ்சம் பயம் தான். அவனா இன்றைக்கு இவ்வளவு பவ்வியமாகப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு இதமாகப் பேசுகிறான் என்று அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது. பட்டணத்தில் உயர்ந்த அந்தஸ்தில்



"யார் நீங்கள்? எதற்கு எனக்கு சாக்லெட் தருகிறீர்கள்?"

"தெரியாது? பஸ் ஸ்டாப்பில் நான் உன்னைச் சந்திக்க ஆரம்பித்து இன்று நூறுவது நாள்!"

இருக்கிறவள் என்ற காரணமாக இருக்கலாம். இன்று அவள் எந்த நிலையில் ஊருக்குத் திரும்பி வந்திருக்கிறாள் என்று தெரிந்தால் இவன் பேச்சு எப்படியிருக்குமோ? நாளைக்கு ஊரார் என்ன பேசுவார்களோ என்பதை நினைத்த போதும் அவள் உடல் குன்றியது. எல்லாவற்றையும்விட அத்தை எப்படி இதைத் தாங்கிக் கொள்ளப் போகிறாளோ என்பதை அவளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. போன தடவை வந்தபோது அத்தையின் பேச்சை மீறிக் கொண்டு போனதனால்தான் இப்படி இந்த நிலையில் திரும்பி வரும்படியாக ஆகிவிட்டதோ?

குறுக்குப் பாதை புளிய மரத்தடியில் வந்து தெருவிலே ஏற்றிவிட்டது. நல்ல காலம், இரண்டொரு சிறுவர் சிறுமியரைத் தவிர அவள் வந்ததைத் தெருவில் யாரும் கவனிக்கவில்லை. வீட்டுக்குச் சென்றதும் மனசு கனத்தது.

"அத்தை!" என்று கூவிக் கொண்டு அவளுடைய தோளின்மீது சாய்ந்தாள்.

தன் மீது சாய்ந்த யாமினியை இரு கைகளாலும் தழுவிக் கொண்டு கொழு கொம்பு மாதிரி நின்ற அத்தை உணர்ச்சி வசப்பட்டுத் திகைத்துப் போனாள். தோள்பட்டை யெல்லாம் கண்ணீர் வழிந்ததை உணர்ந்த அத்தை யாமினியை இரு கைகளாலும் முன்னால் இழுத்து நிறுத்தினாள்.

"நீ மட்டும்தான் வந்தியா, பாப்பா?"

"ஆமாம்" என்பது போல் உதடுகளை இறுக்கிக் கொண்டாள் யாமினி.

அடுத்தகணமே அத்தைக்கு உண்மை விளங்கி விட்டது. செவிப்புலனுக்கும் எட்டாத அந்த நுட்பமான சுருதி பேதத்தை அவள் கண்ணாலேயே கண்டறிந்து விட்டாளோ, என்னவோ? அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

கைக்குள் இருந்த யாமினியின் முகத்தை மார்போடு சேர்த்து அணைத்துத் தோளிலே சாத்திக் கொண்டு, "என் கண்ணே, என் செல்லமே!" என்று சொல்லுக்கு அடங்காத பாசத்தோடு முனகினாள்; தலையையும் முதுகையும் தடவிக் கொடுத்தாள்.

"நான் வர்றேம்மா!" என்று புறப்பட்டான் நாகப்பன். அதை இருவருமே கவனிக்கவில்லை.

வெகுநேரம் கழித்துத்தான் அத்தையும் யாமினியும் சுயநிலைக்கு வந்தார்கள். யாமினி மெல்ல மெல்லச் சொன்னதை யெல்லாம் அத்தை அசாதாரண தீரத்தோடு வாங்கிக் கொண்டாள்.

"கெடக்கு விட்டுத் தள்ளு. நீ வந்து சேர்ந்தியே, அதைச் சொல்லு! தலைச்சனுக்குச் செய்யக்கூட நாங்க இளைக்கப் போயிட்டமான்னு மங்களாம்பா சந்நிதியிலே எத்தனை தடவை முறையிட்டிருப்பேன்? அதெல்லாம் வீண் போயிடுமா? இன்னிக்குக் கருக்கு வெளுக்கிற சமயத்திலேகூட கட்டைச் சுவர் மேலே உட்கார்ந்து காக்கா கத்தறதே, என்னடியம்மா சேதின்னு நினைச்சேன். சித்தே நேரம்கூட ஆகல்லே. 'அத்தே'ன்னு நீ வந்து நிக்கறே!" என்று மகிழ்ந்து போனாள் அத்தை.

யாமினியின் மனக் குமுறலையோ, தாபத்தையோ அத்தை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

"அவர்தான் எனக்கு எல்லாம்னு இருந்தேனே, எனக்கு அவர் இப்படிச் செய்யலாமா, அத்தை?"

"சும்மா அதையே ஏன் எண்ணிண்டிருக்கே? எல்லாம் ஒரு வேளை! முதல்லே தாயும் பிள்ளையுமா ஆகிற கதையைப் பாரு. தன்னாலே எல்லாம் சரியாப்

கடுங்கோடையின் சோர்வை நீக்கி புத்துணர்வு அளிக்கும் **கிஸான்** ஸ்குவாஷ்

அன்றே பறித்த பழத்தின் சாறு தரும் சத்தெல்லாம் உள்ளது **கிஸான்** ஸ்குவாஷ்


கடும்கோடையில் குழந்தைகள் சோர்வையும், கணவர் சலிப்பையும், விருந்தினர் அலுப்பையும் தவிர்க்க உடனே ஒரு கிளாஸ் சத்துமிகு கிஸான் ஸ்குவாஷ் கனிரசம் அளித்திடுங்கள். அவர்கள் முகம் எப்படி மலருகிறது எனக் கண்டு களியுங்கள். (ஒரு பாட்டிலில் 16 கிளாஸ் தயாரிக்கலாம்)

உங்களுக்கும் சிறந்தது அது. நோய் எதிர்ப்பு சக்திக்கு தேவையான வைட்டமின் C சத்து இயல்பாகவே இருப்பது கிஸான் ஸ்குவாஷ். நல்ல கனிகளும் தூய கரும்புச்சர்க்கரையும் சேர்ந்து தயாராகும் கிஸான் ஸ்குவாஷ் கிடைப்பவற்றில் மிகச்சிறந்தவை. இந்தியாவில் அவைகள் ஏராளமாக விற்பனையாவதில் வியப்பில்லை

தேர்ந்தெடுக்க அருமையான சுவையில் 5 வகைகள் : ஆரஞ்சு, லெமன், மாங்கோ, லெமன்பார்லி, லெம்ஜூஸ் கார்டியல்.

கிஸான் பிராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர் - 16





கிஸான் *தோட்டக்கனியின் தீஞ்சுவையெல்லாம் வீட்டினுள்ளே அளித்திடவே*

ஓ.பி.-5760

போறதா, இல்லையான்னு என்னைக் கேளு !''

அத்தையின் முழு நினைப்பும் முழுப் பேச்சும் யாமினியின் பிரசவ வேலையைச் சுற்றித்தான் லயித்திருந்தன.

''ஏழெட்டு மாசம் ஆன பெண்ணுச்சே, ஆசையா ஒண்ணைச் செய்து கொடுத்தோமா, அருமையா ஒண்ணைச் செய்து பார்த்தோமான்னு எவ்வளவு நொங்கிப் போயிருப்பேன்னு தெரியுமா, உனக்கு? வாய்க்கு வேண்டியதா, வயித்துக்கு வேண்டியதா வேணும்னு இவ யார்கிட்டே போய்க் கேட்பாள், யார் வந்து கொடுப்பான்னு இலையிலே உட்காருறப்பல்லாம் நினைச்சுக்குவேன். இலையிலே வைச்சது நெஞ்சிலே எறங்காது !'' என்று திரும்பத் திரும்ப அத்தை இதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தாள்.

உண்மையில் சென்னையில் கிடைக்கக் கூடிய நவீன வசதிகள் எல்லாம் கிராமத்தில் கிடைக்காது; அத்தனை போஷனை பராமரிப்புக்கும் வழியில்லை என்றுதான் யாமினி நினைத்திருந்தாள். ஆனால் பிறந்த வீட்டை மிதித்த பிறகுதான் இந்த ஆனந்தமும் நிம்மதியும் அங்கே கிடைக்காது என்று பட்டது. மொஸைக் தரையும், ஃபோம் ரப்பரும் ஒரு தனிச் சுகம்தான். இருந்தாலும் மழமழஎன்று பசுஞ் சாணமிட்டு மெழுகியிருந்த மண் தரைக்கும் ஒரு மதிப்பு எப்படி இல்லாமல் போய்விடும்? கணவன் அருகில் இருந்தால் ஒரு தைரியம்தான். அத்தை கூடவே இருந்தால் பெரிய சௌகரியம் இல்லையா?

நாகப்பன் மூலமாகச் செய்தி எட்டியதும் மன்னிக்கு இருப்புக் கொள்ளவில்லை. யாமினி வரும்வரையில் காத்திராமல் ஓடி வந்து பார்த்தாள். பிரசவத்துக்கு இங்கே வரப் போகிற விஷயத்தை ஏன் எழுதவில்லை என்று கேட்டாள். யாமினி முதலில் உண்மையை உடனே சொல்ல வேண்டாம் என்றுதான் மழுப்பப் பார்த்தாள். ஆனால் முடிவில் சொல்லிவிடுவதுதான் நல்லது என்று நடந்ததையெல்லாம் அப்படியே சொல்லி விட்டாள்.

''அப்படியா சமாசாரம்? இப்பவே போய் அவன் அண்ணுகிட்டே சொல்றேன், பார். கொடுக்கிற டோஸிலே கதறிண்டு ஓடி வரச் சொல்றேன், பார். அதெப்படி ஆயிரம் சொந்தமாவே இருந்தாலும் அவளை வீட்டுக்கே அழைச்சிண்டு வரதாவது? அப்ப வேண்டாம்னு நினைச்சவ இன்னிக்கு வேண்டியவளாப் போயிட்டாளோ? எங்களுக்கும் கொஞ்சம் கொஞ்சம் அவளோட ஏற்றம் தெரிஞ்சுதானிருக்கு. எல்லாம் உங்க மாமியார் கொடுக்கிற இடம். இல்லாட்டா இவ்வளவு தூரத்துக்குப் பாஸ்கரன் ஒருநாளும் போகமாட்டான். அவனுக்குத்தான் பெரிய குறை, பணமும் பங்களாவுமா நாட்டுப் பெண் வரல்லியேன்னு ! அதான் வாயை மூடிண்டு இருக்கா போலிருக்கு'' என்று மன்னி பொரிந்து தள்ளிவிட்டுப் போனாள்.

அப்புறம் யாமினியும் அங்கே போயிருந்தாள்.

''நீ வந்தது வரையில் சரி. முதல் பிரசவத்துக்கு வரவேண்டியது தான் முறை. நாங்கள்ளாம் இங்கேயே இருக்கோம்; பார்த்துக்கறோம். முதல் முதல்லே சுபமா வந்திருக்கு. ஒரு பும்ஸவனம் சீமந்தம்னு பண்ண வேண்டாமா ? நான் அவனுக்கு எழுதறேன். எல்லாம் சரியாப் போயிடும். நீ கவலைப் படாதே!'' என்று தைரியம் சொல்லித் தேற்றி அனுப்பினார் அண்ணா பட்டாபி.

நாட்கள் ஓடின; ஆனால் பாஸ்கரனிடமிருந்து பதிலைத்தான் காணோம். இன்னொரு கடிதம் எழுதினார். இன்னொன்றும் எழுதினார். எதற்குமே பதில் வரவில்லை.

''நினைச்சாலே எனக்கு ரோசமாயிருக்கு. அண்ணான்னு அவன் என்னைக் கூட மதிக்கல்லே. எதுக்கும் நல்லபடியா பிரசவமாகட்டும். அப்புறம் நான் பேசிக்கிறேன். அவன் வரல்லேன்னாலும் ஒரு நாள் பார்த்து வளைகாப்புமட்டுமாவது முறைப்படி செய்துவிடுவோம்!'' என்று அதற்கு ஓர் ஏற்பாடு செய்தார் பட்டாபி.

அதுவும் நடந்தது. மறு மாதமே ஒரு நாள் விடியற்காலையில் யாமினி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். சுகப் பிரசவம்தான்; குழந்தை நல்லபடியாக எட்டு பவுண்டு இருந்தது.

பாஸ்கரனுக்கு நல்ல சேதியாகத் தந்தி கொடுத்தார்கள். மஞ்சள் தடவிக் கடிதமும் எழுதினார்கள்.

பாஸ்கரனுடைய அம்மாதான் அம்பியை விட்டு பதில் எழுதச் சொல்லியிருந்தாள். குழந்தை பிறந்ததைப் பற்றிச் சந்தோஷம் என்று ஒரு வரி குறிப்பிட்டுவிட்டு வேறு ஏதேதோதான் எழுதியிருந்தாள். வருவதாகப் பேச்சேயில்லை.


ஒரு மாதம் ஆயிற்று; இரண்டு, மூன்று மாதமும் ஆயிற்று. பாஸ்கரன் குழந்தையைப் பார்க்கக்கூட வரவில்லை. பதிலும் எழுதவில்லை. கண்ணை மூடிக்கொண்டு சிரித்த குழந்தை இப்போது கண்ணைத் திறந்து கொண்டு சிரித்தது.

(தொடரும்)


மர்மக்கதை
கௌசிகன்
எழுதும்
சுழிக்காற்று
கல்கி
மார்ச் 28ல்
ஆரம்பம்



சிங்கக் கழுகு
10
பீட்டர் ஓ டான்னல்
அரண்மனைக் கூரையில் தீ எளிதில் அணைக்கப் படுகிறது.
ஏதோ பழைய தினசரிகள் தாம்.
அது சரி, ஆனால் அவற்றில் எப்படித் தீப்பிடித்தது?
என்ன விநோதமாய் இருக்கிறதே! உங்கள் நண்பன் ஆயுதங்கள் நிரம்பிய எங்கள் வண்டியைப் பாரம் தூக்கி யால் கவ்வுகிறானே!
என்ன? என்ன?
1742
மாட்டியோ அரண்மனைக் கூரையிலிருந்து அவசரம் அவசரமாய் இறங்குகிறான்
ஹாயிகே! நிறுத்துடா, அசடு! என்ன காரியம் பண்ணுகிறாய்!
மாடஸ்டி பாரம் தூக்கியை இயக்குகிறாள். கடப்பாறைகளும், கத்திகளும், கல்லூளிகளும் நிரம்பிய வண்டியைக் கிரேன் அலேக்காகத் தூக்கி...
அடக் கடவுளே! எங்கள் ஆயுதங்களை யெல்லாம் கடலில் போட்டு விட்டானே அவன்!
1743



ஓரயில் கண் விழித்தபோது பாரம் தூக்கியை இயக்கும் விசைகள் மீதே தான் விழுந்து கிடப்பதை உணர்கிறான்.
என்ன, ஏது...?
ஏய் கிறுக்கு! அல்போரினி பிரபுவுக்கு நீ செய்த காரியம் தெரிந்தால் பைத்தியம் பிடித்தாற்போல் கத்துவாரே!
ஆ! மண்டையைப் பிளப்பதுபோல் வலி! என்ன நடந்தது?
நிதானமாய்க் கேட்கிறாயே. கத்திகள், கல்லுளிகள், கடப்பாறைகள் எல்லாவற்றையும் பாரம் தூக்கியால் கவ்வி எடுத்துக் கடலில் எறிந்து விட்டாயே; முட்டாள்!
1744
மாட்டியோ! ஆயுதங்களை நான் கடலில் எறியவில்லை.
நாங்கள்தான் உன்னைப் பார்த்துக்கொண்டே யிருந்தோமே. இங்கு வேறு யார் வந்தார்கள் கிரேனை இயக்க?
யாரும் வரலேயே? ...அதாவது யாராவது வந்திருக்கணும் என்கிறேன்! ஐயோ, என் மண்டை...!
மாக்ஸ்! நீ உயிருடன் இருந்தால் இதை வெகுவாக ரசிப்பாய்!
ஒரு விஷயம் நிச்சயம். எங்கள் ஆயுதங்கள் கடலுக்கடியில் உள்ளன! அவற்றை மீட்க எங்களால் முடியாது! ஆகவே இன்று இரவு சிங்கக் கழுகைப் பெயர்த்தெடுக்க இயலாது.
1745


அதிகாலை நேரத்தில் மாட்டியோவும் லூயிகி யும் தங்கள் எஜமானன் அல்போரினி பிரபு விடம் நடந்ததைச் சொல்லுகின்றனர்.
மறுபடியும் தோல்வி அடைந்தீர்கள்!
எங்கள் தப்பு இல்லை, பிரபோ! அந்தத் தீவில் பிசாசு இருக் கிறதோ என்னவோ?
முட்டாள்! பிசாசுக்குப் பாரம் தூக்கியை இயக்கத் தெரியுமா என்ன? உங்களுக்கு நன்றாக உதை கொடுத்து அனுப்பிய அதே பெண்தான் இதையும் செய்திருக்கிறாள். மாடஸ்டி!
அவளைக் கண்டுபிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள்!
அன்று இரவு வேலை முடிந்ததும் ஒரு சிறு ஓட்டலில் மாடஸ்டி தூங்குகிறாள்.
பொழுது விடிந்து சற்று நேரத்தில் இலேசான சத்தம் மாடஸ்டியை எழுப்பி விடுகிறது.
மாடஸ்டி! நான்தான்!
விமான நிலையத்தில் நீ எனக்குக் கொடுத் திருந்த தகவல் கிடைத்தது. நேரே இங்கே வந்தேன். இதே வரிசையில் ஓர் அறை எடுத்துக்கொண் டிருக்கிறேன்.
கார்லின்! நீ வந்தது எவ்வளவு மன நிம்மதி அளிக்கிறது தெரியுமா?
(தொடரும்)

போராட்டங்கள்

நா. சு. நல்லபெருமாள்

34. வெறும் கனவு

சிறைச்சாலையில் உள்ள தென் பக்கத்து வரிசையில் அமைந்திருந்த பகுதியில்தான் வேதமூர்த்தி சிறை வைக்கப் பட்டிருந்தார். தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளை அடைக்கும் பகுதி அது. வேதமூர்த்தியை அடைத்திருந்த அடுத்த அறையில்தான் தண்டாயுதபாணியும் அடைக்கப் பட்டிருந்தான்.

வேதமூர்த்தியையும், தண்டாயுதபாணியையும் அந்தச் சிறைக்குள் அழைத்து வந்தபோது மற்றக் கைதிகள் மிகுந்த வியப்புடனும், பரபரப்புடனும் அவர்களைக் கவனித்தார்கள். வேதமூர்த்தியைப் பற்றிப் பலர் கேள்விப் பட்டிருந்தார்கள். பலர் நேரிலும் பார்த்திருந்தார்கள்.



சிலர் அவருடைய சொற்பொழிவைக் கேட்டு மயங்கியும் இருக்கிறார்கள். அவரைப் போற்றுபவர்களும் உண்டு, தூற்றுபவர்களும் உண்டு. ஆனால் சிறைச்சாலைக்குள் அவரை அழைத்து வந்தபோது எல்லோருமே மரியாதையுடன்தான் அவரைக் கவனித்தார்கள். சில கைதிகள் எழுந்து கைகூப்பி வணங்கினார்கள். எதையும் லட்சியம் செய்யாத ஒரு மாபெரும் போர்வீரனைப் போல்தான் வேதமூர்த்தி நடந்து வந்தார். அவருடைய கைகளில் மாட்டப்பட்டிருந்த விலங்கையோ அந்தச் சிறைக் கூடத்தின் உயர்ந்த மதிற் சுவர்களையோ அவர் லட்சியம் செய்ததாகவே காணப்படவில்லை. அந்தச் சமயத்திலும் அவருடைய முகத்தில் தோன்றியிருந்த கம்பீரத்தையும் அலட்சியத்தையும் கண்டு சிறை அதிகாரிகள் கூடச் சற்று நடுங்கினர்.

ஆனால் தண்டாயுதபாணியோ சோர்வுற்று, மனம் கலங்கியவனாகத் தள்ளாடியபடியே நடந்தான்.

இருவரும் தனித் தனி அறைக்குள் அடைக்கப் பட்டபோது தண்டாயுதபாணி விம்மி அழுதான். வேதமூர்த்தி சிரித்தார்.

''தண்டாயுதம்! ஏண்டா அழுகிறாய்? சாவதற்குப் பயமா?'' என்றார் வேதமூர்த்தி, பக்கத்து அறையிலிருந்து.

தண்டாயுதபாணியோ அழுது கொண்டேயிருந்தான். வேதமூர்த்திக்கு அவனுடைய அழுகை வெறுப்பாயிருந்தது.

மற்றக் கைதிகளையும், அவர்களுடைய நடவடிக்கைகளையும், பேச்சுக்களையும் கவனித்தபோது அவருடைய மனம் கசந்தது. கைதிகள் அனைவரையும் அற்பப் புழுவைப்போல் மிகவும் கேவலமாக எண்ணினார்.

அவரைச் சுற்றித் திருடர்களும், கொலைகாரர்களும் காமுகர்களும்தாம் இருந்தார்கள். அத்தனை கைதிகளும் தங்களுடைய சுயநலத்துக்காகச் செய்து விட்ட அற்பமான, கேவலமான காரியங்களுக்காகத்தான் அங்கு அடைபட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிய போது, வேதமூர்த்தியின் உடல் கூசியது. அந்த அற்பர்களுக்கு மத்தியில் தாமும் அடைபட்டிருக்க நேர்ந்ததை எண்ணித்தான் அவருடைய மனம் சொல்லி மாளாத அளவு வேதனைப்பட்டது.

அவருடைய மனத் திரையில் ஒரு மாபெரும் சம்பவம் நிழலாடியது.

தில்லி செங்கோட்டையில்



பாட்டாளிகளின் கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கிறது. ஒரு வரிசையில் பாட்டாளிப் படையும் எதிர் வரிசையில் சீனப் படையும் மரியாதை செலுத்திய படி நிற்கின்றன. ஊடே, மாஸே துங் அழைத்துச் செல்ல வேதமூர்த்தி கம்பீர மாக நடந்து செல்கிறார். ஒரு பெரிய மேடை மீது வேதமூர்த்தி ஏறி நின்றதும் மாஸே துங், கம்யூனிஸ்ட் கட்சிக் கொடியை எடுத்து வேதமூர்த்தியிடம் கொடுக்கிறார். பிறகு ஒரு செங்கோலையும் அளிக்கிறார். பாட்டாளி மக்கள் கரகோஷம் செய்கிறார்கள். சீனப்படையும், பாட்டாளிப் படையும் மேடைக்கு முன்பாக அணிவகுத்துச் செல்கிறார்கள். செங்கோட்டையில் செங்கொடி பறக்கிறது. வேதமூர்த்தி உணர்ச்சிப் பெருக்குடன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்க நிற்கிறார். வர்க்கப் போராட்டத்தின் வெற்றிப் பெருநாள்... மார்க்ஸீய தீவிரச் சிந்தனையாளர்களின் கனவு நனவான நாள்... கனவு... கனவு...!

''கனவு...! வெறும் கனவுதான்.'' வேதமூர்த்தியின் வாய் முனகியது.

தாம் சிறைப் பட்டதற்காகவோ, தமக்குத் தூக்குத் தண்டனை கிடைத்ததற்காகவோ அவர் கொஞ்சம் கூடக் கலங்கவில்லை. தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறியபோதுகூட அவருடைய முகத்தில் எவ்வித மாறுதலும் தோன்றவில்லை. நீதிமன்றத்தையும் அங்கு குழுமியிருந்தவர்களையும் அவர் பார்த்த பார்வை அத்தனை பேரும் அற்பப் பதர்கள் என்று அலட்சியமாகக் கூறுவது போலிருந்தது.

நீதிமன்றத்துக்கு வெளியே வேதமூர்த்தியைப் போலீசார் விலங்கிட்டு, அழைத்துச் சென்று போலீஸ் லாரியில் ஏற்றப் போனபோது ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார் —

''தோழரே! ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?''

''என்ன சொல்ல?...புழுத்துப்போன பூர்ஷ்வா சிந்தனைகளைப் பொதி மாடுகள் மாதிரி சுமந்து கொண்டு, சுயநலச் சேற்றில் உழலும் கயவர்களுக்கு நான் சொல்ல என்ன இருக்கிறது?'' என்று எரிச்சலுடன் கூறி விட்டு நிருபரை முறைத்துப் பார்த்தார் வேதமூர்த்தி.

''உங்களுடைய செயலுக்காக மனம் வருந்துகிறீர்களா?'' என்று நிருபர் கேட்டார்.

''வருத்தமா....? வருத்தப்படும்படியாக நான் குற்றம் ஏதும் செய்துவிடவில்லையே? மனிதனின் வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டேன். போரில் நிகழும் நிகழ்ச்சிகளுக்காக ஒரு வீரன் வருத்தப்பட முடியுமா? தோழரே, நான் ஆற்றிய செயல் அனைத்தும் மனித வர்க்கத்துக்காகத்தான். பூர்ஷ்வாக்களுக்கு இது புரியாமல் இருக்கலாம். அதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. எந்தச் செயலும் என் சொந்த ஆசை மீது உருவானதல்ல. வெற்றி தோல்வியைப் பற்றியும் நான் அக்கறை கொள்ளவில்லை. கர்மத்தைச் செய்தேன். அவ்வளவுதான். வெறும் உடலால் மட்டுமே வினையாற்றுபவன், பாவத்தை அடைவதில்லை'' என்று கூறிய வேதமூர்த்தி அதே பொருளைக் கொண்ட 'சாரீரம் கேவலம் குர்வன்னாப்னோதி கில்பிஷம்' என்று கீதை சுலோகத்தைக் கூறிவிட்டு, நிருபரை உற்றுப் பார்த்தார். போலீஸார் துரிதப்படுத்தவே, தொடர்ந்து பேசாமல் லாரிக்குள் ஏறினார். உள்ளே அமர்ந்தவர் லாரியின் சன்னல் வழியாக நிருபரைத் திரும்பிப் பார்த்தார்.

''சைத்தான் வேதம் ஓதுகிறது!'' என்று நிருபர் முனகியது வேதமூர்த்திக்குக் கேட்கவே, கோபத்துடன் ஏதோ கூறுவதற்கு எழுந்தார். அதற்குள் லாரி நகர்ந்து விட்டது.

வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்புக் கூறப்பட்டதும், வேதமூர்த்தியும் தண்டாயுதபாணியும் தமிழ் நாட்டுச் சிறைச் சாலைக்கு அனுப்பப் பட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வேறு அறுபத்து நான்கு கைதிகள், பலதரப்பட்ட தண்டனைகள் வழங்கப்பட்டுப் பல இடங்களிலுள்ள சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டார்கள்.

சிறைச்சாலைக்குள் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளுக்கான பகுதியிலுள்ள அறைகளில் ஒன்றில்தான் வேதமூர்த்தி அடைக்கப் பட்டிருந்தார். தினமும் அதிகாலையில் அந்தப் பகுதியிலிருந்து, தூக்குத் தண்டனையை நிறைவேற்றி வைப்பதற்காக ஒன்றிரண்டு கைதிகளை அழைத்துச் செல்லும்போது வேதமூர்த்தி வேடிக்கை பார்ப்பார். மரண பயத்தினால் சிலர் கதறி அழுவதுண்டு. சிலர் சக்தி முழுவதையும் இழந்து நடக்கக்கூட வலுவற்று, சோர்ந்து, மயங்கி விழுவார்கள்.

தம்மையும் ஒரு நாள் இப்படித்தான் தூக்கு மேடைக்கு அதிகாலையில் அழைத்துச் செல்வார்கள் என்ற எண்ணம் வேதமூர்த்திக்குத் தோன்றும்போது எவ்விதப் பரபரப்புமின்றித் தம்முடைய சாவையே கற்பனை செய்து பார்த்துக் கொள்வார். ஆனால் தண்டாயுதபாணியோ தூக்கு மேடைக்குச் செல்லும் கைதியைப் பார்க்க நேரும்போதெல்லாம் பதறி அழுவான். அவனுடைய அழுகை வேதமூர்த்திக்குப் பரிதாபமாயிருந்தது.

கட்சிக்காக எவ்வளவோ காரியங்களைத் துணிந்து செய்தவன், தண்டாயுதபாணி! படித்துப் பட்டம் பெற்றவன். தலைவர் வேதமூர்த்தியின் அந்தரங்க நண்பனாகவும், தொண்டனாகவும் பணியாற்றியவன். கட்சியின் களையெடுப்புப் பணியில் அவனைத்தான் பூரணமாக நம்பி யிருந்தார் வேதமூர்த்தி. கட்சிக்காக நடைபெற்ற பதினேழு கொலைகளில் பதின்மூன்று கொலைகளை எவ்விதப் பரபரப்புமின்றிக் கச்சிதமாகச் செய்து முடித்தான். ஆனால் கட்சியினுடைய துரதிர்ஷ்டம், சாரதாவைக் கொலை செய்ய எத்தனிக்கும் போது பிடிபட்டான். அதுவரை தீரமாகச் செயலாற்றிய தண்டாயுதபாணி பிடிபட்டதும். கோழையாகி விட்டான்.

இதை நினைத்துத்தான் வேதமூர்த்தி மனம் புழுங்கிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள், பக்கத்து அறையிலிருந்து தண்டாயுதபாணி அழும் குரல் கேட்டது.

''எதை நினைத்துடா அழுகிறாய்? உன்னைப் பற்றியே நினைத்து அழுவதைவிடக் கட்சிக்கு நீ செய்துவிட்ட கேட்டை நினைத்து அழுதாலாவது உன் நெஞ்சுக்கு ஆறுதலா யிருக்கும்'' என்றார் வேதமூர்த்தி, கோபத்துடன்.

''நீ சொன்னதைக் கேட்டுக் கேட்டுத் தான் இந்தக் கதியை அடைந்தேன்'' என்றான் தண்டாயுதபாணி அழுது கொண்டே.

''நீ கோழை. உன்னால் ஒரு மாபெரும் இயக்கம் உருக் குலைந்துவிட்டது. உயிருக்குப் பயந்து எல்லோரையும் காட்டிக் கொடுத்து விட்டாய்'' என்றார் வேதமூர்த்தி, வெறுப்புடன்.

''ஏன்...? நான் மட்டும் சாக வேண்டும்; நீங்களெல்லோரும் சுகமாக வெளியில் இருக்கலாம் என்று நினைத்தாயோ?'' என்று சீறி விழுந்தான் தண்டாயுதபாணி.

''அப்படி நீ என்னைச் சந்தேகப்படுகிறாயா?'' என்று மிகுந்த ஆற்றாமையோடு கேட்டார், வேதமூர்த்தி. தண்டாயுதபாணி அழுதான். பிறகு சொன்னான்:

''கட்சி கட்சியென்று நீதான் உயிரை விட்டுக் கொண்டிருந்தாய். கட்சியின் மற்றத் தலைவர்களெல்லோரும் சுகமாகத் தான் இருந்தார்கள். தோழர்கள், ஒரு நேரத்துப் பீடிக்கும், காப்பிக்கும்கூடக் கணக்குச் சொல்ல வேண்டி யிருந்தது. ஆனால் தலைவர்களோ பிஸ்கட்டும், கேக்கும், சாக்லேட்டுமாகத்தான் தின்று கொண்டிருந்தார்கள். நீ ஒரு குருடு. நல்லவர்களைச் சந்தேகித்தாய். பசப்புபவர்களை நம்பினாய். கடைசியில் என்னையும் இப்படி ஆக்கி விட்டாய்... நாட்டுக்கும் துரோகம் செய்து விட்டாய்...''

இப்படிச் சொல்லி விட்டுத் தண்டாயுதபாணி விம்மி விம்மி அழுதான். வேதமூர்த்திக்கு மனம் நெகிழ்ந்தது. தண்டாயுதபாணி தம் மீது கொண்டிருந்த அன்பையும், நம்பிக்கையையும் அவர் உணர்ந்திருந்தார்.

''உன்னுடைய இடத்தில் சிவராமன் இருந்திருந்தால் தற்கொலை செய்து கொண்டிருப்பானே தவிர, உன்னைப் போல் பயந்து காட்டிக் கொடுத்திருக்க மாட்டான்!'' என்றார்.

''அவனையும்தான் கொல்லச் சொன்னாயே?'' என்று கோபத்தோடு கத்தினான் தண்டாயுதபாணி. பிறகு ஆத்திரத்தோடு சொன்னான்: ''உனக்கு இந்த முடிவு வேண்டியதுதான். நீ மட்டும் தப்பிவிட முடியுமா...?''

''அப்படியாவது நீ திருப்தி அடைந்தால் சரிதான், தண்டாயுதபாணி, சாவிலும் உன்னைத் தனியாக விடவில்லை.

நானும் உன்னோடு துணைக்கு வந்து விட்டேன்'' என்றார் வேதமூர்த்தி.

''நான் சாக விரும்பவில்லை வேத மூர்த்தி, சாக விரும்பவில்லை'' என்று கூறிக் கொண்டே தண்டாயுதபாணி விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டான். அவனுடைய அழுகை வேத மூர்த்திக்குப் பரிதாபமாகவும், வெறுப் பாகவும் இருந்தது. அவன் அழட்டும் என்று விட்டுவிட்டார்.

இரவு வெகுநேரம்வரை தண்டாயுத பாணி அழுது கொண்டேயிருந்தான். பிறகு ஓய்ந்து விட்டான். உறக்கம் வராமல் படுத்துக் கிடந்தான். நெஞ்சில் பல நினைவுகள் புகுந்து அலைமோதிக் கொண்டிருந்தன.

பள்ளிப் பருவத்திலிருந்தே அவரோடு அவன் கொண்டிருந்த நட்பையும், கல் லூரிப் படிப்பு முடிந்ததும் அவருடைய லட்சியங்களை ஏற்றுக் கம்யூனிஸ்ட் கட்சி யோடு ஒன்றிவிட்ட சம்பவங்களையும் நினைத்தபோது அவனுள் சிறிது தெம்பு ஏற்பட்டது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அதி காலையில் சிறை அதிகாரிகளின் பூட்ஸ் ஒலி கேட்டுக் கண் விழித்தார், வேத மூர்த்தி. காலையில் சூரிய உதயத்துக்கு முன் அந்த அறையிலிருந்து அழைத்துச் செல்ல அதிகாரிகள் வந்து விடுவார்கள் என்னும் செய்தியை முந்தினநாளே அவர் அறிந்திருந்தார். சிறைக் கதவு திறக்கப் பட்டதும் வேதமூர்த்தி தயாராக எழுந்து நின்றார். அவருடைய முகத்தில் எவ்விதக் கவலையோ பயமோ இல் லாததைக் கண்டு அதிகாரிகள் திகைத் தனர். அறையை விட்டு வேதமூர்த்தி, வெளியே வந்தபோது பக்கத்து அறையி லிருந்து வந்த கதறலைக் கேட்டு ஒரு நிமிஷம் தயங்கி நின்றார். தண்டாயுத பாணியை இரு காவலாளிகள் இழுத்துக் கொண்டுதான் வெளியே வரவேண்டிய தாயிற்று. அழுது முரண்டினான். அவ னுடைய முகத்தில் தோன்றியிருந்த பீதியும், கலவரமும் வேதமூர்த்தியின் கல் நெஞ்சைக் கூடச் சிறிது இளக வைத்து விட்டன.

''உங்களுக்கு ஏதாவது தேவையா னால் சொல்லுங்கள்'' என்றார், சிறை அதிகாரி, வேதமூர்த்தியைப் பார்த்து.

''நீங்கள் அனுமதித்தால் குளித்து விட்டு வருகிறேன்'' என்றார் வேத மூர்த்தி. அதிகாரி அனுமதிக்கவே இரு காவலாளிகள் அவரைக் குளிப்பதற் காக அழைத்துச் சென்றனர். தண்டா யுதபாணியின் அழுகைக் குரல் சற்று நேரம் கேட்டுக் கொண்டேயிருந்தது. பிறகு ஓய்ந்து விட்டது.




''கொண்டைக்கு வலை வாங் கிட்டு வரச் சொன்னியே அக்கா! எட்டுக்கால் பூச்சியையே உன் கொண்டையில் தொங்க விட்டி ருக்கேன். பத்து நிமிஷத்தில் தானே வலை தயாராகிவிடும் பார்!''

அரை மணி நேரத்தில் வேதமூர்த்தி யைக் குளிக்கச் செய்து அழைத்து வந்தபோது ஓர் அதிகாரி, ''நீங்கள் கடைசியாக யாருக்காவது ஏதாவது தெரிவிக்க வேண்டுமா?'' என்று கேட்டார்.

வேதமூர்த்தி அந்த அதிகாரியைப் பார்த்து, ''நான் சொல்ல வேண்டிய வற்றை ஏற்கனவே சொல்லி விட்டேன். செய்ய வேண்டியவைதாம் பாக்கி. நான் சொன்னவற்றைப் புரிந்து கொண்டார்களா என்பதும் தெரிய வில்லை. பாக்கியுள்ள காரியங்களைச் செய்வார்களா என்பதும் தெரியவில்லை. இனி நான் இதுபற்றி அக்கறை கொள் வதிலும் அர்த்தமில்லை'' என்று அமை தியுடன் கூறிவிட்டுக் காவலர்களைத் தொடர்ந்து ஓர் அறைக்குள் நுழைந் தார். சுற்றுமுற்றும் பார்த்தார். பக்கத் தில் நின்ற சிறைக் காவலரிடம், ''தண்டாயுதபாணி....?'' என்று தயங் கியபடி கேட்டார்.

''அடுத்த அறையில்... முடிந்துவிட் டது'' என்று பதில் கூறினார் காவலர். வேதமூர்த்தியின் கண்கள் பல விநாடி களுக்கு மூடிக் கொண்டன. மனம், தண்டாயுதபாணியை நினைத்து இரங்கி யது. மீண்டும் வேதமூர்த்தி கண்களைத் திறக்க முயன்றபோது, முடியவில்லை. எங்கும் இருளாயிருந்தது. தம் முகத்தை ஒரு கறுப்புத் துணி மூடியிருப் பதை உணர்ந்தார். (தொடரும்)

விஜிபி யால் உருவாக்கப்பட்ட தவணைத் திட்டம் ஏராளமான மக்களுக்கு உதவுகிறது.



மேலும் மேலும் அதிகமான மக்கள்
விஜிபியின் சுலபத் தவணைத் திட்டத்தால் பயனடைகிறார்கள்

எல்லோரும் சுலபமாகப் பொருள்கள் வாங்கும் வாய்ப்பு. தயாரிப்பாளர்களின் விலைக்கே தரும் தனிச்சிறப்பு. வசதிக்கேற்றபடி பணம் செலுத்தும் முறை. தேர்ந்தெடுத்து வாங்க ஏராளமான பொருள்கள். உத்திரவாதமுள்ள தரமான பொருள்கள். விற்பனைக்குப் பிறகும் திருப்தியளிக்கும் சேவை.

இத்தனைக்கும் மேலாக வாடிக்கையாளர் பெறும் மன நிறைவு.

VGP

வி.ஜி. பன்னீர்தாஸ் & கோ.

சைதாப்பேட்டை, சென்னை-15. போன் : 442333

கிளை : தி.நகர், சென்னை-17. போன் : 440246

புதிய ஷோ-ரூம் :

27, ரத்தன் பஜார், மதராஸ்-3 போன் : 33214

இரண்டு லட்சத்துக்கு மேலான மக்களுக்கு சேவை புரியும் தனிச் சிறப்பு.

NAS.I.ZA



ஸ்வீடனில் ஒரு புதுமையான இன்ஷூரன்ஸ் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுதான் விவாகரத்து இன்ஷூரன்ஸ்! மணமான ஜோடிகள் இந்தத் திட்டத்தில் சேர்ந்து பணம் கட்டி வந்தால், பிறகு எக்காரணத்தாலாவது இருவருக்கிடையிலும் விவாகரத்துப் பிரச்னை எழுந்தால், வழக்கு சம்பந்தப்பட்ட செலவுகள் அனைத்தையும் இன்ஷூரன்ஸ் கம்பெனி ஏற்றுக் கொள்ளும்! -'நியூ டைம்ஸ்'

- 'கரிகாலன்'

நிமிட அரிசி!

இங்கு உணவு சமைக்க ஒரு மணி நேரமாவது ஆகும்; ஆனால் அமெரிக்காவில் பத்தும் பதினைந்து நிமிடங்களில் சோற்றை வடித்து, பதார்த்தங்கள் செய்து முடித்து விடலாம். எப்படி?

அங்கு எல்லாப் பண்டங்களும் ஒருவாறு முன்பே வேக வைத்த நிலையில் கிடைக்கும். 'நிமிட அரிசி' **(minute rice)** போன்ற பல பண்டங்கள் அங்குண்டு. ஒரே ஒரு நிமிஷம் நீரில் கொதிக்க வைத்தால் போதும், நிமிட அரிசியை. சோறு தயார்!

- பி. வி. கிரி






"நீ இறந்துவிடுவாய், பிள்ளை குட்டிகளின் நன்மைக்காகப் பணம் கட்டு" என்று ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்காரர் சொன்னால் கேட்கிறார்கள். "நீ இறந்து விடுவாய்; உன் நன்மைக்காக பகவான் நாமாவைச் சொல்" என்று பாகவதர்கள் சொன்னால் சிலர் கேட்கமாட்டேன் என்கிறார்கள். இது என்ன லோகம்?

- ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி

வழிகாட்டும் சிந்நம்பம் வழி காட்டுமே தவிர நம்முடன் துணைக்கு வராது. அது போல் சாஸ்திரபாண்டித்யம் இறைவனை அடைய வழி சொல்லுமேயன்றி அடைவிக்காது. அந்த வழியில் நாம் நடக்க வேண்டும் பகவானை அடைய. - ப்ரேம் மஹராஜ்

அனுப்பியவர்: விஜயகண்ணு



நடைராஜா செருப்புகள்

விலை குறைந்து விட்டது! முன்பு பத்து ரூபாய், இப்பொழுது ரூ. 5/-தான்!*

* ஒரு காலுக்கு மட்டும்.

மேட் - நாயக்

புல்லும் புரதமும்!




புல்லைத் தின்று ஜீவிக்கும் ஆடு, மாடு முதலியவற்றின் இறைச்சியிலும் பாலிலும் புரதச் சத்து நிறையக் கிடைக்கிறது. இறைச்சியைக் காட்டிலும் புல்லில் இருக்கும் புரதச் சத்து பத்து மடங்கு அதிகமாகும். - தகவல்: விஜயம்

ஆதாரம்: காரனெட்

என்னை ஜெயிலில் தள்ளு!


இத்தாலியில் சாலமன் என்னும் வாலிபர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, "நான் சில பொருட்களைத் திருடிவிட்டேன்; என்னைச்சிறையில் அடையுங்கள்" என்று கூறினார்! அவர் செய்தது சிறிய குற்றமாதலால் ஒரேநாள் சிறைவாசத்துடன் அவரை வெளியே அனுப்ப உத்தரவிடப்பட்டது. ஆனால் வாலிபர் விடவில்லை; 'எனக்கு வேலையுமில்லை, பிழைக்க வழியுமில்லை. என்னை ஜெயிலில் தள்ளினால் அங்காவது உணவும் இருக்க இடமும் கிடைக்கும். எனவே நான் வெளியே போகமாட்டேன்' எனக் கூறி அடம் பிடித்தார்! முடிவில் மூன்று மாதம் சிறையில் கழித்தபின், ஒரு ஹோட்டலில் வேலை கிடைத்தபின் தான் வெளியே போகச் சம்மதித்தார். 'கரிகாலன்' - நியூ டைம்ஸ்



டிக்கெட்டின் உட்கிடை

டிக்கெட்டை வாங்கிக் கொண்டு ரயிலில் போகிறோம்; வருகிறோம். ஆனால் அந்த டிக்கட்டைப் பற்றிய ரசமான விஷயங்களைத் தெரிந்து கொள்கிறோமா?

டிக்கெட்டை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்ததும், டிக்கெட் பரிசோதகர் அதைப் 'பஞ்ச்' செய்கிறார். அது A வடிவில் இருக்கும். அதற்கு அனுமதித்தோம் (Allowed) என்று பொருள். ரயிலிலிருந்து வெளியே வரும்போது, பரிசோதகரிடம் டிக்கெட்டைக் கொடுத்து விட்டு வருகிறோமல்லவா? அந்த டிக்கெட்டையெல்லாம் அவர் 'பஞ்ச்' செய்து விடுகிறார். அது M வடிவில் இருக்கும். அதற்கு 'ம்யூடிலேட்' (Mutilate) என்று பொருள். அதாவது அதனை அழித்துவிடு என்பதாம்.



சில டிக்கெட்டுகளின் மத்தியில், சிவப்பினால் வளைவுக் கோடுகள் போடப்பட்டிருக்கும். அல்லது பெரிய D என்ற எழுத்து இருக்கும். அதற்கு அர்த்தம் 'இந்தப் பிரயாணி நீண்ட தூரத்திலிருந்து வருகிறார்' என்பதாம்.

இன்னும் சில டிக்கெட்டுகளின் மத்தியில் ஒரு துளை போடப்பட்டிருக்கும். அதற்கு 'லக்கேஜுடன் வருகிறார்' என்று அர்த்தம்.

தகவல்: பி. வி. கிரி

சொன்னவர்: சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உள்ள டிக்கெட் பரிசோதகர் திரு வி. சிவஞானம்.

'நான் எப்போதுமே காலைச் சிற்றுண்டியில் கால்ஷி புசிக்கிறேன்.'



திகைக்காதீர்கள், கால்ஷி என்றால கால்ஷியம! கூடவே அவன் தாமிரம், பொட்டாஷியம், மாங்கனீஸ் மற்றும் அயோடினும் உண்கிறான். உண்மையில் அவன் காலைச் சிற்றுண்டியில் 8 முக்கியமான மினரல்களையும் !! அத்தியாவசியமான விடமின்களையும் உட்கொள்ளுகிறான். ஆம்: இவை அனைத்துமே அவனுக்கு ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரையில் கிடைத்துவிடுகின்றன !

நல்ல ஆரோக்கியம், ஆற்றல் மற்றும் சீரான உடல் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா விடமின்களும் கனிஜங்களும் விம்க்ரானில் அடங்கியுள்ளன. எடுத்துக் காட்டாக, எலும்புகள் உறுதியுடன் வளர கால்ஷியம் உதவுகிறது. விம்க்ரானிலுள்ள மற்ற விடமின்களும் மினரல்களும் சீரான இரத்த அமைப்புக்கு உதவுகின்றன; பசியைத் தூண்டுகின்றன; நோய்களை எதிர்க்கும் ஆற்றலை உடலுக்குத் தருகின்றன; உற்சாகத்தையும் சக்தியையும் பெருக்குகின்றன.

விம்க்ரான்®

மல்டிபின் விடமின்—
மினரல் டேப்லெட்டுகள்

இப்போது வட்ட வடிவில்



நாள் முழுவதும் உங்களை சக்தியுடன் வைத்திருக்க ஒரேஒரு விம்க்ரான் மாத்திரை போதுமானது

SQUIBB® SARABHAI CHEMICALS

Shilpi VIM 39A/70 Tam

அட்டைப் படக் கதை

கருப்பாயி, நான் திருடனில்லே!

ருக்மிணி பார்த்தசாரதி



நாளைக் காலை விடுதலை.

சிறைச்சாலையின் கம்பிகள் வழியே வெளி உலகைப் பார்த்தான் அவன். வெளியுலகம் இது வரையில் அவன் அறைக்கு வெளியேயிருந்த வராந்தாவாக மட்டும் இருந்தது. நாளையி லிருந்து அவன் நிஜமாகவே வெளி யுலகில் அடி வைப்பான்.

ஐந்து வருடங்களைக் கழித்தாகி விட்டது. 'நகரமாட்டேன்' என்று பாரமாக அழுத்திய நாட்களைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட் டான். நாளைக் காலையில் விடுதலை.

வெளி உலகத்தில்தான் அவள் இருக்கிறாள். கருப்பாயி. அவன் மனைவி.

கடைசியாக அவன் அவளிடம் சொல்லி யிருந்த வார்த்தைகள் அவன் செவிகளிலேயே மோதிப் பேய்ச் சிரிப்பு சிரித்தன. "நீ என்னை மறந்துடுவே, கருப்பாயி... நான் இதோ ஜெயிலுக்குப் போறேன். இந்த நோஞ்சான்பிள்ளையும் செத்துத் தொலைக் கும். உன் விருப்பத்துக்கு எவன் சரிங்க மாட்டான்? என்னைத்தானா நீ நினைச்சிக் கிட்டிருக்கப் போறே?"

அவள் அப்போது பதில் சொல்ல வில்லை. அவன் முகத்தை நேருக்கு நேர் பார்த்தாள். வாய் திறந்து பதில் ஏதும் சொல்லவில்லை.

அவனை இழுத்துக் கொண்டு வந்து ஜெயிலில் பூட்டினார்கள்.

ஐந்து வருடச் சிறைவாசம். இன்றோடு தீர்ந்துவிடும். வெளியுலகில் கருப்பாயி...

"நான் ஒரு முட்டாள்!" என்று அவன் நினைத்துக் கொண்டான். அவ ளோடு ஒரே வருட இல்லற வாழ்வு நடத்தியவள் கருப்பாயி. அதற்குப் பிறகு ஐந்து வருடப் பிரிவு. அவன் நினை வாகவே அவள் இருந்து விட்டதென் னவோ உண்மைதான். ஆனால் அவள்? ஒரு கைதியிடம் இன்னும் அன்பு மாறா மலா இருக்கும்? அவள் அழகி. கற்பனைக் கெட்டாத அழகி. அவனோ திருடன். 'கொலைக்கும் துணிந்த' திருடன்.

சாட்டையில் அடித்தாற்போல் நினை வில் ஒரு சம்பவம் எழுந்தது.

ஒருதடவை முதல் தேதியன்று சம்பளம் கொடுத்திருந்தார் எஜமானர். ஐம்பது ரூபாய். வீட்டுக்கு வந்து எண்ணிப் பார்த்தபோது தான் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்ட புதுத்த இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை ஒன்றாகவே எண்ணி விட்டார் எஜமானர் என்று தெரிந்தது. கையில் ஐந்துக்குப் பதில் ஆறு பத்து ரூபாய்த் தாள்கள் இருந்தன. அவன் கற்பனை உடனே சிறகடித்துப் பறந்தது. இந்த ஆறாவது நோட்டில் கருப்பாயிக்கு ஒரு புடவை எடுக்க வேண்டும். சிலையென அழகு சொட்டும் அந்த உடலைக் கல் வியபடி ரத்தச் சிவப்பில் ஒரு சேலை.

ஆனால் நோட்டைக் கண்ட கறுப்பாயி பாம்பெனச் சீறினாள். ''சம்பாதிக்காத துட்டு சீ, வாணாம்.... உடனே ஐயாகிட்ட குடுத்துட்டு வா!'' என்று அவனை விரட்டினாள்.

அப்படிப்பட்டவள் கறுப்பாயி. அவனோ 'கொலைக்கும் துணிந்த' திருடன்.

அப்படித்தானே அவன்மீது தீர்ப்பு வழங்கினார்கள்? 'கொலைக்கும் துணிந்தவன்' என்றுதானே!

வெளி வராந்தாவில் வெளிச்சம் குறைய ஆரம்பித்து விட்டது. அவன் எழுந்து வந்து சிறைக் கம்பிகளைப் பிடித்தவாறு நின்றான். இந்த அறையில் அவன் படுக்கப் போவது இனி ஒரு முறைதான். எந்த நன்னாளுக்காக அவன் கடந்த ஐந்தாண்டுகளாகத் தவம் செய்தானோ, அது நாளைக் காலைப் பொழுதோடு விடிந்து விடும். கைதியின் உடையைக் களைந்து விட்டு அவன் கிளம்பி விடுவான். எங்கே? யாரைப் பார்க்க? யார் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்?

''நான் ஏன் இங்கே வந்தேன்?'' என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். அந்தக் கேள்வியின் விடை அவன் அறியாததா?

ஐந்தாண்டுகளுக்கு முன்னால்...

அவனுக்கு அப்போது முப்பது வயதுகூட நிறைந்திருக்கவில்லை. தனவந்தர் ஒருவர் வீட்டில் மாதம் ஐம்பது ரூபாய்க்கு வேலையாளாக அமர்ந்திருந்த காலம் அது. எஜமானர் வீட்டிலேயே உணவு. பின்புறம் வேலைக்கார விடுதியில் குடித்தனம்.

அந்த விடுதியில்தான் அவன் இன்பமே குடியிருந்தது — கறுப்பாயியின் உருவில்.

அவளை மணந்து ஓராண்டுதான் நிறைந்திருந்தது. அவள் கையில் ஒரு மாதக் குழந்தை. அதற்கு மூளையில் என்னவோ வியாதி என்று டாக்டர் சொல்லியிருந்தார். அவன் கிரகித்துக் கொண்டதோ, ''இது செத்துவிடும்!'' என்பது மட்டும்தான். அதற்காக அவன் மனமுடைந்து போய்விடவில்லை. அவன் அன்பு சொரிந்தது கறுப்பாயியிடம்தான். அந்த அன்பைத் தவிர வேறெதையுமே அவன் உண்மையென உணர்ந்ததில்லை. அவள் ஒரு வீட்டில் வேலைக்காரியாக அமர்ந்ததைக்கூட அந்த அன்பு பொறுக்கவில்லை. ''நீ ஏன் உடம்பு நலுங்க வேலை செய்யணும்? நீ கம்முனு இரு. நான் சம்பாதிக்கிறேன்!'' என்று அவளை நிறுத்தி விட்டான். அவள் உடல் வருந்த உழைக்கலாமா? அவன் இல்லத்தில் அவள் அழகு சிந்த இருக்க வேண்டும். அவளை அலங்கரித்துப் பார்ப்பது அவன் கடமை, அவன் இன்பம், அவன் பாக்கியம்.

எஜமானர் வயதானவர். பணக்காரர் என்பதற்குப் பீரோக்களிலிருந்த வெள்ளிப் பொம்மைகளும், அவர் உடுத்தும் விலை உயர்ந்த துணி மணிகளும் சான்று கூறின. அவன் அவருடைய 'பிரைவேட்' வேலையாள். காலையில் அவர் பல் தேய்க்க வெந்நீரும் பற்பசையுமாய் ஆஜராவதிலிருந்து இரவு அவர் படுக்கையைத் தட்டி விரித்து விடை கொடுக்கும் பாவனையில் அவர் தேவைகளுக்கும் [illegible]

அவன் இருந்தான். மற்றபடி சமையலுக்கும், வீட்டு வேலைகளுக்கும் வேறு பணியாட்கள் இருந்தார்கள்.

சீட்டாட்டத்தில் அவர் ஜயித்தால் அன்று மகிழ்ச்சியில் ஒரு பத்து ரூபாய் நோட்டை அவன் முகத்துக்கெதிரே வீசுவார். ''வைச்சுக்கோ!'' என்று சிரிப்பார். தோல்வி ஏற்பட்டால், ''ராஸ்கல்! படுக்கையைப் போட்டிருக்கிற அழகைப் பாரு!'' என்று சீறி விழுவார். கைநீட்டி அடித்துவிட்ட நாட்களும் உண்டு. அவர் வரையில் அவன் ஒரு ஜடப் பொருள். இதைக்கூட அவன் பொருட்படுத்தியதில்லை. அவனைப் பொறுத்தவரை உலகிலுள்ள மாபெரும் உண்மை ஒன்றுதான்—கறுப்பாயியிடம் அவனுக்குள்ள அன்பு. எஜமானரிடம் அவனுக்குத் தனியே பாசமோ விசுவாசமோ கிடையாது. அவர் கொடுக்கும் பணத்தினால் அவன் கறுப்பாயியைப் பராமரிக்கிறான். அவருடைய முக்கியத்துவம் அவ்வளவுதான்.

அன்று....

இரவு மணி பன்னிரண்டு. ஜன்னல் வழியே பாய்ந்த நிலவொளி ஒரு காட்சியைப் படம் பிடித்துக் காட்டியது.

எஜமான் வீட்டுக் கண்ணாடிப் பீரோ திறந்திருக்கிறது. அவன் அதற்கெதிரே நிற்கிறான். இரண்டு வெள்ளிப் பொம்மைகளைக் கையிலெடுக்கிறான்.

திடீரென்று எஜமானரின் குரல் கர்ஜித்தது. ''திருட்டு நாயே! டேய்! யாரது அங்கே? பிடியுங்கள் இவனை...''


அவன் பேயறைந்தவனைப் போல் நின்றான். அடுத்த கணம் சமையல்காரன், தோட்டக்காரன், இருவர் மத்தியில் பிடிபட்டு நின்றான். வாய் திறக்கவில்லை. கண்கள் ஊமையின் கண்களைப் போல எஜமானரின் முகத்தை நோக்கிப் பரிதாபமாய் விரிந்தன. யாசித்தன.

அவன் இடையில் ஒரு கத்தி. கூரிய புதுக் கத்தி. இரவு நேரத்தில்கூட அதன் பளபளப்பு கண்ணைப் பிடுங்கியது. கைவிரல் இலேசாகப் பட்டு விட்டால்கூட உதிரம் கொட்டிவிடும்.

கோர்ட் வரை விஷயம் ஏறிற்று. ''கையில் ஆயுதத்தோடு திருட வந்தவன்'' என்ற நிலையில் அவன் குற்றவாளிக் கூண்டில் நின்றான். இரவு பன்னிரண்டு மணிக்கு அவனுக்கு எஜமானர் வீட்டில் என்ன வேலை? பொம்மைகளை அவன் தொட வேண்டிய அவசியம்? இடையிலிருந்த அந்தக் கத்தி?

''ஜட்ஜ் ஐயா! என்னை நம்புங்க! ஐயா தானுங்க எனக்குக் குரல் கொடுத்தாரு.. பொம்மையை எடுன்னு சொன்னாரு. நான் எடுத்தேனுங்க. சட்டுன்னு அவரே திருட்டு நாயேன்னு கத்திட்டாரு.... நான் திருட வரலீங்க... அவர் உப்பைத் தின்னவன் அவர் வூட்டுலேயே திருடுவேனுங்களா?'' என்று அவன் கதறிய கதறல்கள் எந்தச் செவியிலும் ஏறவில்லை. ''நான் கூப்பிடவில்லை. இவன் மகா அயோக்கியன்'' என்று எஜமானர் சாதித்தார்.

அவனுடைய இடையில் பளபளக்கும் கூரிய கத்தி. அதோடு அவன் இரவு வேளையில் [illegible]





வேறு எந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் பெறுங்கள்

உபயோகித்துப் பாருங்கள்! லிப்டன் ரூபி டஸ்ட் வேறெந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் தருகிறது.

அது மட்டுமல்ல! ரூபி டஸ்ட் தேயிலையைக் கொண்டு நிறம், மணம், குணம் நிறைந்த ருசி மிகுந்த பானத்தை உடனடியாகப் பெறலாம்.

எனவே லிப்டன் ரூபி டஸ்ட் "தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்" என்பதில் அதிசயம் எதுவும் இல்லை.





லிப்டன் ரூபி டஸ்ட்

தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்

LIPTON

லிப்டன் என்றாலே நல்ல டீ

எஜமானர் எதிரே வந்தால் அவரைக் கொலை செய்யவும் அவன் தயங்கியிருக்க மாட்டான் என்றல்லவா அர்த்தம்?

அப்படித்தான் கோர்ட்டில் தீர்ப்பாயிற்று. ''உண்ட வீட்டிலேயே திருட வந்தவன். கொலைக்கும் தயாராய்.... கொலைக்கும் துணிந்த திருடன்... ஐந்து வருடச் சிறை வாசம்!'' என்று தண்டனை வழங்கப்பட்டது.

''நான் திருட வரலேங்க!'' என்று அவன் கத்தினான். அந்தக் கதறல் நான்கு சுவரில் பட்டு அவன் செவி மீதே வந்து மோதியது.

''கருப்பாயி! நீயாவது நம்பு... நான் திருடனில்லே!'' என்றான். அவளும் வாய் திறக்கவில்லை.

துயரமெல்லாம் ஆத்திரமாக மாற, ''உனக்கு இனிமேல் என்ன கருப்பாயி! பிள்ளை செத்திடும்... நீ அப்பத் தனிதானே? வேறொருத்தனைக் கட்டிக்க... நல்லா இரு!'' என்று கோபத்தில் கத்தினான். அதற்கும் அவள் தந்த விடை மௌனம்தான்.

அவள் ஏன் கண்ணீர் சிந்தவில்லை? ஏன் அவன் இதயம் அமைதி பெற நாலிரண்டு ஆறுதல் மொழிகள் வழங்கவில்லை?

அவன் சிறைக்கு வந்தான். அவள்? அவள்?

நாளைக் காலை விடுதலை. எதிலிருந்து? சிறையிலிருந்து விடுதலைதான். ஆனால் வேதனையிலிருந்து? ஐந்து வருட காலமாய்க் கருப்பாயியை நினைத்துத் துடித்து உடலும் உள்ளமும் உயிரும் ஏங்கத் துன்ப வெள்ளத்தில் திக்குமுக்காடினானே, அந்த வேதனையிலிருந்து விடுதலை கிடைக்குமானால்...?

மறுநாள் காலை மணி ஐந்தடித்துவிட்டது.

இரவு முழுதுமே அவன் தூங்கவில்லை. தூரத்தில் ஒரு கடிகாரம் அடித்து ஓய்ந்தது. அதன் ஒலியையே எண்ணிக் கொண்டு படுத்திருந்தான். கண்களில் அனல் துண்டுகள் பொருந்திவிட்ட எரிச்சல். அதைக்கூடத் தாங்கிக்கொள்ள முடியும்போல் இருந்தது. ''இன்று எனக்காக வெளி உலகில் என்னென்ன அனுபவங்கள் காத்திருக்கின்றன?'' என்ற எண்ணத்தைத்தான் தாங்கவே முடியவில்லை.

அவன் மனத்து அந்தகாரம் வானெல்லாம் மேகங்களாய்ப் பரவியிருந்தது. காலை ஐந்தடித்தும் இருள் விலகவில்லை. மழைக் காற்று இரக்கமின்றி அரக்கனைப் போல் 'உய்...உய்' என்று ஊளையிட்டுக்கொண்டு வீசி வெட்டிற்று.

அதோ பூட்ஸ் ஒலி. அவனுடைய அறையை நோக்கி நெருங்கி விட்டது. கதவுகள் திறக்கப்படும் ஓசை.

அவன் அழைத்துச் செல்லப் பட்டான். சிறைச்சாலையின் உடையை அவிழ்த்தாயிற்று. உள்ளங்கையில் ரொக்கமாய்ப் பணத்தையும் தந்து விட்டார்கள். ''இனிமேல் நேர்மையாய் நடந்து கொள்ளப்பா!'' என்ற புத்திமதி அவன் செவிகளில் பாய்ந்தாயிற்று. சிறைச்சாலையின் கதவுகள் அவனை வெளியே விட்டு விட்டு உட்புறம் மூடிக் கொண்டன.

இனி? இனி?

மழை திடீரென்று வலுத்தது. இருள் இன்னும் விலகவில்லை. முகத்தில் கொட்டிய நீரில் இன்டாப் அவன் கண்களை மறைத்துக் கொண்டு மர ஓரமாய் ஒதுங்கிக் கொண்டான்.

எங்கும் இருள் மயம். அந்த இருளிலும் கொட்டும் நீரிலும் அவன் அவளைத் தேடினான். உயிரின் ஏக்கத்தை யெல்லாம் கண் வழியே கொட்டித் தேடினான்.

அவன் என்ன எதிர்பார்த்தான்? அவள் வருவாள் என்று? கொட்டும் மழையில் அவன் விடுதலையாகப் போகும் நாளை அத்தனை சரியாய் நினைவில் வைத்துக் கொண்டு அவனை எதிர்கொண்டழைக்க அவள் வருவாள் என்று?

சட்டென்று பின்னால் ஒரு குரல் மெல்ல ஒலித்தது. ''யாரு?''

அப்படியே திரும்பிப் பார்த்தான். இதயம் ஒரு கணம் நின்றுவிடுமோ என்றுகூட அஞ்சினான். தலைமேல் ஒரு பிளாஸ்டிக் துண்டைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த உருவம்... கருப்பாயியோ? அவளேதானா?

பண்பு பயிலுங்கள்!

நான் சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து பொலாரத்துக்குப் புகை வண்டியில் வந்து கொண்டிருந்தேன். என் பக்கத்தில் முப்பத்தைந்து வயது மதிக்கக் கூடிய ஒருவர் உட்கார்ந்திருந்தார்.


எதேச்சையாகப் பக்கத்தில் பார்த்தேன். 'திக்'கென்றது. இருபது அல்லது இருபத்தைந்து ஒற்றை ரூபாய் மடித்திருந்தது. பக்கத்திலிருந்தவரின் பாக்கெட்டிலிருந்து விழுந்திருக்கும் என்று நினைத்தேன்!



அதனால் அவரிடம் கூறினேன். அவர் கீழே விழுந்திருந்த ரூபாயை எடுத்தார். என் கண் எதிரிலேயே அந்த ரூபாய்களை எண்ணினார். எண்ணிப் பார்த்ததைக் கூடத் தவறாக நினைக்க முடியவில்லை.

நான் எடுத்துக் கொள்பவனாய் இருந்தால் அவரிடம் ரூபாய் கீழே கிடப்பதைச் சொல்லியிருப்பேனா? இதை அவர் உணர்ந்தவராக இருந்தால் என் மனத்துக்கு ஆறுதலாக இருந்திருக்கும்.

— எஸ். சந்திரசேகர்



"இவர் படத்தைப் பார்க்கும் பொழு தெல்லாம் எனக்கு அந்த நாளைய நினைவு வருகிறது. அப்பொழுதெல்லாம் காய் கறிகள் எவ்வளவு மலிவு, தெரியுமா?"

பேச முடியாமல் ஏதோ தொண்டையில் சிக்கிக் கொண்டது. அணையே நீராக்கினாற் போல் கண்ணீர் உஷ்ணமாய்க் கண்களில் தேங்கிற்று.

கறுப்பாயி மீண்டும் குரல் கொடுத்தாள். "யாரு? நீதானே?"

"நான்தான் கறுப்பாயி!" என்றான். இதயத்தின் ஆழத்தில் ஒரு குரல் கிசுகிசுத்தது. "நானேதான். யாரைத் தேடி நீ வந்தாயோ, அந்தப் பாக்கியசாலி நானேதான்!"

அவன் மௌனமாய் அவள் அருகே வந்து நின்றான். கண நேரம் அவள் முகத்தைப் பார்த்துவிட்டு அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"வா, போவலாம்."

"எங்கே கறுப்பாயி?"

"வூட்டுக்குத்தான்."

"கறுப்பாயி..."

"உம்?"

"அந்த நோஞ்சான் பிள்ளை..."

"நீ போனியா? ஒரு மாசம்தான். அது செத்துடுச்சு." அவள் குரலில் உணர்ச்சியே இல்லை.

"இந்த அஞ்சு வருஷங்களா நீ எப்படிச் சமாளிச்சே கறுப்பாயி?"

"நீ போனதுமே வூட்டைக் காலி பண்ணச் சொன்னாரு ஐயா. நாலு வூட்டுலே பாத்திரம் தேய்த்துக் கூட்டித் துடைச்சேன்."

"எந்தக் காவாலிப் பயலும் பல்லே இளிச்சானா?" அவன் குரலிலேயே ஆத்திரம் எழும்பியது.

"ஏன்? நீ ஜெயிலுக்குப் போயிட்டா கடையிலே விளக்குமாறு தீர்ந்துடும்னு நெனப்பா உனக்கு?" அவள் குரலில் சிரிப்பு.

அவன் மௌனமானான். இதயத்தில் பெருமிதம் பொங்கி வழிந்தது. சிறைச்சாலைக்குப் போகு முன் துயர மிகுதியில் அவளை என்னவெல்லாம் சொல்லித் திட்டினான்! அவளோ, உடல் தேய உழைத்து ஐந்து வருடங்கள் காத்திருந்து....

சட்டென்று திரும்பி அவன் பக்கம் பார்த்தாள் அவள். "கறுப்பாயி! நீ எப்படி இளைச்சிட்டே..."

"நீதான் வந்திட்டியே! இனிமே குந்தித் திங்க வேண்டியதுதானே? பழைய உடம்பு வர எத்தினி நாளாவும்?" அவள் அருகில் இருக்கும் நினைவில் அவள் உல்லாசமாய்ச் சிரித்தாள்.

"அப்படீன்னு நீயாச்சும் நம்பினியா கறுப்பாயி?"

"எதை?"

"நான் ஐயா வூட்டிலே திருடப் போவலைங்கிறதை..."

அவள் வேகமாய்த் தலையை ஆட்டினாள். "நீ திருடத்தான் போனே! எனக்கு நல்லாத் தெரியும்."

"என்ன?" அதிர்ச்சியில் அவன் கூவிவிட்டான். தன்னைத் திருடன் என்று நினைத்துமா அவள் ஐந்து வருடங்கள் காத்திருந்து இன்று வந்தாள்? அப்படியானால் அந்தத் தவத்துக்குத் இடம் அளித்ததுதான் என்ன?

"நீ திருடத்தான் போனே! எனக்கு நல்லாத் தெரியும்." அவள் மீண்டும் அதையே தயக்கமில்லாமல் உச்சரித்தாள்.

குரலில் வேதனையை நிறைத்து அவன் பேசினான். "அப்ப நீயும் என்னைத் திருடன்னுதான் சொல்றியா கறுப்பாயி! அப்ப ஏன் என்னைத் தேடிக்கிட்டு வந்தே? திருடனோட உனக்கென்ன?"

"நீ திருடனாயிருந்தா எனக்கென்ன? நீ என் புருஷனில்லையா? நான் உன் பெஞ்சாதி இல்லையா? என்னண்டை நீ பிரியமாத்தானே இருந்தே? அடிச்சியா உதைச்சியா? அந்தப் பிரியத்துக்காகத்தான் நான் வந்தேன். உன்னை நினைச்சுத்தான் நான் கஷ்டப்பட்டுக் காய்ச்சலையும் நோவையும் பார்க்காம வூடு கூட்டினேன், பாத்திரம் தேய்ச்சேன். ஜட்ஜ் ஐயா நீ திருடன்னு சொல்லிட்டா நான் உன்னை வெறுத்திடணுமா?"

அவன் நெஞ்சு விம்ம நின்றான். இனி அந்தத் திரையை அவன் கிழித்து எறிந்துவிடலாம். யாருடைய நன்மதிப்பையும் அன்பையும் இழக்க அஞ்சி அவன் நல்லவன் நாடகம் ஆட முயன்றானோ, அவளே அதை நம்பவில்லை. போலிச் சமாதானங்களை நம்ப வேண்டிய பரிதாப நிலையில் அவள் இல்லை. ஏனென்றால் உண்மையின் உருவமாய் அவள் நெஞ்சு நிறைய அன்பைத் தாங்கியிருந்தாள். உலகம் நம்பாததை அவன் இனியும் வாய் விட்டுக் கூறித் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம்.

"ஆமாம், கறுப்பாயி...நான் திருடத்தான் போனேன். ஐயா எதிரே வந்தா கத்தியைக் காட்டிப் பயமுறுத்தலாம்னுபோனேன். அவர் பின்னாலேயே வந்து மடக்கிப்புட்டாரு."

"வுட்டுத் தள்ளு..."

இருவரும் கையோடு கை இணையக் கொட்டும் மழையில் மேலே நடந்தார்கள். கறுப்பாயி அருகிருக்க அவனுக்கென்ன குறை? அவள் அன்பும் நேர்மையுமே அவனைத் தாங்கும். ஒரு முறை தவறியவனை நேர் பாதையில் அழைத்துச் செல்லவும் அந்த அன்பினால் முடியும்.

அந்தத் இடத்தில் அவன் தெளிந்த மனத்தோடு நடந்தான்.

அவன் தன்னிடம் திரும்பிவிட்ட தைரியத்தில் இன்பம் பொங்க அவள் நடந்தாள்.

பயிரும் களையும்

'ஆவன்னா'

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முன் காலை பத்து மணிக்கு நானும் 'அறுநூத்தி நாலு' சண்முகமும் ஆஜராக வேண்டும் என்று உத்தரவு வந்திருந்தது. விசாரணைக்காக. என்ன விசாரணை என்று தெரியவில்லை.

நானும் மேற்படி சண்முகமும் குறிப்பிட்ட நேரத்தில் போய் 'சல்யூட்' அடித்து நின்றோம்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாதவ ராவ் கண்டிப்புக்குப் பேர் போனவர். முன்கோபி என்று சொல்வார்கள். படீரென்று பேசுவார். யோசித்துப் பேச மாட்டார்.

அவரே இப்போது யோசனையில் ஆழ்ந்திருந்தார். தொலைவில் எதிலோ கண்கள் லயித்திருக்கச் சிந்தனை வசப்பட்டிருந்தார். கொஞ்ச நேரம் ஆயிற்று. ஏதோ நிர்மானம் உறுதிப்படுவது முகத்தில் தெரிந்தது. நாற்காலியைப் பின்னுக்கு நகர்த்தி, மேஜைக்குள்ளிருந்து ஒரு கடிதத்தை எடுத்து வைத்துக் கொண்டார். அது 'இன்லண்ட்' கவர். ஏதாவது புகாராக இருக்குமோ என்று என் மனத்தில் ஓடிற்று.

''போன மாதம் இரண்டாம் தேதி நீங்கள் இருவரும் கேடி கருப்பசாமியைத் திருச்சி ஜெயிலுக்கு 'எஸ்கார்ட்' செய்தீர்கள் அல்லவா?''



''ஆமாம்'' என்றோம் இருவரும்.

''விருதுநகர் ஜங்ஷனி லிருந்து காதர் மியான் என்பவர் – ஒரு மரக் கடை வியாபாரி – உங்களுடன் திருச்சி வரையில் பிரயாணம் செய்தாரா?''

ஒப்புக் கொண்டோம்.

''சரி! அப்புறம் நடந்த சம்பவத்தை உங்களில் ஒருவர் சொல்லலாம்'' என்று பேப்பரையும் பேனாவையும் எடுத்து வைத்துக் கொண்டார். நான் அன்றைய சம்பவத்தை ஞாபகப்படுத்திக் கொண்டேன்.

* * *

அந்தக் கருப்பசாமி என்ற கேடிக்கு ஒரு பிக்பாக்கெட் வழக்கில் எஸ். டி. எம். கோர்ட்டில் ஒன்பது மாதம் தண்டனையாகியிருந்தது. 'லீடிங் செயின்' போட்டு 'எஸ்கார்ட்' செய்ய வேண்டிய புள்ளி. செங்கோட்டை பாஸஞ்சரில் நாங்கள் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம்.

விருதுநகர் ஜங்ஷனில் ஒரு முஸ்லிம் பெரியவர் நாங்கள் இருந்த பெட்டியில் ஏறினார். தலையில் பூ வேலை செய்த வெள்ளைத் துணிக் குல்லா. தாடி, ஜிப்பா, கைலி. அவர் ஒரு வியாபாரி என்கிற விலாசம் முகத்தில் தெரிந்தது. எங்கள் எதிரில் பெஞ்சியில் ஜன்னல் ஓரமாக வந்து உட்கார்ந்தார். மிதியடியைக் கழற்றிவிட்டுச் சம்மணம் போட்டு உட்கார முயன்று, அது சௌகரியப்படாததால் மறுபடியும் காலைத் தொங்கப் போட்டுக்கொண்டார். பொதுப்படையாக எங்கள் மூவரையும் ஒரு நோட்டம் விட்டு விட்டு எங்கள் நடுவில் இருந்த கைதியைக் கூர்ந்து பார்த்தார்.

''பையன் நல்ல பிள்ளையாட்டம் இருக்கானே! என்ன வழக்கிலே புடிச்சுக்கிட்டுப் போறீங்க தம்பி?'' என்று கேட்டார்.

''ஆமாமா! நல்ல பிள்ளையாட்டம்தான் இருப்பான். இல்லாட்டி இவன் வயசுக்கு ஏழு தடவை ஜெயிலுக்குப் போயிருப்பானா?'' என்றான் என் நண்பன்.

கைதிக்குச் சுருக்கென்றிருக்க வேண்டும். முகம் சிவந்து தலையைக் குனிந்து கொண்டான். நான் பேச்சை மாற்ற முயன்றேன்.

''பாய் எதுவரைக்கும்? மதுரைக்கா?''

''இல்லே தம்பி! திருச்சிக்குப் போகிறேன். அங்கே கரூர் பஸ் ஸ்டாப் இல்லே? அதுப் பக்கம் நமக்கு மரக்கடை. 'கனி பர்னிச்சர்



மார்ட்' என்று பேர். வியாபார விஷயமாகத் தான் இங்கே வந்துட்டுப் போறேன்.'

''ஓஹோ!'' என்று சொல்லிவிட்டுப் பேசாமலிருந்தேன். மேலே பேச்சை எப்படித் தொடர்வது என்ற யோசனை எனக்கு.

''ஏலே! யார் பெத்த புள்ளையோ போனு போவுதுன்னு கோயில்லே படுக்க இடம் கொடுத்தால், குத்து விளக்கையாலே களவாடணும்? போட்டான் பாரு ஒன்பது மாசம்! என்னைக் கேட்டால் உன்னையெல்லாம் சாகிற வரை வெளியே உடப்படாது ஆமா...'' என்றான் சண்முகம்.

கைதி 'களுக்'கென்று சிரித்தான். என்ன நினைத்தானோ?

எனக்கு அவன் சிரிப்பு முறைகேடாகப் பட்டது. முறைத்துப் பார்த்தேன்.

''இருந்தாலும் களவு என்பது ரொம்பக் கெட்ட பய தொழில் தம்பி! ஆண்டவன் எதை மன்னிச்சாலும் மன்னிப்பான் களவை மட்டும் மன்னிக்க மாட்டான்'' என்றார் சாயபு.

''வேறே தொழில் கிடைச்சா நான் ஏன் சார் திருடறேன்?'' என்றான் கைதி.

''தொழில் என்கிறது ஒருத்தன் குடுத்துச் செய்யறது இல்லே தம்பி! அது கூலி வேலே. எந்தத் தொழிலே வேணாலும் எடுத்துக்கோ. அதுலே ஒரு உறுதி, பிடிப்பு ஏற்படணும். அப்ப நீ ராஜா ஆயிட்ட மாதிரி...

''ஏன் களவுங்கறதையே எடுத்துக்கோயேன்! அது என்ன ரொம்பச் சுலபமோ? எவ்வளவு சாமர்த்தியம், லாகவம், துணிச்சல், தந்திரம் எல்லாம் வேண்டியிருக்கு? அதிலே நீ காட்டற திறமையை வேறே தொழில்லே செலுத்தினுக்கே நல்லவிதமாப் பிழைக்கலாமில்லேயா....?'' என்று உபதேசித்தார் சாயபு.

'சடபட' என்ற பேரிரைச்சலுடன் வண்டி மதுரை ஜங்ஷனில் வந்து நின்றது. சிலர் இறங்க, பலர் மூட்டை முடிச்சுகளுடன் முண்டியடித்துக்கொண்டு ஏறினார்கள். கூட்டம் நிரம்பி வழிந்தது.

சாயபு தாராள மனகள்ளவராக இருந்தார். ஏமெட்டுச் சாதப் பொட்டலங்கள் வாங்கினார். எங்களுக்கும் — நாங்கள் மறுத்தும்—கொடுத்துத் தாமும் உண்டார். வண்டி மதுரையை விட்டுக் கிளம்பியதுபோது மணி பதினொன்று ஆகியிருந்தது. வண்டியின் சாவதான ஓட்டத்திலும் இதமான அசைவிலும் கொஞ்ச நேரத்தில் தூக்கம் கண்ணை அழுத்திக்கொண்டு வந்தது. சோழவந்தானிலும் கொடை ரோட்டிலும் சிலர் இறங்கவே நெருக்கடி குறைந்து இடம் கிடைத்தது.

''நேத்துப் பூராத் தூக்கம் இல்லே. சித்தெ அசந்துக்கிறேன் தம்பி! திருச்சியில் எழுப்பி விட்டுருங்க!'' என்று பெஞ்சியில் முடக்கிக் கொண்டார் சாயபு.

இதுவரை தூங்கித் தூங்கித் தலையை என் தோளில் இடித்துக் கொண்டு வந்த கைதி, 'பெஞ்சிக்குக் கீழே படுத்துக்கிடட்டுமா சார்?' என்றவுடன் சம்மதித்தேன். சாயபுக்குக் கீழே பெஞ்சுக்கடியில் சுருண்டு கொண்டான். விலங்குடன் பூட்டப்பட்ட 'லீடிங் செய்னை' என் பெல்ட்டுடன் இணைத்துக் கொண்டு நானும் ஜன்னலில் சாய்ந்து கொண்டேன்.

'லீடிங் செயின்' அசைந்து 'களுக்' என்ற சத்தம் கேட்டபோதெல்லாம், நான், உஷாராவேன். ''என்னடா செய்யறே?'' என்று கேட்டால், 'மூட்டை கடிக்குது சார். சொறிந்து கொண்டேன்'' என்பான்.

பலபலவென்று விடிய வண்டி திருச்சி வந்தது. சாயபுவை எழுப்பிவிட்டு நாங்களும் இறங்கினோம்.

''பையனை ஜெயில்லே உட்டுட்டுத் திரும்பிப் போகிறப்போ, நம்ம கடைக்கு வந்துட்டுப் போங்கோ, தம்பி!'' என்ற அழைப்புடன் விடைபெற்றுக் கொண்டு சாயபு போய்விட்டார். கைதியும் நாங்களும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தோம். நீண்ட பிரயாண அலுப்பும், தூக்கக்



''இடைத்தேர்தலில் 'சிறந்த நடிகை' என்ற பட்டத்தை இந்திரா காந்திக்குக் கொடுக்கலாம்.''

இல்லஸ்ட்ரேடட் வீக்லி - பாலி

கொடுமையும் வயிற்றைக் கிள்ளிற்று. பக்கத்திலிருந்த சிறு ஹோட்டலை நோக்கி நாங்கள் போனபோது கைதி நின்று தயங்கினான்.

''சார், அந்தப் பக்கமா பெரிய கடைங்க இருக்கு சார்! இந்நேரம் இடியாப்பமும் சால்னாவும் தயாராய் இருக்கும்'' என்றான்.

''ஆமாடா! கோழி சாப்ஸும் புரோட்டாவும்கூடச் சூடாக இருக்கும். அதுக்கெல்லாம் காசு யார்கிட்டே இருக்கு?'' என்றேன்.

கைதி விலங்கிட்ட கைகளால் இடது பக்க இடுப்பின் வேஷ்டிக்குள்ளிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் காண்பித்தான்!

நாங்கள் திகைப்படைந்து நின்றோம்!

''அட பாவி! இவ்வளவு நாட்களும் இதை எப்படி ஒளித்து வைத்திருந்தாய்? சப்-ஜெயிலிலிருந்து வரும்போதுகூட உன்னை 'சர்ச்' பண்ணித்தானே கொண்டு வந்தோம்?''

கைதி 'திருதிரு' வென்று விழித்துக் கொண்டு நின்றான்.

''சொல்லுடா அயோக்கியா! இந்தப் பணம் ஏது உனக்கு?''

விழப்போகும் அடியைச் சமாளிக்க விலங்கிட்ட கைகளை இடது கன்னத்துப் பக்கம் தூக்கிக் கொண்டு சொன்னான்: ''ராத்திரி சாயபு பையிலேருந்து எடுத்தேன் சார்!''

''அடப் பாவி!'' என்று ஓங்கி அறையக் கை எடுத்தவன் 'பொது' ரோடு என்பதை உணர்ந்து நிறுத்திக் கொண்டேன்.

''எவ்வளவுடா எடுத்தே?'' என்று கேட்டுக்கொண்டு அவன் மடியையும் ஜேபியையும் துளாவிப் பார்த்தோம்.

''சத்தியமாய் இது மட்டும்தான் சார்! நான் என்ன செய்வேன்? பெஞ்சுக்கடியில் படுத்திருந்தேனா? சாயபு மடியிலே கட்டியிருந்த துணிப் பை அவிந்து என் மூஞ்சி மேலே தேன் கூடு மாதிரி ஆடிச்சு சார்! ஆயிரம் ரூபாய் இருக்கும். இந்த ஒண்ணை மட்டும் எடுத்துக்கிட்டுப் பையைக் கட்டி வைச்சுட்டேன்...''

எங்களுக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. வெகு நேர யோசனைக்குப் பின் — மனிதாபிமானத்துடன் கூடிய — ஒரே ஒரு வழிதான் எங்களுக்குத் தென்பட்டது.

கைதியைச் சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகளுடன் சிறையில் ஒப்புவித்தோம். நேரே கரூர் பஸ் ஸ்டாண்ட் வந்து 'கனி பர்னிச்சர் மார்ட்'டைக் கண்டு பிடித்து, சாயபுவிடம் விஷயத்தைச் சொல்லிப் பணத்தையும் கொடுத்தோம். அதன் பிறகுதான் அவர் உள்ளே போனப் பணத்தை எண்ணி, பத்து ரூபாய் [illegible].

''பாவம்! இந்தப் பணத்திலே அவன் கேட்ட சாப்பாட்டை வாங்கிக் கொடுத்திருப்பதுதானே தம்பி!'' என்றார் எங்களிடம்.

அவர் பெருந்தன்மையை எண்ணி வியந்தோம் நாங்கள். பின்பு அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, விவகாரம் அத்துடன் முடிந்து விட்டதாக எண்ணித் திரும்பினோம்.

''உங்களுக்கும் எனக்கும் எதற்காகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பது தெரியுமா?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர். அவர் குரல் கரகரத்து இறுகிப் போயிருந்தது.

''ஆமாம் சார்! குற்றங்களைத் தடுப்பதற்கும், குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனைக்குள்ளாக்கவும்...'' எங்கள் பயிற்சிக் காலத்தின் அரிச்சுவடியை ஒப்புவித்தேன்.

''உங்கள் பொறுப்பில் இருந்த ஒரு கேடி உங்கள் அஜாக்கிரதை காரணமாக ஒரு குற்றம் செய்தான். குற்றம் நடந்தது தெரிந்தபின் சட்டப்படி முடிவு செய்ய வேண்டிய ஒரு காரியத்தைச் சொந்த முறையில் நீங்கள் பைசல் செய்துள்ளீர்கள்...''

''அந்தப் பெரியவர் இது பற்றிப் புகார் செய்திருக்கிறாரா சார்?'' என்று கேட்டேன்.

''புகார் செய்யவில்லை. உங்கள் நடத்தையைப் பாராட்டித்தான் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார். ஆயினும் உங்கள் தவறும் இதில் வெளிப்படுகிறதே...''

''உங்களிடம் அவன் ஒப்புக்கொண்ட உண்மையைப் பக்கத்தில் உள்ள ரயில்வே போலீஸில் ரிப்போர்ட் செய்து, அந்தச் சாயபுவையும் சாட்சியாகப் போட்டு...''

பாவம்! அந்தச் சாயபு — இந்தப் பத்து ரூபாயை ஒரு பொருட்டாகவே எண்ணாத நல்ல மனிதர் — கோர்ட்டின் நீண்ட வராந்தாவில் காத்துக் கிடப்பதும், சாட்சிக் கூண்டில் திண்டாடித் திணறுவதும் என் மனக் கண் முன் தெரிந்தது.

''அந்தச் சாயபு ரொம்ப நல்லவர் சார்! இதையே ஒரு வழக்கு ஆக்கி அவரைச் சாட்சியாகப் போட்டால் சொல்வாரோ, மாட்டாரோ தெரியாது சார்!''

''அங்கேதான் கோளாறு இருக்கிறது. நல்லவர்களின் இந்தப் பலவீனம்தான் கருப்பசாமி போன்ற புல்லுருவிகள் பயிருக்குள் களை போல் வளரக் காரணமாக இருந்து வருகிறது. பயிருக்கு உரமிட்டால் மட்டும் போதாது. களையெடுக்கவும், காலம், பணம், உழைப்பு எல்லாம் விரயம் செய்துதான் ஆகவேண்டும்.''

இன்ஸ்பெக்டர் ஸ்டேட்மெண்டை முடித்திருந்தார். இருவரும் கையெழுத்திட்டோம்.

''நடைபெற்றுள்ள இக் காரியங்களில் 'சுயநல நோக்கம்' உங்களுக்கு இல்லாதது தெரிவதால் குறைந்த தண்டனைக்குச் சிபாரிசு செய்கிறேன். நீங்கள் போகலாம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

நாங்கள் சல்யூட் அடித்துவிட்டுத் திரும்பினோம்.

'சட்டம் ஒரு கழுதை' என்று யாரோ சொல்லியிருப்பது ஞாபகம் வந்தது. அதன் முன்னால் போவதை விடப் பின்னால் போவது தான் [illegible]'

நல்ல வேளை அவன் பிழைத்துக் கொண்டான்!

ஸ்ரீவத்ஸன்

பாரதப் போரே நடந்து கொண்டிருந்தது. வேறு எங்கேயுமில்லை. சமையற்கட்டில்தான்.

அவன் பிள்ளை பாலு பள்ளிக்கூடத்துக்குப் புறப் படும் நேரம்தான் அது. அதைத்தான் அவன் பாரதப் போர் என்று சொல்லிக் கொள்வது வழக்கம்.

அவன் மனைவிக்கும், மகன் பாலுவுக்கும் நடக்கும் பேச்சுவார்த்தைகள் அப்படித்தான் இருக்கும். இதோ கேளுங்கள், அந்தச் சம்பாஷணையை :

''இருபது நயா பைசா வேணும்.''

'' எதற்கு ?''

''வாத்தியார் கேட்டார்.''

'' முந்தாநாள்தானே வாத்தியார் கேட்டார்னு இருபது பைசா வாங்கிப் போனாய்.''

''ஆமாம்.''

'' மறுபடியும் எதற்கு இருபது பைசா? வாத்தியார் களுக்குச் சம்பளம் சர்க்காரிலே கொடுக்கிறதில்லையா?''

''கொடுக்கிறா....''

''அப்புறம் எதற்கு இரண்டு நாளைக்கு ஒரு தடவை பத்துப் பைசா, இருபது பைசா தண்டல்?''

''அதென்னமோ தெரியாது. வாத்தியார் கேட்டால் தரவேண்டியதுதானே ?''

''நான் வந்து வாத்தியாரைக் கேட்கிறேன், காசு கேட் டாரா என்று.''

''என்னை நீ நம்பவில்லை என்று மற்றப் பசங்கள் என்னைக் கேலி செய்வார்கள். நீ பள்ளிக்கூடத்துக்கு வரக் கூடாது.''

''நீ பொய் சொல்லிக் காசு கேட்கிறாய்.''

'' நான் ஏன் பொய் சொல்கிறேன் ? வாத்தியார் கேட்பதால்தான் கேட்கிறேன்.''

'' நான் தர முடியாது.''

'' நான் பள்ளிக்கூடத்துக்குப் போக முடியாது.''

அவனுக்குப் பொறுமை எல்லை மீறிப் போயிற்று. மனைவி பேரில் எரிந்து விழுந்தான் :

''ஏ, சனியனே! கொடுத்துத் தொலைப்பதுதானே ?''

'' நீங்க கொடுக்கிற இடம்தான் அவன் இப்படி அழிச்சாட்டியம் பிடிக்கிறான்.''

'' எலே, இங்கே வந்து தொலை. இந்த இருபது பைசாவுக்கு இருபத்து ஐந்து பைசாவாய்த் தந்திருக் கிறேன். எடு, ஓட்டம்.''

பயல் ஓடிவிட்டான், இருபத்து ஐந்து பைசாவுடன்.

''நீங்கள் பையனைக் குட்டிச்சுவராக்குகிறீர்கள். அவன் பொய் சொல்லிப் பொய் சொல்லித் தினமும் காசு பறிக்கிறான்.''

'' பொய் சொல்ல மாட் டான். வாத்தியார் கேட்காமல் இருக்க மாட்டார். அவன் கொண்டு போய்க் கொடுக்காவிட் டால், அவனைக் கோபிக்கமாட் டாரா ?''

'' நான் அவன் பொய் சொல் கிறான் என்கிறேன்.''

'' நான் அவன் நிஜம் சொல்வ தாய்ச் சொல்கிறேன்.''

''நீங்களே போய் வாத்தியா ரிடம் ஒரு நாள் கேளுங்கள். உண்மை தெரியும்.''





''ஒரு நாள் என்ன, இன்றே போகிறேன்.''

அவன் பள்ளிக்குப் போனான். அப்பொழுது பள்ளிக்கூடத்தில் வகுப்பு ஆரம்பிக்கவில்லை. வாத்தியாரைத் தேடிப் போனான்.

மூன்றாம் வகுப்பறையில் போனதும் ஒரு வாத்தியாரம்மாவைப் பார்த்தான். வாத்தியார் இல்லை. திரும்பிவிட நினைத்தான்.

''யாரைத் தேடுகிறீர்கள்? உங்கள் குழந்தைகள் யாராவது படிக்கிறார்களா, இந்த வகுப்பில்?'' என்று வாத்தியார் அம்மா கேட்டார்கள்.

''ஆமாம்.''

''பெயர்.''

''பாலு.''

''ஓ, அவனா! என்ன விசேஷம்?''

''ஒன்றுமில்லை. கொஞ்சம் தாமதமாய் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பினான். நீங்கள் ஏதாவது சொல்வீர்களோ என வந்தேன். நான் வருகிறேன்.''

''பரவாயில்லை. ஓர் ஐந்து நிமிடங்கள் இப்படி வருகிறீர்களா ?''

'' என்ன விசேஷம் ?''

''ஒன்றுமில்லை. சொன்னால் பையன் பேரில் கோபப்பட வேண்டாம். மற்றப் பையன்கள் சொல்வதில் இருந்து நான் அறிவது இது தான். தினமும் உங்கள் பையன் வீட்டில் வாத்தியார் இருபது பைசா கேட்டார், முப்பது பைசா கேட்டார் என்று வாங்கி வருகிறானாம். அதில் தினமும் ஐஸ்க்ரீம், கடலை வாங்கிச் சாப்பிடுகிறானாம். நான் பையனைக் கேட்கவில்லை. ஒரு நாள் அவன் பெற்றோரை வரச் சொல்லி விவரமாய்ச் சொல்ல வேண்டும் என்ற ஆசை. நல்ல வேளையாய் நீங்களாகவே வந்தீர்கள். கண்டிப்பாய் இருங்கள்.''

''அப்படியா ?''

''ஆமாம். இதனால் இரண்டுவித ஆபத்து. வாத்தியார்கள் தினமும் பையன்களிடம் காசு வாங்குகிறார்கள் என்ற கெட்ட பெயர். தினமும் ஐஸும் மற்றத் தின்பண்டங்களும் வாங்கித் தின்பதால் குழந்தைகளுக்கு அஜீர்ணம் உண்டாகி ஆபத்தும் வரும்.''

''ஆமாம்.''

''அத்துடன் மூன்றாவது ஆபத்தும் ஒன்று இருக்கிறது; முதலில் சொன்ன இரண்டு ஆபத்துக்களும் குழந்தையையும் அதன் பெற்றோரையும் வாத்தியார்களையும் பற்றியது. ஆனால் மூன்றாவது ஆபத்து தேசத்துக்கே ஆபத்து.''

''தேசத்துக்கு ஆபத்தா ?''

''ஆமாம். உங்கள் பையன் படித்துப் பெரியவன் ஆகிறான். ஓர் ஆபீசில் வேலைக்குப் போவான். சின்ன வயதில் வாத்தியார் கேட்பதாய்க் கேட்டு ஏமாற்றி வாங்கியவனுக்கு அந்தப் பழக்கம் வேர் ஊன்றி இருக்கும். ஓர் அதிகாரியானால் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் போகும்படி இருக்கும். அப்போது சுற்றுப் பிரயாணம் செய்யாமலோ அல்லது செலவு செய்யாத செலவுகளுக்குப் படிப் பணம் கேட்டோ சர்க்காரிடமிருந்து வாங்குவான். இது மிகவும் ஆபத்து. பல நாட்கள் பிடிபடாமல் இருப்பதால் அவனுக்குப் படிப் பணம் ஆதாயமாய் இருக்கும். ஆனால் கண்டு பிடித்து விட்டால் உத்தியோகத்துக்கு ஆபத்து. சம்பி எண்ணக்கூட தேறும். அப்போது அவன் குடும்பம் மனைவி, குழந்தைகள் கதி என்னவாகும்? சின்ன விஷயம் தான். ஆனால் அது எவ்வளவு பெரிய ஆபத்தில் கொண்டு போய்விட முடியும் பார்த்தீர்களா? பையனைக் கண்டித்துத்திருத்துங்கள். அவனும் உருப்படுவான். தேசமும் உருப்படும். இப்படித்தான் என் பெரியப்பா பிள்ளை ஒருவன் பொய் சொல்லிப் படிப் பணம் சர்க்காரில் வாங்கி வேலையே போய்விட்டது.''

'' வருகிறேன் அம்மா.''

'' நான் சொன்னதில் உங்களுக்கு வருத்தமா ? பையனைத் திருத்தச் சொன்னேன். அவ்வளவுதான். போய் வாருங்கள். வகுப்புக்கள் ஆரம்பிக்கும் மணி ஒலிக்கிறது.''

அவன் சிந்தனையுடன் வீட்டுக்கு வருகிறான். வீட்டுக்கு வந்ததும் முதல் காரியமாய்க் காரியாலயத்துக்கு அன்று கொடுக்கவிருந்த தன்னுடைய சுற்றுப் பிரயாணச் செலவுப் படி பில்களைச் சுக்குநூறாகக் கிழித்தெறிந்தான்.

அவன் மனைவி கேட்டாள்: ''என்னங்க, பைத்தியமா பிடிச்சிருக்கு! ஆபீஸ் கடிதாசுகளைச் சுக்குநூறாய்க் கிழிச்சிட்டீங்களே ! வாத்தியாரைப் பார்க்கப் போனீங்களே, ஏதாவது சண்டையா?''

'' உன் பிள்ளையைத் திருத்தச் சொல்வதன் மூலம் என்னைத் திருத்திவிட்டாள்.''

''என்ன சொல்றீங்க ?''

''நீகூட முன்பு பல தடவை சொல்வாயே ! குறுக்கு வழியில் சம்பாதிக்கும் காசு உருப்படாது; கஷ்டப்பட்ட காசே நமக்கு ஒட்டுவதில்லை. பொய்ப்பிரயாணப்படி பணம்வாங்காதீங்கோன்னு சொல்லியே. அப்போ நான், 'அடி போடி பைத்தியம், யாரும் செய்யாததையா நான் செய்கிறேன்' என்று கேட்டேன். ஆனால் பாலுவின் வாத்தியார் அம்மா பாலுவுக்குச் சொன்னது என் மனத்தில் பதிந்து விட்டது. இனிமேல் பொய்ப் பிரயாணப்படி போட மாட்டேன்.

''இப்ப கிழிச்சு எறிஞ்ச பில்களில் போன மாதம் எட்டே நாட்கள் பிரயாணம் போயிட்டு இருபது நாட்கள் போனதாய்ப் போட்டிருந்தேன். அறை வாடகை மூன்றரை ரூபாய் என்று போட்டு 'கிளெம்' செய்தேன். ஆனால் உள்ளபடி காரியாலய அறைகளிலேயே தங்கிவிட்டேன். யார் யாரோ வீட்டில் ஓசிச் சாப்பாடு வடை பாயசத்துடன் சாப்பிட்டுவிட்டு 'மெஸ் பில்' தினமும் நாலரை ரூபாய் தாக்கல் செய்திருந்தேன். நான் செலவழித்தது மூணு ரூபாய் முப்பது பைசா. தாக்கல் செய்ததோ எண்பது ரூபாய் நாற்பது பைசா.

''இனிமேல் உண்மையாய்ச் செலவு செய்த காசுக்கு மேல் ஒரு நயா பைசாகூட வாங்க மாட்டேன். பிரயாணம் போகாமலேயே பிரயாணம் போனதாய்ப் படி தாக்கல் செய்ய மாட்டேன்.''

'' இப்பத்தான் என் மனசு குளிர்ந்தது'' என்றாள் அவர் மனைவி.

அன்று மாலை.

கோவிலில் அவர் மனைவி, ''என் வயிற்றில் பாலை வார்த்தாயே ரஞ்சனி. நீ இப்படிச் சொல்லி இருக்கா விட்டால் அவர் திருந்தி


இன்ப
ஊற்றினில்
நனைந்த
துண்டோ ?
ஃபண்டா ஆரஞ்சு
சுவை இனிதே...
பருகிடவே
எடுக்காதோ தாகம்!
ஃபண்டா, கோகா-கோலா
கம்பெனியின் தயாரிப்பு
CMCP-2-152 TAM

இருக்க மாட்டார்'' என்று ரஞ்சனியைக் கட்டிக் கொண்டாள்.

ரஞ்சனி சொன்னாள்.

'' உன் பிள்ளை அடிக்கடி வாத்தியார் காசு கேட்பதாய் உன்னிடம் சொன்னதாய்ச் சொன்னாய். அதே சமயம் உன் கணவர் பொய்ப் பிரயாணப்படி போடுவதையும் என்ன சொல்லியும் அவர் கேட்கவில்லை என்றும், அது எந்த ஆபத்தில் கொண்டு போய்விடுமோ என்றும் கவலைப்பட்டுச் சொன்னாய். இன்று அவர் வந்ததும் ஒரே கல்லில் இரண்டு மாங்காயை வீழ்த்த முயன்றேன். என் பெரியப்பா பிள்ளை பொய்ப் பிரயாணப்படி போட்டு வேலையை விட்டு நீக்கப்பட்டதாய்க் கற்பனையாய்ச் சொன்னேன். அப்போதே அவர் முகம் போன போக்கில் இருந்து மனிதர் மாறிவிட்டார் என்று கண்டு கொண்டேன். நல்ல வேளை ஒருவாரம் முன்பு என் உயிர்த் தோழியான நீ என்னைச் சந்தித்துச் சொல்லியது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று தெரியுமா? உன் கணவரும் பொய்ப் பிரயாணப்படி பில்களைக் கிழித்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று தெரியுமா?''

எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று?

ஆமாம்.

இந்த மாதம் வழக்கமாய் படி பில் போட்டு அவர் கொடுக்கும் போது அவ்வளவும் பொய் என்பதைக் காட்டச் சில தகவல்களைச் சேகரித்து ரகசியமாய் ஆபீசில் வைத்திருந்தார்கள். அவன் பில் கொடுத்ததும் அதை வெளிப்படுத்துவதாய் இருந்தார்கள்.

ஆனால் அவன் அகப்பட்டுக் கொள்ளவில்லை.

தான் சுற்றுப் பிரயாணம் செய்த நாட்களுக்கு மட்டும் பிரயாணப்படி தாக்கல் செய்திருந்ததுடன் அறை வாடகை ரசீதுகள் இருந்ததற்கு மட்டும் பில் தாக்கல் செய்திருந்தான்.

நல்லவேளை !

அவன் பிழைத்துக் கொண்டான்.

ஒட்டைச் சிவிங்கி

உதைத்தால்........?

ஒட்டைச்சிவிங்கி பிராணி இனங்களில் மிக உயரமானது என்பது மட்டுமல்ல, எடையிலும் மூன்றாவது ஸ்தானத்தைப் பெறுகிறது. ஓர் ஆண் ஒட்டைச் சிவிங்கியின் எடை 2400 பவுண்டு!

சாதாரணமாக ஒட்டைச்சிவிங்கியைப் பார்க்கும்போது இதனுடைய முன்னங்கால்கள் பின்னங்கால்களைவிட மிக நீளமாக உள்ளன என்று எண்ணத் தோன்றும். ஆனால் உண்மையில் முன்னங்கால்களும் பின்னங்கால்களும் ஒரே நீளமுடையவை. இதனுடைய தோள் பட்டை எலும்புகளோடு முன் கால்கள் இணைந்திருப்பதால் பின்னங்கால்களைவிட நீளமாக இருப்பதாகத் தோற்றமளிக்கும்; அவ்வளவே.

தன் கண்களால் முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் எப்பக்கமும் தன் தலையைத் திருப்பாமலேயே பார்க்கக் கூடிய திறன் கொண்டது, இம்மிருகம். மந்தமான சப்தத்தைக்கூடக் கேட்கக்கூடிய செவிப்புலனையும் சிறப்பான மோப்ப சக்தியையும் கொண்டுள்ளது. உணவு உண்ணும்போது மணல், தூசிக் காற்று வீசினால் உடன் இதன் மூக்குத் துவாரம் தன்னால் மூடிக்கொள்ளும்.


ஒட்டைச் சிவிங்கியின் நாக்கு நாம் வியக்கும்படியாகச் சுமார் பதினெட்டு அங்குல நீளம் உள்ளது. ரப்பர் போன்று வளைந்து கொடுக்கக் கூடியது. வாயின் வெளியே நாக்கைத் தன் இச்சைப்படி நீட்டவும், மிகச் சிறிய பொருளைக்கூடப் பற்றி வாய்க்குள் கொண்டு வரவும் இதனால் முடியும்.

ஒட்டைச் சிவிங்கி மாடு அசை போடுவது போன்று உணவுப் பையிலிருந்து உணவை வாய்ப் பகுதிக்குக் கொணர்ந்து நன்கு தன் பற்களால் அரைத்து உண்ணும். ஒட்டைச் சிவிங்கிகள் பல மாதங்கள்கூட நீருண்ணாமல் இருக்கக்கூடிய திறன் பெற்றவை. கோடை காலத்தில் தண்ணீர் கிடைக்காவிட்டாலும் கூட, உண்ணும் இலைகளில் உள்ள ஈரப் பசையே அவற்றுக்குப் போதுமானது. ஒட்டைச்சிவிங்கி மணிக்குச் சுமார் முப்பது மைல் வேகத்தில் ஓடும்.

ஒட்டைச் சிவிங்கியை உணவாகக் கொள்ளப் பகை விலங்கு பின் துரத்தி வரும் போது வேகமாக ஓடிக் கொண்டே துரத்தி வரும் பிராணியைக் கண்காணித்துச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்து வலிமைவாய்ந்த உதையைத் தன் பின்னங் கால்களால் அவ்விலங்குக்குக் கொடுக்கும். உதையைப் பெற்ற இடம் சின்னாபின்னமாகி, எதிரி தூக்கி எறியப்படும். அந்த அளவுக்கு ஆக்ரோஷமாக உதை கொடுக்கக் கூடியது. சிங்கம்கூட இதனிடம் உதை வாங்க நேரிட்டால் அதிர்ச்சியால் நிலைகுலைந்துவிடும். ஓடிக் கொண்டிருக்கும் ஒட்டைச்சிவிங்கி தன் பின்னங் கால்களால் புழுதியை அல்லது மண்ணைக் கிளறிப் புழுதிப் படலத்தை உண்டு பண்ணுவதாலும், தன் வாலை விநோதமுறையில் சுழற்றி, சுழற்றி வீசிப் பகை விலங்கைத் தாக்குவதாலும் பகை விலங்கு தன்னை எளிதில் நெருங்காதபடிக்குத் தடை செய்கிறது.

ஒட்டைச் சிவிங்கி மே அல்லது ஜூன் மாதம் ஒரு தடவைக்கு ஒரு குட்டிதான் போடும். கர்ப்ப காலம் பதினைந்து மாதங்கள். பிறந்த இருபது நிமிடங்களிலேயே குட்டி எழுந்து, தன் தாயின் முன்னங் கால்களுக்கிடையில் நின்று கொள்ளும். பிறந்த குட்டியின் உயரம் சுமார் ஐந்தேகால் அடியிலிருந்து ஐந்தே முக்கால் அடி வரை இருக்கும். குட்டி சுமார் ஒன்பது மாதங்கள் வரை தாய்ப் பாலைக் குடித்தே வளரும்.

ஒட்டைச் சிவிங்கியின் இனம் படிப்படியாகக் குறைந்து வருவதால் அப்பாவிப் பிராணியான ஒட்டைச் சிவிங்கியை வேட்டையாடுவதைப் பல அரசாங்கங்கள் தடை செய்துள்ளன. - அந்தோனி பேசில்



'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்பது தர்மமிகு தமிழகத்தின் தாரக மந்திரங்களில் ஒன்று. ஆனல் வசந்தாவின் தாயார், 'பள்ளி திறந்தால் வயிற்றுக்கு வழி பிறக்கும்! மகளுக்கு வாழ்வு கிடைக்கும்' என்று ஆண்டாண்டுதோறும் எண்ணி எண்ணி — எதிர் பார்த்து ஏமாந்து கொண்டிருந்தாள்.

வசந்தாவுக்கு வயது இருபத்தெட்டாகிறது. அவள் ஆசிரியைப் பயிற்சியை முடித்து ஆறுண்டுகள் ஓடி விட்டன. ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் பள்ளிகூடம் திறக்கும் போதெல்லாம் வசந்தாவுக்கு வேலை கிடைத்துவிடும் போலிருக்கும். ஆனல் கடைசியில் ஏமாற்றத்தைச் சுமந்து கொண்டு கனத்த இதயத்தோடு அவள் வீடு வந்து சேருவாள்.

படம்

மங்கையராய்ப் பிறப்பதற்கே...

வனமாலிகை



அன்றைக்கும் அவள் ஒரு தனியார் பள்ளி நிர்வாகியைச் சந்தித்துவிட்டு வந்தாள். மகளின் முகத்தைப் பார்த்ததும் தாயாரின் முகம் வாடியது. அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா? தாயின் இதயத்தைப் பிளந்து கொண்டு ஏக்கப் பெருமூச்சு வெடித்துச் சிதறியது.

''ஒரு டீச்சருக்கு இப்போதுதான் கலியாணமாயிருக்காம். அந்த டீச்சர் ஆறுமாதம் 'லீவு' போட்டிருக்காங்க. பள்ளிக்கு ஐந்நூறு ரூபாய் நன்கொடை கொடுத்தால் அந்த 'லீவு' இடத்தில் நியமிப்பார்களாம்'' என்றுள் வசந்தா.

தாயார் பதில் பேசவில்லை — இல்லாமை அவள் வாயை மூடிவிட்டது.

வசந்தாவுக்குப் பத்து வயதாகும்போது அவள் தந்தை விஷக் காய்ச்சலில் இறந்து போனர். இரண்டு கறவை மாடுகளை வைத்து — தாயார் ஏதோ மாயஜால வித்தைகள் செய்து வசந்தாவைப் படிக்க வைத்தாள். வாழ்க்கைத் தேரையும் இழுத்தாள்.

கறவை மாடுகளே அவளுக்குப் படியளக்கும் பரமசிவன்!

வசந்தா பத்தாவது படித்து 'செகண்டரி கிரேடு' ஆசிரியைப் பயிற்சியையும் முடித்து விட்டாள் என்ற தகுதி மட்டும் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போதுமா? வேலை கிடைத்து, கையில் சில ஆயிரம் ரூபாய்கள் இருந்தால் தகுதியான மாப்பிள்ளை தேடலாம்.

ஒரு நாள் தபால் நிலையம் போய் விட்டுத் திரும்பும் வழியில், வசந்தா தன்னுடன் படித்த கோமதியைச் சந்தித்தாள். பசையான குடும்பத்தில் பிறந்த அவள், பட்டணத்தில் வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப்



பட்டு, இன்று குழந்தைக்குத் தாயார் — முத்தை ஏந்திய சிப்பியாக வயிறு காட்சி அளித்தது.

தோழிகள் இருவரும் கலகலப்பாகப் பேசிக் கொண்டார்கள்.

''ஏண்டி வசந்தா! உனக்கு எப்போ கல்யாணம் ?'' என்று கேட்டாள் கோமதி.

'' அது நடக்கிறபோது தானுக நடக்கும் '' என்ருள்.

'' இழுவியானை பிறகா ?''

வசந்தா பதில் சொல்லவில்லே. விரக்தியாகச் சிரித்துக் கொண்டாள்.

'' நம்ம கஸ்தூரிக்கு வேலே கிடைச்சுட்டுதாமே ?'' என்ருள் கோமதி.

''ஆமாம் !''

''அவளும் உன்கூடத்தானே 'டிரெயினிங்' படித்தாள் ?''

''ம்.....''

''அவளுக்கு வயதும் உன்னைவிடக் குறைவு தானே ?''

''அதனுல் என்ன? அவள் அப்பாவுக்கு அரசியல்வாதிகளின் தொடர்பு உண்டு. படித்து முடித்ததும் சர்க்கார் பள்ளிக்கூடத்திலே வேலேயும் கிடைத்துவிட்டது. எனக்குச் சிபாரிசு செய்ய யார் இருக்கிருர்கள் ?'' — அவள் குரல் கம்மியது.

''யாரையாவது பிடித்து.....''

'' யார்கிட்டே போனுலும் ஐந்நூறு இருக்கா, ஆயிரம் இருக்கான்னு கேட்கிருங்க. பணத்துக்கு நாங்க எங்கே போவோம் ?''

''சரிதான். இந்தக் காலத்திலே பணம் இருந்தால் எல்லாக் காரியங்களும் தானுக நடக்கும்.''

'' எல்லாம் தெய்வ சித்தம்'' என்று பேச்சுக்குப் புள்ளி வைத்தாள் அவள்.

வசந்தா நல்ல சிவப்பு இல்லேயென்ருலும் அழகி. தங்கமான குணம். எல்லாவற்றுக்கும் மேலாக வறுமை என்னும் பேய் அவர்கள் வீட்டில் கோலோச்சிக் கொண்டிருந்தது. மாற்றுப் புடவை வாங்குவதற்கே வக்கில்லே. இந்த லட்சணத்தில் மாப்பிள்ளே தேட முடியுமா ? அல்லது அதைப் பற்றி நினேத்துத் தான் பார்க்க முடியுமா ?

பஞ்சாயத்துத் தேர்தல் நடந்தது. அப்போது சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் தம் கட்சி வேட்பாளருக்காக வீடு வீடாக வோட்டுக் கேட்டார்.

வசந்தாவின் தாயாரும் அவரிடம் தன் குறையை முறையிட்டாள்.

'' தேர்தல் முடிந்ததும் என்னே வந்து பாருங்க. உங்க மகளுக்கு எப்படியும் வேலே வாங்கிக் கொடுத்து விடுகிறேன்'' என்ருர்.

அந்த அப்பாவிப் பெண்ணும் இரு கைகளேயும் தலேக்கு மேல் குவித்து வணங்கிருள்.

தேர்தல் முடிந்தது.

வசந்தாவின் தாயார் அந்தச் சட்டமன்ற உறுப்பினரைத் தேடி ஏழு மைல் நடந்து வந்தாள். படைகள் சூழச் சட்டமன்ற உறுப்பினர் நடுவில் உட்கார்ந்திருந்தார்.

அவர் வெளியே வரும்போது அவளேப் பார்த்தும் பார்க்காதது போலப் போய்விட்டார். அவளும் துணிவாக அவரிடம் செல்லவில்லே. காரில் ஏறி எங்கோ புறப்பட்டு விட்டார்.

அரண்மனே போன்ற அந்த வீட்டினுள் கால் வைக்கவும் அவளுக்குக் கூச்சமாக இருந்தது. மர நிழலில் உட்கார்ந்து கொண்டாள்.

நடுப்பகல் திரும்பி வந்தார். பசி கொடுத்த தைரியத்தால் அவள், ''ஐயா!'' என்ருள். அவர் திரும்பிப் பார்த்தார்.

'' வந்த காரியத்தைச் சொல்லு.''

''என் மகள் வேலே விஷயமா ?'' — தேர்தலில் அவரிடம் சொன்னதை நினேவூட்டினுள்.

'' வேலே கொடுக்கிறது நானு? அதுக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இருக்காங்க, சட்டமிருக்கு. என்னுலே உனக்கு எதுவும் செய்ய முடியாது.''

''இல்லே, நீங்க மனசு வைச்சா....''

''உன் வேலேயைப் பாரு. அதுக்கெல்லாம் எனக்கு இப்போ நேரமில்லே'' என்றவர் வீட்டினுள் போய் விட்டார்.

அவள் கண்கள் குளமாயின.

சேலேத் தலேப்பால் கண்களேத் துடைத்துக் கொண்டாள். அடுத்த வீட்டில் ஒரு செம்புத் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டுக் கிராமத்தை நோக்கி நடந்தாள்.

பெரிய மனிதரின் 'பெருந்தன்மை' அவள் இதயத்தில் நிரம்பி வடிந்தது.

வசந்தாவின் ஆசைக் கனவுகள் ஒவ்வொன்ருக வாடி உதிரத் தொடங்கின. ஏழையாகப் பிறந்து படித்துவிட்ட குற்றத்துக்காகப் படிக்காத ஏழை ஒருவனே மணந்துகொள்ள அவள் மனம் சம்மதிக்கவில்லே. படித்தவர்களும் படித்த வெறும் பெண்ணேக் கட்டிக் கொள்ள விரும்பவில்லே.

''அம்மா! நம்ம ஜில்லாவிலே மூந்நூறு ஆசிரியர்களுக்கு வேலே கொடுக்கப் போகிருங்களாம். பேப்பரிலே போட்டிருக்காங்களாம்'' என்ருள் வசந்தா.

''கடவுள் இனியாவது கண்ணேத் திறந்து பார்க்கட்டும்.''

வசந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிக்குக் குறித்த காலத்தில் விண்ணப்பம் அனுப்பினுள்.

நேர்முகத் தேர்வு நடந்தது.

''உனக்குப் பாடத் தெரியுமா ?'' என்று கேட்டார் அதிகாரி.

''சுமாராகப் பாடுவேன், சார் !'' என்ருள் வசந்தா.

'' சரி, ஒரு பாட்டுப் பாடு.''

கவிமணியின் ' மங்கையராய்ப் பிறப்பதற்கே....'' என்ற கவிதையை உருக்கமாகப் பாடினுள். அதிகாரி தம் மனத்தைக் கவிதையில் ஈடுபாடு செய்தார்.

'' அழகாகப் பாடுகிருயே அம்மா. பள்ளிப் பிள்ளேகளுக்கும் இப்படிப் பாடிக் காட்டினுல் தான் மிகவும் நன்ருக இருக்கும்'' என்றவர் அவளது குடும்பத்தைப் பற்றிக் கேட்டார்.

அவளும் சிலவற்றை மறைத்து, சொல்ல வேண்டியதைச் சொன்னுள்.

அதிகாரியின் கனிவான பேச்சும், ஒரு தந்தைக்குரிய ஸ்தானத்திலிருந்து அவர் கேட்ட முறைகளும் அவளுக்கு எப்படியும் வேலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கையை ஊட்டியது.

"ஆயிரம் பேர்களுக்கு மேல் பேட்டிக்கு வருவார்களாம். எப்படியும் எனக்கு வேலை கிடைத்துவிடும்" என்று தாயாரிடம் கூறினாள்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு நாளும் அவள் வேலைக்கான உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு மாதம் ஓடி விட்டது.

அடுத்த கிராமத்திலுள்ள செல்லப்பன் என்பவனுக்கு வேலையில் சேர உத்தரவு வந்து விட்டது என்ற செய்தி அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

'ஒருவேளை நமக்கு வந்த உத்தரவு தபாலில் தவறி இருக்குமோ ?' என்று எண்ணத் தொடங்கினாள். அன்று இரவு முழுதும் அவள் உறங்கவில்லை.

மறு நாள் காலையில் தபால் நிலையம் சென்று விசாரித்தாள். அப்படியோர் உத்தரவு வரவில்லை என்றார்கள். எதற்கும் சம்பந்தப் பட்ட அதிகாரியை நேரில் போய்ப் பார்த்து விடுவதென முடிவு செய்தாள்.

அதிகாரி ஊரில் இல்லை. மானேஜரைப் பார்த்தாள்.

" இப்போது கொஞ்ச பேருக்குத்தான் 'ஆர்டர்' அனுப்பியிருக்கோம். இன்னும் இரண்டு வாரங்களில் மற்றவர்களுக்கும் ஆர்டர் அனுப்பிவிடுவோம்" என்றார்.

" சார்! தேர்வுப் பட்டியலில் என் பெயர் இருக்கிறதா என்று பார்த்துக் கூற முடியுமா ?"

அவள் அவசரம் அவளுக்கு.

" அதெல்லாம் அதிகாரி சம்பந்தப்பட்ட விஷயம். அந்த 'பைல்' அவரிடமே இருக்கிறது."

வசந்தாவின் கனவுகள் வாடினாலும் இன்னும் உதிரவில்லை. அது நினைவாகவும் வாய்ப்பு இருக்கிறது.

இன்னும் ஒரு வருடத்தில் அவள் வேலையில் சேரவில்லையானாலும், அதன் பிறகு அரசாங்க வேலைக்குப் போக முடியாது. அரசாங்க வேலைக்குரிய வயது வரம்பை அவள் கடந்து விடுவாள்.

நாட்கள் ஆமையாக நகர்ந்தன.

அவளது எதிர்கால வாழ்வுக்குப் பச்சைக் கொடி காட்டும் தபாலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

'நாளைக்கு வரும்' என்று தன் மனத்துக்கு அவளே ஆறுதல் கூறிக் கொண்டாள்.

நாளை நாளை என்று எதிர்பார்த்து மாதங்கள் மூன்று கடந்து விட்டன.

ஆசிரியர்களின் நியமனம் நடந்துவிட்டதென்ற செய்தி அவள் தலையில் இடியாக விழுந்தது.

அவளது எண்ணங்கள் சுக்கல் சுக்கலாகச் சிதறி விட்டன.

அதிகாரிக்கு என்ன இக்கட்டான நிலைமை ஏற்பட்டதோ ?

இதயத்தில் பூத்துக் குலுங்கும் இல்லற இன்பங்களைச் சுவைக்க, ஒருவனைக் கைப்பிடிக்க அவள் பெண் உள்ளம் ஏங்கித் தவித்தது. வேலை கிடைத்து விட்டால் எப்படியும் ஒரு வருடத்தில் மனத்துக்குப் பிடித்த ஒருவனை மணந்து கொண்டு குடும்பம் நடத்த அவள் எத்தனையோ கோட்டைகள் கட்டினாள். அவைகள் அனைத்தையும் ஏமாற்றம் என்ற பெருவெள்ளம் அடித்துச் சென்று விட்டது.

இரண்டு நாட்களாக அவள் யாரிடமும் பேசவில்லை.... சாப்பிடவுமில்லை.

'எனக்கு வேலை கிடைக்காதா ?... எனக்கு வேலையே கிடைக்காதா?' என்று சில வேளைகளில் தனக்குத் தானே கேட்டுக் கொள்வாள்.

அன்றைக்குத் தாயார் வெளியே போய் விட்டு வீட்டுக்குத் திரும்பும் போது திண்ணையில் வகுப்பு நடந்து கொண்டிருந்தது.

வசந்தாவின் முன்னால், வீட்டிலுள்ள பானைகள், சட்டிகள் உடைந்த நாற்காலிகள் எல்லாம் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அவள் கையில் கரித் துண்டு ஒன்று இருந்தது.

சுவரில் 'ட' என்று எழுதிவிட்டு, தன் முன் உட்கார்ந்திருக்கும் 'சிறுவர்'களைப் பார்த்து, " 'ட' " என்றாள்.

"ம்... நீங்களும் சொல்லுங்கள் 'ட' !"

"டேய் கோவிந்த், அடுத்த பையன் தலையில் என்டா குட்டுகிறாய்? நீ பெரிய வீட்டுப் பிள்ளை என்கிற நினைப்பா? அதெல்லாம் இங்கே கூடாது.... ம்... மரியாதையா நல்ல வனா இருக்கணும், தெரிஞ்சுதா ?"

அவள் தன் வகுப்பறையை ஒரு தடவை நோட்டமிட்டாள். பிறகு, "நான் எழுதுவதையெல்லாம் கவனித்துக் கொள்ளுங்கள்" என்றவள், சுவரில் கரித் துண்டால் 'படம்' என்று எழுதினாள். பிறகு ப...ட...ம்..." என்று ஒவ்வொரு எழுத்தாக வாசித்தாள்.

முற்றத்தில் நின்று கதறியழுத தாயாரின் மீது வசந்தாவின் பார்வை சென்றது.

"ஏம்மா, அழறீங்க? உங்க பையன் காலையிலே சாப்பிடாமே வந்துட்டானா என்ன ? உங்க பையன் யாரு? அதோ கடைசியில் இருக்கிறவனா ?" என்று கேட்டு ஓர் ஓரமாக இருக்கும் மண் பானையைச் சுட்டிக் காட்டினாள்.

"ஐயோ, கடவுளே!.... என் மகள்.... என் மகள்....." தாயால் அதற்குமேல் பேச முடியவில்லை. திண்ணையில் அப்படியே சாய்ந்து விட்டாள்.


"என்டா, கூச்சல் போடுகிறீங்க? டீச்சர் யார்கிட்டேயாவது பேசிட்டிருந்தா இப்படித் தான் சத்தம் போடுறதா ?"

"இப்போ மணியடிக்கும். எல்லாரும் வெளியே போயிட்டு அடுத்த மணியடிக்கும் போது வரிசையாக வந்து உட்காருங்க" என்றவள் தன் பக்கத்தில் கிடந்த மரத் துண்டால் வெங்கலப் பானையின் மீது தட்டினாள். அது ஓசையை எழுப்பியது.

"அப்பாடா, நம்ம கஷ்டமெல்லாம் தீர்ந்து போச்சு, இனிமே சீக்கிரமா கலியாணம் பண்ணிட்டு, அஞ்சாறு குழந்தைகளைப் பெத்தெடுக்கணும்" என்றவள் பாடம் சொல்லிக் கொடுத்த களைப்பால் கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்துக் கொண்டாள்.

மகளின் வாழ்க்கைக் கனவுகள் மலர்வதைக் காணத் துடித்த தாயாரின் இதயம் நின்று விட்டது.

உருக்கு உற்பத்தி ஓர் அருமையான கலை



புத்தம் புதிய உத்திகள், கருத்துக்கள், பற்பல பரிசோதனைகளின் விளைவாக, சாங்கல் இரும்புக் கனியை வெவ்வேறு தேவைகளுக்கு ஏற்ப விதவிதமான உருக்கு வகைகளாக உருவாக்கித் தருகிறோம். உதாரணமாக:

பாலங்களுக்கு ஏற்ற உறுதியான 'ஹை டென்ஸைல்' உருக்கு. கப்பல், ரயில் வாகன், டிராலி பஸ் முதலியவற்றுக்கு ஏற்ற எளிதாய் 'வெல்ட்' செய்ய வல்ல துருப்பிடிக்காத உருக்கு.

பாதுகாப்புத் துறைக்கு ஏற்ற தோட்டா துளைக்க இயலாத கவசத் தகடு மற்றும் 'ஹை ஸ்பீட்' உருக்கு.

விமானத்திற்கு அவசியமான க்ரோம் மாலிப்டினம் உருக்கு.


ரம்பம், ரேஸர் பிளேடுகளுக்கு ஏற்ற தரமான 'டூல்' உருக்கு.

அண்மையில், அமெரிக்காவின் தேவைகளுக்கு ஏற்ப, தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்ட உருக்குப் பாளங்கள்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, டாடா ஸ்டீலின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பரிசோதனைக் கூடங்கள் நம் நாட்டில் தனிப்பட்ட உருக்கை உருவாக்குவதில் முன்னோடிகளாகத் திகழ்கின்றன.

டாடா ஸ்டீல்

பட்டுப் போன்ற மேனி! பெண்மையின் அணி!



ஆம்! தேவையற்ற இடங்களிலுள்ள உரோமத்தை அகற்ற உங்களுக்கு உதவட்டும் ல்யூர் கோல்ட் வாக்ஸ.

கை, கால், போன்ற அவயவங்களில் உள்ள உரோமம் உங்கள் எழிலை பாதிக்கிறது. வழவழப்பான, பட்டுப் போன்ற மேனி மாதருக்கு தனி அணி அல்லவா? உரோமமற்ற பட்டு மேனியை உங்களுக்கு வழங்க உதவுகிறது ல்யூர் கோல்ட் வாக்ஸ் ரிமூவர். ரேசர் க்ரீம் இவற்றல் உரோமத்தை அடியோடு அகற்ற முடியாது. இதனல் தோலும் மென்மையிழந்து விடும். சுலபமாக பயன்படுத்தவல்ல ல்யூர் கோல்ட் வாக்ஸை தொடர்ந்து உபயோகித்தால், தேவையற்ற இடங்களிலுள்ள உரோமம் அறவே அகன்று மேனிக்கு மென்மையும் பொலிவும் ஏற்படும்.

பட்டுப போன்ற மேனி பெற உறுதுணை…ல்யூர் கோல்ட் வாக்ஸ் ரிமூவர்.



டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்: தென் இந்தியா
டி.டி. கிரிஷ்ணமாச்சாரி & கோ



★ இக் குறியிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

நான் ஆயிரம்விளக்குப் பகுதியில் வசிப்பவன். எனக்கு இப்பொழுது வயது 22. ஆகையால் நான் எனது புது வோட்டுக்கு மனுக் கொடுத்திருந்தேன். ஆனால் எனக்கு ஓட்டு இல்லை என அறிவித்தார்கள்.

எம். ஜி. ஆர். நகரில் — அதாவது சைதாப்பேட்டையில் சேர்க்கப்படுகிற அசோக் நகர்ப் பகுதியில் வசிக்கும் பதினைந்து வயதுள்ள சிறுவன் என்னிடம் வந்து 'நான் வோட்டுப் போட்டேனே' என்று வோட்டுப் போட்ட அறிகுறியுள்ள விரலை என்னிடம் காண்பித்தான்.

இருபத்திரண்டு வயதான எனக்கு உரியபடி மனு எழுதிக் கொடுத்தும் வோட்டு இல்லை. 'பதினைந்து வயதுள்ள ஒருவன் வோட்டுப் போட்டான் என்றால் விநோதமாய் இல்லையா? இப்படி ஒன்றிரண்டு அல்ல; பல்லாயிரக் கணக்கில் தவறுகள் நிகழ்ந்துள்ளன வாக்காளர் பட்டியலில். யார் பொறுப்பு? ஏன் நடந்தது?

சென்னை-35
4—3—71 ஏ. இ. மூர்த்தி

சென்னை நகரில் தி.மு.க.வினர் 1—3—71 அன்று செய்த அராஜகங்கள் ஒன்றிரண்டல்ல. பலப்பல. அவற்றில் ஒருசிலவே 2—3—71 'தினமணி'யில் வெளியாகியுள்ளன. ஆனால் வெளிவராதவையே அதிகம். குறிப்பாக பாஷ்யம் என்ற ஸ்தாபன காங்கிரஸ் கட்சிக்காரர் சிவனே என்று ஒரு வாக்குச் சாவடியில் உட்கார்ந்திருந்தபோது அவரைத் தி. மு. க.வினர் அடித்து நொறுக்கினராம். இதுபோல் பலப்பல. ஆளும் கட்சியே இவ்வாறு வெறிக்கு வெறிபிடித்த செயலைப் போல் கண்ட இடங்களில் வன்முறையைக் கடைப்பிடித்தல் நியாயமா? வேலியே பயிரை மேய்ந்த கதை போல்தான்.

சென்னை—1
3—3—71 எம். ராமமூர்த்தி

"அன்பளிப்புக் கல்கி"யாகிய "ரோம் முதல் சிங்கப்பூர் வரை" என்ற கட்டுரையில் அதன் ஆசிரியர் கே. எம். ஜார்ஜ் வெளிநாட்டில் 'பேங்க் ஆஃப் அமெரிக்கா'வில் தமக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தமது கணக்கிலிருந்து 500 டாலர் தொகையை வேறொருவர் கள்ளக் கையொப்பமிட்டு 'செக்' எழுதிக் கொடுத்துப் பெற்றுக் கொண்டு போய்விட்டதாகவும், குற்றவாளி பிடிபடவில்லை யானாலும் பாங்க் நிர்வாகிகள் அவர் இழந்த 500 டாலர் தொகையை நான்கு நாட்களுக்குள் ஈடு செய்து விட்டதாகவும் கூறி, அவரே வியப்புத் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் நமது நாட்டிலோ மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் உள்ள தபால் தந்தி இலாகாவின் 'திறமையான' சேவைக்கு ஓர் உதாரணமாக எனது துயரம் தரும் ஓர் அனுபவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் மாணவர்களுடன் சென்ற கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது வடநாட்டுச் சுற்றுலா சென்றிருந்தேன். அப்போது என் பெயருக்குக் கல்கத்தா நகரில் ஒரு விலாசத்துக்கு ரூ. 300க்கும், ரூ. 250க்கும் (மொத்தம் ரூ. 550) 2—1—71 அன்று இரண்டு தந்தி மணியார்டர்கள் என் குடும்பத்தாரால் அனுப்பப்பட்டன. ஆனால் அவற்றை வேறு யாருக்கோ தபால் இலாகாவினர் 5—1—71 அன்று பட்டுவாடா செய்து விட்டனர். ரூ. 250 அனுப்பியதற்கு இதுவரை தபாலில் ரசீது வரவில்லை. வரப்பெற்ற 300 ரூபாய் ரசீதில் கள்ளக் கையெழுத்து போடப் பட்டிருக்கிறது. விலாசதாரர் ஊருக்குப் புதியவராயிருந்தும் கூட எந்தச் சாட்சிக் கையெழுத்தும் வாங்கப்படவில்லை.

இந்த மோசடி குறித்து அதிகாரிகளுக்கு உடனே புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது நடந்து இரண்டு மாதங்களாகியும் இது வரை எந்த விதமான முடிவும் தெரியவில்லை. என் பணம் போனது போனதுதானா?

குடியேற்றம்,
1—3—71 பி. வி. நாகராஜ ராவ்

★ **இ**ன்று காலை நான் என் தோழியின் இல்லத்துக்குச் சென்றிருந்தேன். நேற்று நடந்த தேர்தல் பற்றிய பேச்சு வந்தது. "நீங்கள் யாருக்கு 'வோட்' போட்டீர்கள்?" என்று என் தோழியின் தாயாரைக் கேட்டேன் நான். "உள்ளே நுழைந்தவுடன் ஜகஜ்ஜோதியாக விளக்கு (விளக்குச் சின்னம்) கண்ணில் பட்டது. உடனே அதற்குப் போட்டுவிட்டேன்!" என்றார் அவர். இதே கேள்வியை நான் மற்றொருவரிடம் கேட்டேன். அதற்கு அவர் அளித்த பதில்: "எங்கள் வீட்டுக்கு அடிக்கடி ஒரு பையன் வந்து வாக்களிக்க என்னைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான். பாவம்! எனக்காக எத்தனை முறை அலைந்தான் தெரியுமா? அதனால் அவன் குறிப்பிட்ட 'செடி' சின்னத்துக்கே வோட்டைப் போட்டுவிட்டேன்!"

தங்கள் வாக்குகளின் மதிப்பை உணர்ந்து தகுதி வாய்ந்தவர்களுக்குத் தங்கள் வாக்குகளை அளிக்கும் திறமையைப் பொதுமக்கள் பெறும்வரை நம் நாட்டில் **ஜனநாயகம் நற்பயனை அளிக்கும் விதத்தில் தழைக்காது.**

செகந்திராபாத்-26
6—3—71 கே. ஜானகி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon